ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணு.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6 மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ கார்த்திகை ௴ 21௳ (6—12—1931) | மலர் 32

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவை களைக் கொடுத்து நாம்புகளுக்குப் பலத்தைத் தரும். சிறுக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன ஸ்கலிதம் இவை களைக் குணப்படுத்தும்.

1-நெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0.
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-8-0.
2-நெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ. 1-8-0.
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-6-0.

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய் நாட்டு நண்பர்கள் கீழ்க்கண்ட எங்கள் கம்பெனிசோல் ஏஜண்டு அவர்களுக்கு எழுதி எல்லா விபரங்களும் தெரிந்து கொள்ளவும்.

S. S., F. M. S., J. B.,

மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வெள்ளைச்சாமி,

நெ. 616 டத்தோகிரமட் ரோடு, பினங்கு. S. S.

புதிய சந்தாதாரர்களுக்கு

இனம்!

"குடி [illegible]க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூ. யை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணு விலையுள்ள குடி அரசு வெளியீட்டுப்புத்தகங்கள் இனமாகக் கொடுக்கப்படும்.

வெளியீட்டாளர் "குடி அரசு" ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A சௌந்திர பாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனுர், 9. குருசாமி குஞ்சிதம், 10, நீலாவதிராம சுப்பிரமணியம் 11. அலோசனு, பொன்னம்பலனுர், 12. சொரந்தம். ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0வீதம் கமிஷன்கழித்துக் கொடுக்கப்படும்.

தனி காப்பி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co., No. 3 ஒப்பணக்காரத்தெரு, ஈரோடு.

பலமுள்ள வீரபுருடனுகை,

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மனமொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையேன வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்த காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

இரத்தவிர்த்தி, தேகபலம், தாதுபுஷ்டிக்கு

மனோரஞ்சித லேகியம்

தங்கபஸ்பம்

சேர்த்துச் சாப்பிடுங்கள்.

சகலவித உஷ்ணத்தையும், இரத்தக் கொதிப்பையும் அடக்கி நல்ல இரத்தத்தை ஏராளமாய்ப் பெருக்கித் தேக புஷ்டி, பலம், ஆண்மை வீரியவிர்த்தி, இந்திரிய விளைவு, தாதுக்கட்டு, போக இச்சை முதலியவைகளை உண்டுபண்ணி அடங்காத இன்பத்தைக் கொடுக்கும். திடகாத்திரம், மூளை பலம், ஞாபகசக்தி, அறிவு வளர்ச்சி, மனோவலிமையையும் உண்டாக்கும்.

அதிக ருசிகரமுள்ளது. சிறுவர் முதல் ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். மாணுக்கர்களுக்கு மிகவும் அவசியமானது. எலும்பை உருக்கும் உஷ்ணத்தை அடக்கி இரத்த விர்த்தியை உண்டுபண்ணி தேகத்தை வளர்க்கும். தனி லேகியமும் சாப்பிடலாம்.

30 வேளை லேகியம் ரூபா 3. தங்கபஸ்பம் 30 வேளை ரூபா 7.

நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொக்கிருமல், காசமாகவும், நீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு,சூதகக்கட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள்பாலியதேஜசுடன்,விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

சுயநாட்டுப் பொருளிருக்க அயல்நாட்டுப் பொருள் ஏன்?

ஆனந்த டூத் பேஸ்ட்

என்னும்

இந்தியன் டூத் பேஸ்ட்.

பண்டிட் ஆனந்தம் அவர்கள் நமது நாட்டு வைத்தியத்தொழிலை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமெனும் பேரவாவினால் இருபது வருஷங்களுக்கு முன் நமது நாட்டு பொருள்களை ஆராய்ந்து மேல் நாட்டாருடைய டூத் பேஸ்ட்களுக்கு மேலான குணத்தோடு தயார் செய்து ராயல் டூத் பேஸ்ட் என்னும் பெயரால் இந்தியாவில் முதன் முதல் 20 வருஷங்களுக்கு முன் வெளிப்படுத்தினார்கள். இதனைப் பல பெரியோர்களும், அரசர்களும், பொது ஜனங்களும் உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், பொருட்காட்சிகளில் மெடல்களும் கொடுத்துள்ளார்கள.

ஒரு டஜன் ஆனந்த டூத் பேஸ்டு டியூப் ரூ. 4—0—0 தபாற் செலவு வேறு. ஏஜண்டுகள் தேவை.

தமிழ் வைத்தியசாலை,
221. தங்கசாலை வீதி, சென்னை.

தந்தி விலாசம். மருத்துவன். டெலிபோன் நெம்பர் 2584.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India. Ltd., Bombay No. 10.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசேந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

God and the Universe.

கடவுளும், பிரபஞ்சமும்.

கடவுளென்றால் என்ன?

(தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L.)

III.

சென்ற இரண்டு கட்டுரைகளில் பிரபஞ்சத்தில் கடவுளுக்கு இடமுண்டா? என்ற சங்கைக்கு சுருக்கமான விடையும், கடவுளென்ற பதத்திற்கு, தத்துவவேதிகளும், மதஸ்தரும், பக்தர்களும், என்ன அர்த்தத்தைக் குறிக்கின்றார்கள் என்பதையும் சற்று விபரமாக எடுத்துரைத்தோம். இந்தக்கட்டுரையில் "கடவுளென்றால் என்ன"? என்று விஞ்ஞான முகத்தே விசாரித்தறிவோம்.

அப்ரகடாப்ரா Abracadabra) அல்லது, காடலெப்ரா (Cadalabra) என்று ஆங்கில பாஷையில் சொல்லும் இரண்டு வார்த்தைகள் உள. இந்த இரண்டு சொற்களைப் போன்றதுவே கடவுளென்ற பதமுமெனவறிக. அதாவது, எந்தப்பொருளையும் குறிக்காது, வெறுஞ் சொல்லாக முடியும் சொற்களில், கடவுள் என்ற சொல்லும் ஒன்றென்பதாகும்.

உலகில் மனிதன் தோன்றுவதற்குமுந்தி, பல சீவர்கள்-புல், பூண்டு, செடி, விருக்ஷம், புழு, மீன், ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய பிராணிகளும், பல கோடி காலம் வாழ்ந்து வந்தன. இதனை விபரமாக இனிவரும் கட்டுரைகளில் எழுதுவோம். தற்போது நாம் கவனிக்கவேண்டியதென்னவெனில், மனிதர் முந்தி வாழ்ந்த தாவரம், பிராணி வகையராக்களின், தற்போது வாழும் தாவரங்களும் பிராணிகளும சந்ததியாராதலால், இவைகளில், கடவுளென்ற பதங்கிடையா. பல கோடி பிராணிகள் சத்தமிடுவதைக்கேட்டு வருகின்றோம். அவற்றுள் ஒரு பிராணியாகிலும், கடவுளென்ற பதத்தை உச்சரிப்பதைக் கேட்டிலேம். ஆனால், மனிதன் ஒருவன் தான் கடவுளென்ற பதத்தைச் சொல்லுகின்றான். அவன் சமூகத்திலும், பிறந்த குழந்தைகள் கடவுள் என்ற பதத்தைச் சொல்வதாகவும் காணோம். குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்தாலொழிய அவை கடவுளென்ற வார்த்தையைச் சொல்லா. நாம் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கும் சொற்களில், கடவுளென்ற பதமும் ஒன்று. ஆனால் கடவுளென்ற பதத்திற்கும் மற்ற பதங்களுக்கும், ஒரு வித்தியாசமுண்டு. அதாவது மற்ற பதங்கள், ஏதாகிலும் பொருளைக்காட்டிக் கற்பிக்கப்படும் சொற்கள். கடவுளென்ற பதமோ, பழக்கச் சொல்லேயொழிய, பொருளைக் காட்டி கற்றுக்கொடுத்த சொல்லாகாது. வீட்டிலும், கோயில்களிலும், முதியோர் படங்களைக் கொண்டும், விக்கிரகங்களைக்கொண்டும், "கடவுளே" என்று வணங்குங்காலங்களிலும், மத நூல்களை வாசிக்கும் காலையிலும், கஷ்ட காலங்களில் "கடவுளே" என்று அழைக்கும் போதும், இவர்கள் காதில் விழுஞ்சொற்களில் இதுவொன்றாகும். சிறு வயதிலேயே இந்த வார்த்தையை அடிக்கடி உபயோகப்படுத்தும் பழக்கமாய் விட்டபடியால், அதுவே பழக்கமாய் விட்டது. இதனை விசாரிப்பதும் கிடையாது. கடவுளென்றால் என்னவென்று சில குழந்தைகள் கேட்கின்றன. "உனக்குத் தெரியாது. பெரியவனாய் விட்டபோது உனக்குத்தெரியுமென்று" தாய் தகப்பன்மாரும், புரோகிதர் முதலியோரும் சொல்லிவிடுகின்றார்கள். பெரியோர்கள் கல்லை வணங்கும்போதும் குழந்தைகளும் கூடவே வணங்குகின்றன. கற்சிலைகளுக்கு தூபதீபநைவேதனம்செய்யும்போதும், குழந்தைகளும் செய்கின்றன. "ஆகா" என்று தாய் தகப்பன் சொல்லும் போது, அவைகளும், கிளிப்பிள்ளைகளைப்போல் சொல்லுகின்றன. குழந்தைப்பருவத்தில், எதைச்சொல்லச் சொன்னாலும் சொல்லுகின்றோம். அந்தக்காலங்களில், சொல்லிக்கொடுத்த பதங்களில் "கடவுள்" என்ற பதம் அடுத்தடுத்துசொல்லப்படுகின்றபடியால், இந்தப் பதம் வாயில் அழுத்தமாய்ப்பழகிவிடுகின்றது. தொட்டில்பழக்கவாசனையாலேயே கடவுளென்ற பதம் தொண்டையில் தடித்துவிட்டது. அக்கால முதல், பல வருஷங்களாக நமக்குள் நடிப்பேறிய நிமித்தத்தால் தான் "கடவுள்" என்ற சொல்லுக்குள்ள மகத்துவமெல்லாம் இருக்கின்றதெனவறிக.

மனிதனுக்குப் பழக்கமே விசேஷம், தெய்வமென்றுசொல்வதும் பழக்கம். அந்த வார்த்தையைக் கேட்டு வணங்குவதும் பழக்கம். தூப தீபங்கள் ஏத்துவதும் பழக்கம், தெய்வங்களுக்கென கோயில், குளங்கள் கட்டுவதும் பழக்கமேயாகும்.

மதங்களில் அபிமானமுள்ளவர்கள், இந்த பழக்க வாசனையால், கடவுள் என்ற பதம் எதைக்குறிக்கின்றது என்று விசாரிப்பதுமில்லை. அந்த வார்த்தையை விசாரிக்கப்புகுந்தவர்களை "நாஸ்திகர்" "சண்டாளர்" என்று ஏளனம் செய்கின்றார்கள். பக்தர்களில், சிலர் விவேகிகளாயிருக்கின்றவர்களை சந்தேகி என்று கண்டிக்கின்றார்கள். பழக்க வார்த்தையை எவ்விதம் மறுப்பதென்று, மதஸ்தர், பயப்படுவதாகத்தெரிகிறது.

இந்த பதம், நாம் பேசும் எல்லா வார்த்தைகளைப் பார்க்கிலும், அதிக வைராக்கியம் பெற்றுளது. மதவைராக்கியமென்பதும் இந்தப்பதத்தைக் குறித்ததே. இந்த வார்த்தையைப்பற்றி எழுதாத நூல்களில்லை. தர்க்கிக்காத வார்த்தையில்லை. தத்துவம் பேசாத பேச்சில்லை. இந்த சொல்லைக் குறித்து அடைந்திராத மூடபக்தியில்லை. இவ்வளவு மகத்துவம் கொண்டது இந்த பதம். இதற்குக் காரணமுண்டு. முதலாவது, இந்தச் சொல், பண்டைக்காலத்து பழக்கச் சொல், இரண்டாவது, இந்த சொல்லைச் சொல்லிக்கொண்டு பிழைக்கின்றவர்கள் அநந்தம். இந்த சொல்லுக்காக அநேகஸ்தாபனங்கள் உண்டாயிருக்கின்றன. இந்த ஸ்தாபன மூலமாக, பலருக்கு சீவனமுண்டு. இவ்வித காரணங்களால், இந்த சொல்லேதின்னும் நிலைத்துவருகின்றது. இந்த சொல், புராதன சொற்களில் ஒன்றென மேலே குறித்துள்ளோம். இதன் உற்பத்தியைக் குறித்து சற்று ஆராய்வோம்.

கடவுள் என்ற வார்த்தை இல்லாத சில மனிதர்கள் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அப்படி இருந்தாலும் இருக்கட்டும். ஆனால் மனிதனுக்குக் கீழாய் உள்ள சீவராசிகளிலும், மனிதக் குழந்தைகளிலும் இந்த வார்த்தை இயல்பாக வழங்குவதாக இல்லை. இது கண்கண்ட விஷயம். ஆனால், நாகரீக மடைந்துள்ள சமூகங்களிலும், நாகரீகமில்லாத சமூகங்களிலும் இந்த சொல் பழக்கத்தில் இருப்பதைக்காணலாம். ஒன்றையும் குறிப்பாகக் காட்டாத இந்த சொல் எவ்விதம் உற்பத்தியாயிருக்கும். இந்தச்சொல் இரண்டு விதமாக மனித வர்க்கத்தில் தோன்றியிருக்கலாமென்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

நமக்கு முந்தி வாழ்ந்துவந்த நம்முடைய மூதாதைகள், சுமார் 5, 6 லட்சம் வருஷங்களுக்கு முன், காட்டுமிராண்டிகளாக இருந்து வந்தனர். இக்கட்டுக்கதையல்ல விசாரணையில் ஏற்படும் முடிவு என அறிக. நம் முன்னோர் உலகில் வாழ்ந்தகாலை, உபயோகித்து வந்த பொருள்கள், ஆடை, ஆபரணம், கற்சட்டி, படகு, குகை முதலிய வாசஸ்தலங்கள் இற்றைக்கும் காணலாம். இன்னும பல ஆதாரங்களைக்கொண்டு, நம்முன்னோர் அடைந்திருந்த சமூக வாழ்க்கையை அறிந்து கொள்ளலாம். அந்தக் காலையில் விஷய வார்த்தைகளுக்கும், கற்பித வார்த்தைகளுக்குமுள்ள வித்தியாசத்தை மனிதன் அறியாதவனாயிருந்தான். காணும் கனவு உண்மையெனத் தோன்றும். தண்ணீரில் தன் முகத்தைப்பார்த்தால்தானும் அங்கேயிருப்பதாக எண்ணுவான். மூர்ச்சையாகவிருப்பவன் விழித்துக்கொண்டதும், அவனிடமிருந்து ஏதோ ஒன்று வெளிப்பட்டு இருக்கவேண்டுமென்று தீர்மானிப்பான், கனவில் ஆடும் வேட்டையும், பிடிக்கும் மீனும், போடும் சண்டைகளும், வாஸ்தவமென்றே எண்ணுவான். இத்தியாதி அனுபவங்களிலிருந்து, தனக்குள் ஒரு தனிப்பொருள் உளதெனத் தீர்மானிப்பான். அதே மாதிரி தன்னுடையதிரேகவசைவை அனுபோகத்திலிருந்து திரேகமன்னியில் வேறு வஸ்து இருந்து கொண்டு ஆட்டுவதாக அனுமானித்தது போல் தனக்கு அன்னியப்பொருள்கள் அசைவைக்கண்டு, அவைகளையும் ஆட்டுவிப்போன் ஒருவன் உளதாக, தீர்மானிப்பது எளிதாகும். இடி, மின்னல், வெள்ளம், புயல், பூகம்பம் முதலிய கொடூர சம்பவங்கள், தனக்குக் கெடுதி

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

ஜீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

(தோழர், அ. இராகவன்.)

விதவை மணம்:- துணைவனை இழந்த பெண்ணை நமது புண்ணியநாட்டிலே விதவையர், கைம்மையர், அறுதலி, மூண்டச்சி, தாலியிழந்தோர், அமங்கலி முதலிய பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகிறது. ஆண்மகன் தன் துணைவியை இழந்தால் அவனை இத்தகைய பெயர்களால் அழைக்கப்படவேண்டியது நியாயமாயிருக்க, அவனை எவரும் அவ்வாறு அழைப்பதில்லை. துணைவி இழந்த ஆண்மகனை எவ்விதத்திலும் மதச்சட்ட திட்டங்கள் பாதிப்பதில்லை. ஏனெனில் மதச்சட்ட திட்டங்களெல்லாம் பெரும் பாலும் ஆண்மக்களே வகுத்திருப்பதினால் தங்களுக்கு இடைஞ்சலில்லா வழியில் மதக்கொள்கைகளை அமைத்துக்கொண்டு பெண்ணுலகைப் பெரிதும் சேதம் விளைத்திருக்கின்றார்கள். ஜீவகாருண்யமில்லா கொடிய ஆண் பேய்கள் மதத்தின்பேரால், கடவுளின் பெயரால், மகாத்மாக்களின் பெயரால், கற்பின் பெயரால் துணைவனை இழந்த பெண்ணை அவனுடன் உயிருடன் வைத்து சுட்டெரித்து விடவேண்டுமென்று சட்டஞ்செய்து கோடிக்கணக்கான நம் இந்தியச்சோதரிகளை அவ்வாறே இரக்கமின்றி சுட்டெரித்து வந்தார்கள். இதைத்தான் உடன் கட்டை ஏறல் அல்லது சதி என்று கூறுவது. பண்டைக் காலத்திலே தசரதன் போன்று பல ஆயிரக்கணக்கான மனைவிகளை மணந்து வாழும் வழக்கமிருந்ததால் ஒரு ஆண் மகனிறந்துபோனால் அவனுடைய துணைவிமார்களாகிய ஆயிரக்கணக்கான பெண்மணிகள் சுட்டெரிக்கப்பட்டு வந்தனர். இவ்வாறு உடன் கட்டை ஏறினால் அப்பெண்களுக்கு சொர்க்கம் கிடைக்குமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், அச்சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் மோட்சத்தை நம்பி எப்பெண்மணியும் தானே மனமுவந்து உயிர் துறக்க இணங்கார்; பலவந்தமாக அக்காலத்திய பெரியார்கள் ஒரு ஆணுக்காக ஆயிரக்கணக்கான பெண்களை அவர்கள் மனந்துடிதுடிக்க சுட்டெரித்திருக்கின்றார்கள். அந்தோ கொடுமை! கொடுமை! அக்கொடுஞ்செயலெல்லாம் ஜீவகாருண்யம் என்று தான் அக்காலத்து வைதீக மக்கள் எண்ணினர் போலும். இப்பாதகச் செயலைக்கண்டு மனமிரங்கி இந்திய நாட்டுச்சீர்திருத்த வாதிகள் பெருங்கிளர்ச்சி புரிய அரசாங்கமும் சிறிது கருணைகொண்டு இப்பாதகச்செயலைச் சட்டபூர்வமாகத்தடுத்து விட்டார்கள்.

அதன் பின்னர் துணைவனை இழந்த பெண்களை மொட்டையடித்து மூலையிலுட்காரச் செய்து ஒரு நேரத்திய உணவு மட்டுமுண்டு வாழவேண்டுமென்றும், நகைகளும், நல்ல ஆடைகளும் அணியக்கூடாதென்றும், அவர்கள் ஒரு நல்ல காரியங்கள் செய்யப் போகும்போது எதிரில் வரக்கூடாதென்றும் இன்னும்பல கொடுஞ்சட்டங்களும் செய்து துன்புறுத்துவதோடு ஆண்மகனைப்போல் பெண் மறுமணஞ்செய்யக்கூடாதென்றும் நம் நாட்டில் தோன்றிய ஜீவகாருண்ய மதம் கட்டளையிடுகிறது. விதவைப் பெண்களை வீட்டில் உற்றார் உறவினர் முதலிய பலரும் வைகின்றார்கள். தாய் தந்தையர் வெறுக்கின்றார்கள். அண்ணன் தம்பி மார்கள் அவமதித்துப் பேசுகின்றார்கள். சுமங்கலியான அக்காள் தங்கைமார்கள் அடிக்கடி குறை கூறுகிறார்கள். எத்தனையோ சோதரிகள் இக்காய்வும், வெறுப்பும், அவமதிப்பும் தாங்கப்பொறாது தற்கொலை செய்து கொள்ளுகின்றார்கள். பலர் பட்டினங்களைத் போய் சுயேச்சையுடன் விபச்சாரத்தனம் செய்து பிழைக்கின்றார்கள். பலர் மலேயா, இலங்கை முதலிய இடங்களுக்குப் போய் தோட்டக் காட்டில் மானமிழந்து கூலி வேலை செய்து பிழைக்கின்றனர். பலர் கால் வயிறுண்டு சாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஜீவகாருண்ய மதத்தலைவர்கள் என்போர் இதைப்பற்றி ஒரு சிறிதும் கவனிக்கின்றார்களில்லை. ஒரு சில முற்போக்குள்ள தலைவர்கள் விதவை மணத்திற்கு ஆதரவு காட்டிப் பேசினாலும் நீண்டநாள் வழக்கம் ஒழுக்கம் என்னும் பேய்களும், சாஸ்திரம், கடவுள், சாதி கட்டுப்பாடு முதலிய பூதங்களும் அவர்களுடைய கையிலும், காலிலும் விலங்கை மாட்டி விடுகின்றன. அரசாங்கம் மறுமணத்திற்கு ஆதரவு காட்டினும் நடைமுறையில் போதிய பலன் கிடைக்கவில்லை. எனவே தான் பெண்மக்களின் மறுமணத்திற்கு எதிரிடையாக இருக்கும் கடவுள் வேதம், சமயம், புராணம், பழக்கம், ஒழுக்கம் முதலிய அனைத்தையும் ஒழித்தால் விதவைப் பெண்கள் விமோசனம் அடைவர் என்ற பெரு நோக்கோடு தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கங் கண்டார். சுயமரியாதை இயக்கம் வெற்றி பெறுவிடில் நாட்டில் பெண்களைப் பிடித்துள்ள விதவை என்னும் பெரும் நோய் நீங்காதென்பதோடு பெண்ணுலகத்திற்கே விமோசனம் அண்மையில் இல்லை என்றே கூறலாம்.

விதவையான பெண்டிர் படுந்துயரை நினைக்கும்பொழுது பண்டைக் கால வைதீகர்கள் செய்த "சதி" என்னும் உடன்கட்டை ஏறச்செய்த கொடுஞ்செயல் எவ்வாற்றானும் உயர்ந்த நற்செயலென்னும் முடிவிற்கே வரவேண்டியிருக்கின்றது. உடன் கட்டை ஏறல் ஒரு நாள் துன்பம் விதவையானல் ஆயுட்கால முழுதுந் துன்பம். இத்துன்பத்தினின்று பெண் மக்கள் விடுபட சமூக சீர்திருத்த விருப்பங்கொண்ட அறிஞர்கள் ஊக்கங்குன்றாது உழைத்தும், லாகூர், வர் கங்காராம் போன்ற தனவந்தர்கள் இலட்சக்கணக்கான பொருள்களைக் கொடுத்தும் விதவைகள் துன்பம் நீங்கிய பாடில்லை. காரணம் ஜனங்கள் கடவுள், சாஸ்திரம், பழக்கவழக்க முதலியவற்றிற் கொண்ட மோகமேயாகும். இந்த மோகம் ஒழியும் வரை விதவைச் சோதரிகட்கு மீட்சியில்லை. விதவைகள் மீட்சியடையும் வரை இந்து மதத்துக்கும், இப்பாவத்துக்கும் மீட்சியில்லை. இதுபற்றியே தமிழ் நாட்டின் தேசியத்தலைவர் ஒருவர், "நமது நாட்டில் இலட்சக்கணக்கான சிறு குழந்தைகள் கைம்பெண்களாயிருக்கிறார்கள். இவர்கள் கதி என்னே? திருமணம் இன்னதென்றுணரா முன்னர் ஏன் சிறுமியர்களைத் திருமணஞ்செய்து கொடுத்தல் வேண்டும்? கைம்மையடைய நேர்ந்தால் அவர்களை ஏன் கூட்டிலடைத்து வருத்தல் வேண்டும்? அவர்கள் வழுக்கி வீழ்வரேல் அவர்களை அடிக்கிறது ஊரைவிட்டோட்டுகிறது சமயம் நேர்ந்தால் கொல்கிறது இப்பாவங்களை நிகழ்த்திவரும் நாட்டிற்கு உய்வுண்டா? உரிமையுண்டா? நாயகனுடன் ஒருபொழுதும் கூடி யின்பம் நுகராத பெண்மகள் கைம்மை நிலையெய்தினால் மீண்டும் மணஞ்செய்துகொள்ளலாகாதா? மணம் என்பது யாது? பந்தரா? கோயிலா? மந்திரமா? மாலையா? ஒருவனுடன் கூடி இன்பம் நுகரும் நாள் திருமணம்முடிந்த நாளாகும். இளமை மணத்தை விலக்காது மறுமணத்தைத் தடுப்பது அறமாகாது" என்று கூறியதும் கவனிக்கத்தக்கது.

புண்ணிய நாடென்று போற்றப் பெறும் இப்பாழும் இந்தியாவில் இந்த கொடிய இந்துமதத்தில் தான் மறுமணம் மறுக்கப்பட்டிருக்கிறது. 1921 ஆம் ஆண்டின் ஜனக்கணிதப்படி ஒரு வயது முதல் பதினைந்து வயது வரை விதவையாய் வாழும் இந்துப்பெண்கள் 329,076. அந்தோ கொடுமை! கொடுமை! இக்கொடுமைக்குக் காரணர் யார்? இந்து மதமென்றே கூற வேண்டும். எனவே தான் அறிஞர்கள் 'இந்து மதம் பெண் கொலை மதம்" என்று இயம்பிவருகின்றார்கள். இத்தகைய இளம் பெண்கள் மறுமணஞ் செய்யாவிட்டால் மக்களுக்கு இயற்கையாக உண்டாகும் இன்ப உணர்ச்சியை எவ்வாறு அடக்கிக்கொண்டிருப்பர். நூற்றிற்கொருவராவது இருக்கமுடியுமா? என்பது சந்தேகம். இத்தகைய கைம்பெண்கள் சோரத்தனமாய் விபசாரம் புரிந்து பிள்ளையுண்டானாலும், கருச்சிதைக்கமுற்பட்டுக் கொல்வதும் பிள்ளைபிறந்து விடின் சங்கைநெறித்துச்சாக்கடையிலும், கத்தாழைக்காட்டிலும் வீசிவிடுவதும், வாய்க்காலிலும், ஆற்றிலும் உயிருடன் வீசிவிடுவதும் சில இரக்கமுள்ள தாய்மார்கள் மானத்தைவிட ஜீவகாருண்யமே பெரிது என்றெண்ணி அநாதைப்பாடசாலைகளுக்குக் கொண்டுபோய் ஒருவரும் அறியாமல் கொடுத்துவருவதும் நம் நாட்டில் நடக்கவில்லையென்று எவராவது கூறமுடியுமா? எமது திருநெல்வேலி ஜில்லாவிலே கிறிஸ்துவ பெண்மணிகளால் டோனவூர் என்ற ஒரு கிராமத்தில் நிறுவியிருக்கும் அநாதைப்பாடசாலையில் சுமார் 400க்கு மேற்பட்ட குழந்தைகள் படித்து வருகின்றார்கள். இதைப்போன்ற அநாதைகளின் புகலிடங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஏராளமான பிள்ளைகள் படிக்கின்றார்கள். எல்லாம் கிறிஸ்துவ மிஷனரிகளாலே நடைபெறுகின்றன. ஜீவகாருண்யமதத்தார் என்று கூறும் இந்துக்களோ அல்லது வடிகட்டிய ஜீவகாருண்யச் சமயத்தார் தாங்கள் தான் என்று கூறும் சைவர்களோ நாட்டில் ஆண்டொன்றிற்கு ஆயிரக்கணக்காய் நடைபெறும் இச்சிசுக் கொலைகளைப்பற்றி சிறிதாவது கவலை கொள்கின்றார்களா? அக்கொலைகள் நடைபெறுங் காரணங்களை அறிந்து அதற்கான புரிந்தார்களா? அன்றேல் சிசுக்கள் கொலை செய்யப்படாமல் காப்பாற்ற அநாதை ஆச்சிரமங்கள் நிறுவியிருக்கின்றார்களா? கிறிஸ்துவர்களுக்கு இருக்கும் ஜீவகாருண்யம் இந்துக்களுக்கோ, அன்றிச் சைவர்களுக்கோ ஒரு சிறிதும் கிடையாது என்பது எவரும் அறியக்கிடக்கும் உண்மையாகும். கிறிஸ்துமதமும், இஸ்லாமும் பெண்களிடத்தில் ஜீவகாருண்யம் கொண்டு மறுமணஞ் செய்து கொள்ள அனுமதித்திருப்பதுடன், அனுஷ்டானத்திலும் இன்றளவும் இருந்து வருவதினாலன்றோ மதங்களையே ஒழித்துவிடவேண்டும் என்று விரும்பும் சுயமரியாதைத் தலைவர்களும் அச்சமயங்களைப் போற்றி வருகின்றார்கள். (இந்தத் தலைவர்களின் சொந்த அபிப்பிராயமே யொழிய இயக்கத்தின் கொள்கையன்றென்பதை நேயர்களறிவார்களாக) எனவே ஜீவகாருண்ய சமயங்களென்று கூறிக்கொள்ளும் இந்து சமயம், சைவ சமயம் தங்கள் அழிவிற்கு முன் பெண் மக்களிடம் ஜீவகாருண்யம் கொண்டு பெண்களின் மறுமணத்தை அனுஷ்டானபூர்வமாய் செய்து காட்ட முன்வர அச்சமயத்தலைவர்கள் முயற்சிப்பார்களாக.

குறிப்பு:- சென்ற 15-11-31ல் வெளிவந்த எமகட்டுரையில் "பெண்கள் ஆடைமூடாய் இருக்கவேண்டுமென்பது" என்பதை "பெண்கள் ஆடைமூடாய் இருக்கவேண்டாம் என்பது" என்று திருத்திக் கொள்க.

காலச்சக்கரத்தை எதிர்க்க முடியுமா?

(சாமி சிதம்பரனார்.)

பயன் தரக்கூடிய காரியம் இன்னதென்று கவனிப்பதில்லை. பயனில்லாத செய்கை இன்னதென்று ஆராய்ந்து அறிவதில்லை. சொல்லிய வார்த்தைகளையே திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளை போல—பழைய பாட்டையே திருப்பிப்பாடும் கிராமபோன் மெஷினைப்போல—செய்த காரியங்களையே திருப்பிச் செய்வதே கடமையென நமது மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஃ ஃ

முன்னோர்கள் நம்மைவிட மிகவும் அறிவு ஆற்றல் உடையவர்கள். அவர்கள் அனைவரும் தெய்விகத்தன்மை பொருந்தியவர்கள். அவர்களுடைய அறிவு "தெய்வீக" சக்தியால் விசாலம் அடைந்திருந்தது. அவர்கள் செய்கையிலோ, ஆலோசனையிலோ குற்றம் ஒரு சிறிதும் ஏற்பட்டதில்லை. ஆகையால் அவர்கள் நடத்தைகளையும், அறிவையும் பற்றி ஒரு சிறிதும் ஆராய்ந்து பார்க்கக்கூடாது. அப்படியே பின்பற்ற வேண்டும் என்னும் ஒரு கொள்கை நமது மனத்தில்-நம் நம்மக்கள் மனதில் பதிந்து கிடக்கிறது. இது மாறவேண்டும். மாறினால் தான் நன்மை உண்டு.

ஃ ஃ

முன்னோர்களின் செய்கையிலும், நடத்தையிலும், ஒரு அபிமானம் இருக்கிறது; ஒரு மூட நம்பிக்கை இருக்கிறது, என்பதில் ஐயமில்லை; உண்மைதான். அதன்படி நடக்கவேண்டுமென்ற எண்ணமும் கூட இருக்கிறது; இதுவும் உண்மைதான். ஆனால் அவ்வாறு நடக்கிறார்களா? என்று பார்த்தால் அதுதான் இல்லை. ஆகவே எண்ணம் வேறு, செய்கை வேறாகவே வைதீகர்கள் வாழ்கின்றார்கள் என்று நாம் சொல்லுகிறோம். இதில் தவறு என்ன?

ஃ ஃ

வைதீகர்கள் ஏன் தங்கள் எண்ணப்படி நடக்கமுடிவதில்லை? காலப்போக்கு இடங்கொடுக்கவில்லை. காலச்சக்கரம், அவர்களையும் விடவில்லை. தன்னோடு சேர்த்துக்கொண்டே சுழற்றுகிறது. என்ன செய்வார்கள்? பாவம்!

ஃ ஃ

வைதீகன், சமஸ்கிருத பாஷையையும், வேதங்களையும், "கடவுள்" என்பவரால் உண்டாக்கப்பட்டதாக நினைக்கிறான். ஆனால் அவற்றை மாத்திரம் படிப்பதால் வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லை. வேண்டுமானால் பிச்சை தான் எடுக்கவேண்டும். ஆகையால் ஆங்கில பாஷையையும், அதில் உள்ள நூல்களையுமே படிக்கிறான். அதுவே கௌரவமான முறையில் சாப்பாடு போடுகிறது. இருந்தும் தனது முன்னோர் பாஷை, தெய்வ பாஷை என்ற அபிமானம் மாத்திரம் ஒழிந்தபாடில்லை. உள்ளபடியே தமது முன்னோர் பாஷை—சமஸ்கிருத பாஷை "தெய்வீகம்" உள்ளதாயிருந்தால்—ஏன் வயிற்றுப்பிழைப்புக்காக பிச்சையெடுக்க விடவேண்டும்? மிலேச்ச பாஷை—ஆங்கிலபாஷை கௌரவமான முறையில் ஜீவனத்திற்கு வழிசெய்கிறதே, ஏன்? என்று சிறிது ஆலோசித்துப்பார்ப்பதில்லை. இதை ஆலோசித்துப் பார்த்தால் குருட்டு எண்ணம் அழிந்து போகுமல்லவா?

ஃ ஃ

தானே உயர்ந்த சாதி, தனக்கே சமூகத்தில் உயர்வு கிடைக்கவேண்டும், தனக்கு மற்றவர்கள் வணங்கவேண்டும். தன்னை உயர்ந்தவனாகவே "கடவுள்" என்பவன் படைத்தான். தான் "உயர்ந்தகுலம்" என்று சொல்லப்படுவதில் பிறப்பதற்குத் தனது "தவமும் புண்ணியமும்" தான் காரணம்; என்று எண்ணி இறுமாப்பு அடைகிறான். இந்த இறுமாப்பின் காரணமாகத் தனது நாட்டு மக்களிடம் சமத்துவம் காட்டுவதில்லை. தனது மதத்தைப் பின்பற்றுபவர்களிடம் அன்பு காட்டுவதில்லை. தனது மொழியைப் பேசுபவர்களிடம் சகோதரத்துவம் பாராட்டுவதில்லை. இவர்கள் உழைப்பின் பலனுடைய இரத்தத்தை உறிஞ்ச நினைக்கிறான். இவர்களை சமத்துவம் பெறமுடியாமல் தன் அடியின் கீழ் மிதித்து அடக்கிவைக்கவே நினைக்கிறான். ஆனால் தனது நாட்டினன் அல்லாதவனாயினும் சரி, தனது மதத்தினன் அல்லாதவனாயினும் சரி, தனது மொழியினன் அல்லாதவனாயினும் சரி அவனிடம் அடிமை ஊழியஞ்செய்கிறான்; அவனுக்கு மண்டியிட்டுச் சலாம் செய்கின்றான். அவனைக்கண்டால் அடங்கி ஒடுங்கி, கைகட்டி, வாய்புதைத்து நிற்கிறான். அவன் காலாற் காட்டிய வேலைகளைக் கையினாற் செய்ய ஓடுகிறான். இப்படிப்பட்டவன் கொள்கையை என்னவென்று சொல்லுவது? இவனுடைய அறிவையும், நடத்தையையும் பற்றி எவ்வாறு நினைப்பது?

ஃ ஃ

தற்காலத்தில், கல்வியில் சர்வகலாசாலைப்பட்டம் பெற்றவர்கள் கூட முன்னோர் நாகரிகங்களைப் பாராட்டியும், அவர்களுடைய அறிவை வியந்தும் பிரசங்கம் செய்கிறார்கள். முன்னோர்கள் நாகரிகத்திற்கு நாம் செல்லவேண்டும் என்றும் கூறுகிறார்கள். உடனே நாம் புகைவண்டி புது நாகரிகந்தானே, மோட்டார்கார்கள் புது நாகரிகந்தானே, தபால் தந்திகள் புது நாகரிகந்தானே, மின்சாரத்தினால் ஆகிய சாதகங்கள் எல்லாம் புது நாகரிகந்தானே இவற்றையெல்லாம் ஒழித்துவிடலாமா? இவ்வகையிலும் முன்னோர்களைப் பின்பற்றலாமா? என்று கேட்டால், இல்லை, இல்லை, இவைகள் இல்லாமல் முடியாது. இக்காலத்திற்கு அவசியமாக வேண்டியவை என்று கூறுகிறார்கள்.

ஆகவே இக்காலத்திற்கு வேண்டியவைகள் எவைகளோ அவைகளையெல்லாம் நமது இஷ்டப்படி அமைத்துக் கொள்ளுவதுதானே. இதற்காக ஏன் "முன்னோர் நாகரிகம், முன்னோர் நாகரிகம்" என்று மண்டையை உடைத்துக்கொள்ளவேண்டும்? அதைக் கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சி என்று சொல்லிக்கொண்டு படிப்பையும், அறிவையும், காலத்தையும், பணத்தையும் செலவழிக்கவேண்டும்? இப்படிச்செய்வதனால் ஏழை மக்கள் தரித்திரம் நீங்க ஏதாவது வழியுண்டா என்று கேட்டால் தக்க சமாதானம் கிடைப்பதில்லை; கோபம் மாத்திரம் வந்து விடுகிறது.

ஃ ஃ

காவியங்களைக் காப்பாற்ற வேண்டும். ஓவியங்களைக் காப்பாற்ற வேண்டும். இவைகள் நமது முன்னோரின் அறிவுத்திறமையைக் காட்டுவன; நாகரிக வளர்ச்சியைக் காட்டுவன. என்று ஒரு சாரார் கூச்சலிடுகின்றனர். காவியங்களால் என்ன பயன்? ஓவியங்களால் என்ன பயன்? அவைகள் நமது முன்னேற்றத்திற்கு எந்த வகையில் துணை செய்கின்றன? நமது சமத்துவத்திற்கு எந்தவகையில் உதவி செய்கின்றன? ஏன் அவற்றுக்காக வீண் செலவு செய்யவேண்டும்? வீண் காலம் போக்கவேண்டும்? என்று கேட்டால் உடனே நம்மைத் "தேசாபிமானம் இல்லாதவன்" என்று கூறி விடுகின்றனர்.

ஃ ஃ

நமது நாடு புண்ணிய பூமி. நமது முன்னோர்கள் புண்ணிய புருஷர்கள். ஆகையால் தான் நமது நாட்டில் தத்துவசாஸ்திரங்கள் மலிந்து கிடக்கின்றன. மத நூல்கள் நிறைந்து கிடக்கின்றன என்று சொல்லிப் பெருமை பாராட்டுகிறார்கள் சிலர். நமது நாடு சோம்பேறிகள் நிறைந்த நாடு, நமது முன்னோர்களில், அறிவுடையவர்களாய் இருந்தவர்களில் பலர் சோம்பேறிகள். ஆகையால் தான் தத்துவசாத்திரங்கள் தோன்றின. மத நூல்கள் தோன்றின. இந்த தத்துவ சாஸ்திரங்களும், மதங்களுந்தான் நம்மைச் சோம்பேறிகளாக்கின; சுயநலமிகளாக்கின. பல சாதிக்காரர்களாக ஆக்கின; ஒருவரோடு ஒருவர் ஒன்று சேரமுடியாமற் செய்தன; என்றால் உடனே நம்மை மதத்துரோகி; என்று கூறிவிடுகிறார்கள்.

ஃ ஃ

நீங்கள் மனிதர்கள். உங்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசமில்லை. உலகத்தில் உள்ள சிறந்த மனிதர்களைப்போல நீங்களும் ஆக முடியும். உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. சோம்பித்திரிந்தால் ஒன்றும் ஆகாது. முயலுக இடைவிடாமல் என்று கூறுவதை யோசித்துப்பாருங்கள்.

ஃ ஃ

பிறப்பில் மக்களுக்குள் வேறுபாடு இல்லை ஒரு சிலர் வானத்திலிருந்து குதிக்கவில்லை; ஒரு சிலர் பூமிக்குள் இருந்து புறப்படவில்லை, ஒரு சிலர் நீருக்குள் பிறந்து வெளிவரவில்லை. எல்லோரும் ஒரு விதமாகவே பிறந்தவர்கள். அறிவும், செல்வமும், திறமையும், பிறப்பில் இல்லை. பிறந்த பின் தேடிக்கொள்வனவேயாகும். ஆகையால் யாவரும் இவற்றை அடைய முயற்சி செய்யலாம்.

ஃ ஃ

நாம் தாழ்ந்தவர்கள்; நாம் அறிவில்லாதவர்கள்; நாம் திறமையில்லாதவர்கள்; நாம் செல

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

லால்குடி தாலூகா சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு.

மகாநாட்டுத் தலைவர். தோழர் கே. வி. அழகர்சாமி அவர்களின் பிரசங்கம்.

"சுயமரியாதை இயக்கம் கோடிக்கணக்கான ரூபாய்களும், லெட்சக்கணக்கான தொண்டர்களும் பெற்றுக்கொண்டு போராட்டம் நடத்தி வெற்றியோடு விடுதலை பெறச்செய்வோம் என்று எவரிடத்திலும் ஒப்பந்தம் பேசிக்கொள்ளவில்லை.

——:0:——

லால்குடி தாலூகா சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டுத் தலைவர் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் செய்த முகவுரைப் பிரசங்கத்தின் சாரம் வருமாறு:-

அன்பர்களே! தோழர்களே! இப்போது நமது கடமையையும், நமது இயக்க வேலையையும் பற்றி சில வார்த்தை முன்னுரையாகக் கூறுகிறேன். நான் உங்கட்கு எந்த பிரசங்கத்தைத் அச்சிட்டு வழங்கி விட முடியாமைக்கு மன்னிக்கவும். எனக்கு முன் கூட்டியே பிரசங்கத்தை தயாரித்து அச்சிட்டு பாடம் செய்து கொண்டு படிக்கும் பழக்கம் பிடிப்பதில்லை. அதற்காக என் மீது குறை கூறாமலிருக்க வேண்டுகிறேன்.

நமது இயக்கம்.

நமது சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்தில் சமூக சீர்திருத்தத்தைப்பற்றி மட்டும் கூறிக் கொண்டிருந்தது. அதாவது-ஜாதி உயர்வின் பெயராலும் சமூக பழக்க வழக்கத்தின் பெயராலும் ஒரு மனிதனை ஒரு மனிதன் அடிமைப் படுத்தி அடக்கியாளுகின்றதையும் அதே போல் ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் அடக்கிஆட்சி செலுத்துவதையும் அடியோடு ஒழித்து மக்கள் வாழ்வில் சமத்துவத்தோடும் சம உரிமையோடும் வாழவேண்டுமென்று பிரசாரம் செய்து வந்தது. நமது பிரசாரத்தை யொழிப்பதற்காக வைதீகர்கள் ஆங்காங்கு கூடிவர்ணாச்சிரம மகாநாடு கூட்டியும், ஜாதிகள் மகாநாடு கூட்டியும், மக்களுக்குள் உயர்வு தாழ்வு இருக்க வேண்டுவது அவசியமென்றும், அது மத தர்மமென்றும், சாஸ்திர சம்மதமென்றும், சமூகக் கட்டுப்பாடென்றும் கூறி கூச்சலிட்டார்கள். அப்போது நாம் அவர்கள் கூறும் மதத்தின் யோக்கியதையைப் பற்றியும், புராண சாஸ்திரத்தின் புரட்டுகளைப் பற்றியும், சமூகக்கட்டுப் பாட்டின் அர்த்தமற்ற திட்டங்களையும், அதனால் மக்கள் அடைந்து வரும் துன்பங்களையும் எடுத்துக் கூறி மக்கள் மத வெறியிலும், ஜாதி வெறியிலும், புராண மயக்கத்திலும், சமூகக் கட்டுப்பாட்டிலுமிருந்து விடுதலை பெற வேண்டுமென்றும் பெரும் கிளர்ச்சி செய்தோம். நமது கிளர்ச்சியின் காரணமாக மக்கள் பெரும் பரபரப்பையும், புத்துணர்ச்சியையும் பெற்று கண் விழித்தார்கள். மக்களின் எழுச்சியைக் கண்ட மத புரோகிதர்களும், மத குருக்களும், மதாச்சாரியர்களும், மத பக்தர்களும், வர்ணாச்சிரமக்காரர்களும் நம்மை மத விரோதிகளென்றும், மதமற்றவர்களென்றும் கூச்சலிட்டார்கள். நாம் அதையும் ஒப்புக் கொண்டு நமது கடமையைச் செய்தோம். பின்னர் நாம் கடவுளையே அழிக்கிறோம் என்று கதறினார்கள். அதற்காகவும் பயப்படாமல் நமது கடவுள்களின் யோக்கியதையையும், திருவிளையாடல்களையும், கடவுளின் புராணக்கதைகளையும், கடவுளைக்காட்டிவயிறு பிழைக்கும் வஞ்சகர்கள் சூழ்ச்சியையும், கடவுளை மனிதன் காப்பாற்றத்தேவையில்லை என்றும், கடவுளுக்கு மனிதன் செலவு செய்து கோவில்கட்டி, குளம்வெட்டி, கல்யாணம் செய்துவைத்து, நீராட்டி, உணவூட்டி, உறங்கவைக்கவேண்டுவதில்லையென்றும்; அவ்வாறு செய்வது அறியாமையென்றும் மிக அழுத்தமாய்க் கூறினோம். இப்போதும் கூறுகின்றோம். நாம் இவ்விதம் கூறிக்கொண்டிருப்பது எவர்மீதும் துவேஷம் கொண்டல்ல. நமது மக்கள் சமத்துவமும், பகுத்தறிவும், கல்வி வளர்ச்சியும் பெற்று நித்தியவாழ்க்கையில் இன்புற்று நல்வாழ்வு பெறவேண்டுமென்ற நல்லாசையோடுதான் நமது இயக்கம் நம்மால் இயன்றவரை நம்நாட்டுமக்களிடம் தொண்டு செய்கிறது. நமது கடமையைச்செய்துகொண்டு போகும்போது நமக்குத்தடையாக எவர் எந்த வேடம்தாங்கிவந்தாலும் அதையும் எதிர்த்துப்போராடுகின்றோம்.

புதிய முறை.

நமது இயக்கக்கொள்கைகளையும், நமது பிரசாரங்களையும் எதிர்த்துப் பிரசாரம் செய்த மதபக்தர்கள், வர்ணாச்சிரமக்காரர்கள், ஜாதிவெறியர்கள், புராணநம்பிக்கைக்காரர்கள், கடவுள் பக்தர்கள் ஆகியவர்கள் தற்பொழுது ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது காங்கிரஸ் மகாசபை என்றதின் பெயரால் மதப் பிரசாரம்செய்வதும், காந்தியின் பெயரால் கடவுள்நம்பிக்கையையும், வர்ணாச்சிரமக்கொள்கைகளையும், புராணக்கதைகளையும், கர்மபலத்தின் பயனையும் போதித்துவருகிறார்கள். அதன் பெயரால் ஏழைமக்கள் வறுமை போக்குவதுபோல்காட்டி என்றும் ஏழை பணக்காரவித்தியாசம் நீடித்திருப்பதற்குச் செய்யும் குடிசைத்தொழிலின் குறிப்பிட்ட ரகசிய அமைப்புகளுக்கு இதைப் பகுத்துணர்ந்து பார்ப்பவர்கட்கு உண்மை விளங்காமல்போகாது. எனவே காங்கிரசும், காந்தியும், இன்றும் மக்களுக்கு மறைமுகமாகச் செய்யும்மதப்பிரசாரத்தில்ஒருபுதியமுறையாகும்.

காங்கிரஸ்.

காங்கிரஸ் மகாசபை என்ற ஸ்தாபனம் இந்தியாவின் விடுதலைக்காகபோராடும்ஸ்தாபனம் என்று கூறுவதானால் அதிலுள்ள ஒவ்வொருவரும் நாம் 'இந்தியன்' என்ற ஒரே உணர்ச்சியோடிருந்துதொண்டுசெய்யவேண்டும் அதைவிட்டு மதவெறியும், ஜாதி வெறியும், சமயவெறியும்கொண்டு அதை நிலைநாட்ட முயற்சிக்கும் மதபக்தர்களும், வருணாச்சிரமக்காரர்களும், வைதீகர்களும், ஜாதிவெறியர்களும், நிறைந்த ஸ்தாபனத்தை எப்படி பொதுஸ்தாபனமென்று நம்ப முடியும்? கராச்சி காங்கிரசில் 'மதநடுநிலைமை' த்தீர்மானம் ஒன்று செய்து மற்ற தீர்மானங்களோடு புகுத்தியிருப்பதின் நோக்கமென்ன? மதநடுநிலைமைவகிக்கும் காங்கிரஸ் இந்து முஸ்லீம் சண்டையையும், சைவ வைணவச்சண்டையையும், உயர்வு தாழ்வுச்சண்டையையும், மதபேதச் சண்டையையும், எப்படி நீக்கமுடியும்? இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டு 'காங்கிரஸ்' நடுநிலைமை வகிக்குமா? அப்படி நடுநிலைமை வகிப்பதென்றால் சுயராஜ்யம் பெற்ற பின்னரும் இன்றுள்ள வேற்றுமைகளும், மதபேதச்சண்டைகளும், உயர்வுதாழ்வுச்சண்டைகளும், இந்து முஸ்லீம் சண்டைகளும் இருந்து கொண்டுதானேயிருக்கும். அவைகளை ஒழிப்பதற்குக்காங்கிரஸில்என்ன திட்டங்களிருக்கின்றன? சுயராஜ்யம் பெற்றபின் இந்த சிறிய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிடலாமென்றால் இப்போதுள்ள மக்கள்தானே அப்போதுமிருக்கப்போகிறார்கள். நாம்கூறும் இந்த சந்தேகங்கட்கெல்லாம் தேசபக்தர்கள், காங்கிரஸ்காரர்கள், தேசியத்தலைவர்கள், மகாத்மாக்கள் என்ன கூறுகின்றார்கள். ஒரே வார்த்தையில் நம்மையெல்லாம் 'தேசத்துரோகிகள்' 'ராஜபக்தர்கள்' என்று பல்லவிபாட ஆரம்பிக்கின்றார்கள். அவர்கள் பல்லவிக்காக நாம் என்றும் கவலைப்படவேண்டுவதில்லை.

கதர்.

நாம் கதருக்கு எதிர்ப்பிரசாரம் செய்வதாகக்கூறுகிறார்கள். நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகயிருப்பதாகவும் குடிசைத் தொழிலால்தான் ஏழைமக்கள் பிழைக்கமுடியுமென்றும், ஜீவகாருண்யப்பிரசாரம் செய்கின்றார்கள். அதன் உண்மை என்ன? கதர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதுமுதல் இன்றுவரை ஏதாவது அபிவிர்த்தியடைந்துவிட்டதாகக் கூறமுடியுமா? கதருக்காக எத்தனை மக்களிடம் பணம்வசூலித்து லக்ஷக்கணக்காக காந்திக்கு ஒப்படைக்கப்பட்டது. காங்கிரஸ் நிதியிலிருந்து கதருக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட நிதி எவ்வளவு? ஒவ்வொருபணக்காரர்களாலும், தேசபக்தர்களாலும் ஆரம்பிக்கப்பட்டு மடிந்துபோன கதர் ஸ்தாபனங்கள் எத்தனை? எனவே இதுவரைக்கு இருக்குள்ள கதர்ஸ்தாபனம் எல்லா மக்கட்கும் போதிய ஆடைகளை உதவ முடியுமா? எத்தனை ஆண்டுகள் கதர் அபிவிர்த்திக்கு ரூபாயை அழித்து பாடுபட்டாலும் அது பயன்படாது. காரணம் என்ன? அது தேசீயத்தின் பெயரால் ஏழைமக்கள் என்றும் ஏழையாகயிருந்து மடிவதற்கே கற்பிக்கப்பட்ட ஒரு கைத்தொழிலாகும். 'கதர்' என்றதை திரு.காந்தி ஆரம்பித்தபோதே ஒவ்வொருவனும் தனக்குவேண்டிய ஆடைகளை தானே தயாரித்துக்கொள்ளவேண்டும். எப்படியென்றால் தன் வீட்டிலேயே (பஞ்சு) பருத்திச்செடி பயிர் செய்து அதில் பஞ்செடுத்து, பட்டைபோட்டு ராட்டினத்தில் நூற்று, கைத்தறியில் நெய்து, சலவை செய்துதான் கட்டிக் கொள்ளவேண்டும் என்றார். இது தான் 'காந்தியின்' கதர் உபதேசத்தின் உண்மைத்தத்துவமாகும். அதன்படி எவன் தனக்கு வேண்டிய ஆடையைத்தானே நெய்து கட்டிக்கொள்ளுகிறான்? காந்தியே கூடுமானால் அவர் கூறுகிறபடியே கட்டிக்கொண்டிருக்கலாம்? அதுவும் கதராடை மட்டும் தான் காந்திதயாரித்து கட்டிக்கொள்ளமுடியுமேதவிர ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டியபொருளை அவனவன் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பது எவராலும் முடியாதகாரியமாகும். தனக்கு வேண்டியவற்றை தானே தயாரித்துக்கொள்வதென்ற உபதேசம் மக்களின் கூட்டுறவை யொழிப்பதாகும். யந்திரமுயற்சியை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்பது திரு.காந்தியின்சித்தாந்தமானால் அதைஎவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்கள் சமூகத்திற்கு பேராதரவுபுரிந்துவரும் யந்திர உதவியை பகிஷ்கரிப்பதென்பது மக்களை மிருகப்பிராயத்திற்கு தள்ளுவதென்பதுதான் பொருளாகும். ஆடையை மட்டுமேதான் யந்திர உதவியால் தயாரிக்கக்கூடாது என்றால் அதன்பொருள் என்ன? எனவே 'கதரியக்கம்' ஏழைமக்களை காப்பாற்றுகிறதென்பது முழுப்புரட்டாகும். கதரியக்கத்திற்குபின்னர் மில் நூலால் தயாரித்துவந்த பல கைத்தறிகட்கும் பல ஏழை தொழிலாளர்கட்கும் பிழைப்பின்றி செய்ததுடன் பிச்சைக்காரர்களாகச்செய்துவிட்டது. கதரின்

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

இந்திய வைத்திய

கலாசாலையின் மேல் துவேஷம்.

தமிழ் வைத்தியத்திற்கு உலை.

(தேசீயத்துரோகி)

மதம், ஜாதி, பாஷை, கலை, நாகரிகம், பழக்கவழக்கம் முதலிய எல்லாவற்றிலும், தங்களுடையதே பெரிதென்றும், ஆகையால் தங்களுக்கே முதன்மையஸ்தானம் கொடுக்கவேண்டுமென்றும், நீண்டகாலமாகப் பார்ப்பனர்கள் போராடிக்கொண்டுமிருப்பதுடன், பெரும்பாலும், இப் போராட்டத்தில் வெற்றி பெற்றுக்கொண்டும் வருகின்றனர். தங்களுக்கு ஆதிக்கமில்லாத வழியிலும், லாபமில்லாத வழியிலும், மற்றவர்களுக்கு லாபமும், ஆதிக்கமும் சிறிதளவு உண்டு என்ற வழியிலும் செய்யப்படும் காரியங்கள் எவையாயிருந்தாலும், அவைகளைப் பற்றித் தப்புப்பிரசாரம் பண்ணத்தொடங்கி விடுகின்றனர். அவைகள் தேசத்துரோகமான செயல்களென்றும், அவைகளால் தங்கள் மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், பாஷைக்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், கலைகளுக்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், கூச்சலிடத் தொடங்கி விடுகின்றனர். இது எப்பொழுதும் நமது நாட்டில் பார்ப்பனர்களால் ஆடப்படும் நாடகமாகவே இருந்துவருகின்றது.

இதற்கு உதாரணமாகச் சென்ற 1-12-31ல் சென்னை ஆயுர்வேத சபையின் ஆதரவில் திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தை எடுத்துக்கொள்ளலாம். அக்கூட்டம் காலஞ்சென்ற பனகால் அரசரின் முயற்சியினால் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தியவைத்தியகலாசாலையின் நடைமுறையையும், இந்திய வைத்திய வளர்ச்சியில் சென்னை அரசாங்கத்தார் அநுசரித்துவரும் கொள்கையையும் கண்டிக்கவே கூட்டப்பட்டதாக இருக்கிறது. இவ்வாறு கூட்டம் கூட்டிக்கண்டனம் செய்வதற்கும் காரணம் என்ன என்பதைக்கூறுவதற்கு முன் அக்கூட்டத்தில் பேசிய 'பிராமணோத்தமர்' களின் பேச்சுகளைக் கொஞ்சம் கவனிப்போம்.

'இப்பள்ளிக்கூடம் ஏற்பட்டதன்பலனாக ஆயுர்வேத வைத்தியப்பழக்கம் உள்ளவர்களுக்குக் கெடுதியும் நேரிடுகிறது. இதனால் ஆயுர்வேத வித்தைக்கே ஆபத்து ஏற்படும்போல் இருக்கிறது. இந்திய வைத்தியப்பள்ளிக்கூடத்தில் தேறுபவருக்கே உத்தியோகம் கொடுக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பித்திருப்பதனால் எங்கள் போன்றவருக்கு ஒருவித யோக்கியதையும் இல்லையென்று கூறுவது போலாகிறது"

"இந்திய வைத்தியமுறைவிஷயமாக எங்களுடைய யோசனையையும் அநுஷ்டித்து சுத்த சமஸ்கிருத ஞானம் வாய்ந்தவர்களையும் அப்பள்ளிக்கூடத்தில் போதகராக வைத்துக்கொள்ளவேண்டும் என்பதே நாங்கள் இங்கு கூறவிருக்கும் முக்கியயோசனை" என்று ஒரு பார்ப்பனர் பேசியிருக்கின்றார்.

'புராதன காலவைத்தியமுறை ஒரு க்ஷேமமான பலனை அளிக்கவேண்டுமாயின் கவர்ன்மெண்டின் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் தற்போது நடப்பதைப்போல் நடத்தப்படுவதைவிட மூடப்படுவதே நலம் என்ற எண்ணம் எங்கள் எல்லோருடைய மனதிலும் தோன்றியிருப்பதைத் தெரிவிக்கவே முற்பட்டோம்."

"ஆயுர்வேத வைத்தியம் ஆதிகால மகரிஷிகள் அனுஷ்டிக்கப்பட்டவிதமாக நீடிக்கச்செய்யவேண்டுமென்று பரம்பரையாகப் பாடுபட்டுவரும் வைத்தியர்கள் கவர்ன்மெண்ட் ஆதரவிருந்தால் அந்த சாஸ்திரம் பூரணமேன்மை ஸ்திதியை அடையும் என்று நம்பியிருந்தனர். அந்த நம்பிக்கையினால்தான் இந்திய வைத்தியப்பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதை ஜனங்கள் ஆதரித்தனர்."

"இப்பள்ளிக்கூடத்தை பழைய முறையில் சாஸ்திர நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடம் விடவேண்டும், பழைய வித்வான்களைப் போற்றி ஆதரிக்கவேண்டும்" என்னும் விஷயங்கள் அச்சபையின் சார்பாக ஒரு பார்ப்பனரால் வாசிக்கப்பட்ட பத்திரத்தில் காணப்படுகின்றன.

இன்னும் அக்கூட்டத்தில் செய்த தீர்மானங்களில் "பிராசீன சம்பிரதாய ரீதியில் ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தையும், வைத்திய முறையையும் விருத்திசெய்யவேண்டும்" என்று அரசாங்கத்திற்கு அறிவித்துக்கொள்ளுவதாகவும், "இந்திய மருத்துவப்பள்ளிக்கூட நிர்வாகப் பொறுப்பை இந்த (சமஸ்கிருத ஆயுர்வேத) சாஸ்திரத்தில் பரிபூரண ஞானம், பரிபூரண சிரத்தை, பரிபூரண விசுவாசம் நிறைந்த வித்துவான்கள் வசத்தில் விடவேண்டும்" என்றும் காணப்படுகின்றன.

ஆகவே மேலே கூறிய விஷயங்களைக் கவனித்துப்பார்த்தால் உண்மை இன்னதென்று எல்லோருக்கும் விளங்கிவிடும். அரசாங்கத்தால் நடத்தப்படும், இந்திய வைத்திய கலாசாலையில் சமஸ்கிருத பாஷையில் உள்ள ஆயுர்வேத வைத்தியத்தையே போதிக்கவேண்டும் என்பதும், அதற்காகச் சமஸ்கிருத வைத்தியம் கற்ற பார்ப்பனர்களையே அப்பள்ளிக்கூடத்தில் போதகாசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்பதுமே பார்ப்பனர்களின் உள் எண்ணம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு முடிவு செய்து, இம்முடிவும் அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறையிலும் கைக்கொள்ளப்படுவதால் உண்டாகும் பலன் தான் என்ன என்பதையும் சிறிது யோசித்துப்பாருங்கள்!

இப்பொழுது தமிழ்ச்சித்தவைத்தியமும் ஆயுர்வேத, வைத்தியம், யூநானி வைத்திய பாகங்களும், மேல் நாட்டு வைத்திய முறைகளும் போதிக்கப்படுவதால், அப்பள்ளிக்கூடத்தில் பிராமணரல்லாதார், கிறிஸ்தவர், முஸ்லிம் முதலிய எல்லா வகுப்பு மாணவர்களும் சேர்ந்து படிக்க முடிகிறது. இவ்வாறின்றிச் சமஸ்கிருத ஆயுர்வேத வைத்தியம் மட்டும் போதிக்கப்படுமானால் சமஸ்கிருதம் படித்த பார்ப்பனர்கள் மாத்திரமே சேர்ந்து படிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கும். இதனால் பார்ப்பனர்களுக்கு உத்தியோக வேட்டைக்கு வசதியும் ஏற்படும்; என்கின்ற இந்தக்காரணத்தால் தான் இப்பொழுது பார்ப்பன வைத்தியர்கள் கிளர்ச்சிசெய்யத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

உண்மையிலேயே இந்த நாட்டில் ஆயுர் வேத வைத்தியத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமென்பதற்கும், ஆயுர்வேத வைத்தியர்களை மட்டுந்தான் அரசாங்கத்தார் பாதுகாத்து உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்பதற்கும் ஏதாவது ஆதாரமோ அல்லது நியாயமோ உண்டா? என்று கேட்கின்றோம். பரம்பரையாகத் தமிழ் நாட்டில் வழங்கிவரும் வைத்தியம், சித்தவைத்தியமே யாகும். இப்பொழுதும் நாட்டுப்புறங்களிலும், நகரங்களிலும், நாட்டு வைத்தியர்களாக இருக்கின்றவர்கள் பெரும்பாலும், தமிழர்களும், தமிழ் வைத்தியங்கற்றவர்களுமே யாவார்கள். தமிழ் வைத்தியத்தில் கூறப்படும் மருந்துகளுக்கு வேண்டிய பொருள்கள் யாவும், இந்நாட்டில் கிடைக்கக்கூடியனவே யாகும். தமிழ் நாட்டு சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்ற வகையில் - தமிழ் வைத்திய மருந்துகளும் அமைந்திருக்கின்றன.

ஆகையால் தமிழ் வைத்தியத்தைப் போதிப்பதும், விருத்திசெய்வதும் சுலபமான காரியமாகும். இதற்கடுத்தபடியாக யூநானி வைத்திய முறையும், நம்நாட்டில் எளிதில் விருத்தி செய்யக்கூடியதாகும். முஸ்லிம் ஆட்சி இந்தியாவில் வெகுகாலம் பரவியிருந்ததனாலும், முஸ்லிம்கள் நாடு முழுவதும் சூழ்ந்திருப்பதனாலும், அவ்வைத்தியமும் நாட்டின நிலைமைக்கேற்றவாறே அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் ஆயுர்வேத வைத்தியமோ இந்த நாட்டிற்குச் சிறிதும் ஒவ்வாததாகும் என்பதே நமது அபிப்பிராயம். அது பழங்காலத்தில் இமயமலைப் பிரதேசங்களின் வசித்துக்கொண்டிருந்த நாகரீகமற்ற நாடோடிகளால் (ரிஷிகள்) கண்டு பிடிக்கப்பட்ட முறைகளேயாகும். அந்த வைத்தியத்திற் சொல்லப்படும் மருந்துக்கு வேண்டிய மூலிகை வகைகளும், மற்றப்பொருள்களும் இமயமலைப்பிரதேசங்களில் கிடைக்கக் கூடுமேயன்றி நமது நாட்டில் அகப்படமாட்டா. அன்றியும் சமஸ்கிருதவைத்தியங்கற்ற பண்டிதர்கள் நமது நாட்டில் அதாவது தமிழ்நாட்டில் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? சென்னை போன்ற நகரங்களில் நாலைந்து ஆயுர்வேத பண்டிதப்பார்ப்பனர்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

விடுதலைக்கு வழி தெய்வ நம்பிக்கை ஒழிவதே

(செல்வி. சிவகாமி சிதம்பரனார்)

பெரும்பாலும் மக்கள் முயற்சியற்றவர்களாகவும், தன்னம்பிக்கையற்றவர்களாகவும் காணப்படுவதற்குக் காரணம் தெய்வநம்பிக்கையே! அவனன்றி அணுவும் அசையாது என்றும், கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்றும், எல்லாம் தெய்வச்செயலென்றும் எக்காரியத்திலும் முயற்சியற்றவர்களாய்க் காணப்படுகிறார்கள்.

நோயுற்றபோதும், வறுமையால் வருந்துமபோதும் எல்லாம் தெய்வச் சித்தம என்று நோய்க்குத் தக்கமருந்தின்றி தெய்வப்படைப்புகளும், விரதங்களும், வேண்டுதல்களும், மந்திரங்களும் செய்வதால் என்ன பிரயோஜனம்? தெய்வத்தால் மருந்தின்றி வியாதி குணமடைவதாயிருந்தால் வைத்தியசாலைகளும், வைத்தியர்களும், கணக்கற்ற மருந்துகளும் உண்டாயிருக்கவேண்டியதில்லையல்லவா? அமெரிக்காவில் [டபுள் நிமோனியா] என்கிற சுவாசகாசத்தால் இறந்தவர்களை 6 மணி நேரங்கழித்து பிழைப்பிக்கக் கூடிய ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதற்கு எவ்வளவு ஆராய்ச்சியும், முயற்சியும் செய்திருக்கவேண்டுமென்பதை யோசித்துப்பாருங்கள். தெய்வபக்தர்கள் நிறைந்த நம் நாட்டில் அடிக்கடி பக்கிரிமல்தான் போன்ற குளத்துத்தண்ணீரில்வியாதியைக் குணப்படுத்தக்கூடிய ஆராய்ச்சியுடைய பகல்கொள்ளைக்காரர்கள் தான் தோன்றுகின்றார்கள். ஏனெனில் தெய்வநம்பிக்கையாளர்கள் நிறைந்த நாடு அல்லவா நம்நாடு?

நமது நாட்டு மக்களின் ஆராய்ச்சி எல்லாம் புதுக்கோவில்கள் கட்டுவதும். அதில் ஒரு கல்லை நிறுத்தி அதற்குப்பெயரிட்டு, அவைகளுக்குருதுசாந்திக்கல்யாணம் போன்றவைகள் கொண்டாடுவதில்தான் தலைசிறந்து விளங்குகிறது. சமீபத்திலகூட இந்தியநாட்டிலிருக்கும் கோவில்கள் போதாதென்ற காரணத்தில் 'ஸ்ரீமூலகந்தகுடி விகார'' என்ற ஒரு புத்தமதக் கோவிலுண்டாக்கி இருக்கிறார்களாம். இம்மதத்தை உண்டாக்கிய புத்தர் ஜீவகாருண்யமே சிறந்த மதமெனக்கொண்டவர். மனிதர்கள நல்லொழுக்கமுடையவர்களாக நடந்து கொள்வது அவர்கள் நன்மையடைவதற்குத்தகும் வழி என்னுங்கொள்கையுடையவர். யாகங்கள், மதச்சடங்குகள் முதலியவைகளை மறுத்தவர். கடவுளைப்பற்றிக்கவலைப்படாதவர். கடவுள் உண்டு என்றும பிரசாரம் செய்யவில்லை, கடவுள் இல்லை என்றும் கூறவில்லை. கடவுளுக்கென்று கோவில்களும், விக்கிரகங்களும், திருவிழாக்களும் செய்வதை முழுவதும் கண்டித்தார். இப்படிப்பட்டவருடைய கொள்கைக்கு மாறாக கோவில்கட்டியும், திருப்புவிழா நடத்தியும் வருவது எவ்வளவு அறியாமையாகும். அதில் புத்தருடைய எலும்பு ஒன்று வைக்கும்படி அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டதாம். அவ்வெலும்பில் என்ன இருக்கிறது. அவ்வெலும்பால் மக்களுக்காவதேனும் ஒரு சின்ன பிரயோஜனமுண்டா? என்பதுதான் எனது கேள்வி.

மக்களின் நலத்திற்காக வெளிவரும் சிலகோம்பேரிப்பத்திரிகைகள் முதல் 1, 2 பக்கங்கள் தெய்வவணக்கம் இல்லாமல் கிளம்புவதில்லை தொட்டதற்கெல்லாம் தெய்வம், தெய்வமென்று தெரிந்தோ, தெரியாமலோ கூப்பாடு போடவேண்டுமென்பதுதான் நமது நாட்டுமக்களுக்குத் தெரியும்.

வறுமையால் கஷ்டப்படும் மக்கள் இந்திய நாட்டில் அதிகமாகவும், அதிகரித்துக்கொண்டும் வருவதற்கு தெய்வ நம்பிக்கையேகாரணம். முயற்சித்தால் முன்போக்கடைவோம் என்ற தன்னம்பிக்கையற்றவர்களாய் "இது தான் நமது விதி, தெய்வ சித்தம், முற்பிறப்பில் செய்த பாவம். இப்பிறப்பில் தரித்திரமாய் இருக்கவேண்டியதுதான்; நாம் என்ன பாடு பட்டாலும் நம் அதிர்ஷ்டப்படி தானே நடக்கும்" என்றும், 'எறும்பு முதல் எல்லா ஜீவராசிகளுக்கும் தெய்வம் அன்றோ அன்றாடம பார்த்துப் படி அளக்கிறது" என்றும் சொல்லிக்கொண்டு சிறிதும் முயற்சி அற்றவர்களாய்த் தன்னம்பிக்கையற்று, நாளுக்குநாள் சோர்வுற்று, மனபலத்தோடு கூட தேகபலமும் குன்றி இராதுண்ணும் தொழிலையே ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது. இப்படிப்பட்ட மக்கள் நமது நாட்டில் தான் அதிகம எனச் சொல்லலாம். இவர்களெல்லாம் தாங்களும் மற்றோரைப் போல மனிதப்பிறவிதான் என்ற எண்ணமே அற்றவர்களாயிருக்கிறார்கள் இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் தங்கும் இடம் கோயில்; வயிறு வளர்க்கும விதம் வீடுகளிலும், சாமிகளின வீடுகளிலும (கோயில்) கடைகளிலும், ரயில் வண்டிகளிலும் சதா-பாடித் திரிந்து, நாயினுங் கேடாய் வயிறு வளர்க்கிறார்கள். மேலேகுறிப்பிட்ட சாமிகளின் வீடுகளில் மாத்திரம் நாள் முழுதும் பாடினாலும ஒரு சின்ன சல்லியும் அச்சாமிகளிடமிருந்து இவர்களுக்குக் கிடைப்பதில்லை. தெய்வ பக்தர்களே! உண்மையாகவே தெய்வம் உண்டென்றால் தெய்வத்தின் மீதே பாடல்களைப்பாடிக்கொண்டுதிரியும் இவர்களை அரை வயிற்றுக்கஞ்சிக்கு வழியின்றியும் உடுத்தவுடையின்றியும், பார்க்க பரிதாபகரமான நிலைமையில் விட்டிருக்குமா? என்பதை யோசித்துப்பாருங்கள். எல்லாம் வல்ல தெய்வத்தை நம்பினோர்கதி இதுதானா?

தெய்வ நம்பிக்கையால் மக்கள் அழிக்கும் பொருள்களுக்கோ அளவேயில்லை என்பது யாவரும் அறிந்த விஷயமே. பணம் அதிகம் படைத்தவர்கள் தான் ஏழையர்களுக்கும், பாடுபட முடியாதவர்களுக்கும் உதவி செய்ய வழிபறியாது கோயில் கட்டுவதும், கும்பாபிஷேகம் செய்வதும் புதுசாமிகள் செய்து வைப்பதும், அவைகளைக் கழுவி, உடையுடுத்தி, வேளா வேளைக்கு அச்சாமிக்குச்சாப்பாடு காட்டவும், தான் ஏமாந்தது போதாதென்று இன்னும் பாமர மக்களை அதி சக்தியுள்ள புதுசாமி என்று ஏமாற்ற, ஏமாற்றுகுணத்தை இயற்கையிலேயே அடைந்துள்ள ஒரு பாப்பானை அமர்த்தியும், யாத்திரை சென்றும் ஆயிரக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் அழித்து, அழிந்து போகிறார்கள். அன்றாடம் கூலி வேலை செய்து வயிறு வளர்க்கும் ஏழை மக்களும் இப்பாழும் தெய்வ நம்பிக்கையால் ஒன்றும் உண்மையறியாது அரை வயிறு சாப்பிட்டும், பட்டினி கிடந்தும் சிறிது மிச்சம் பண்ணுகிறார்கள். அம்மிச்சத்தை, "திவசம், திதி" என்று இரக்கமின்றி அட்டையைப் போல் உறிஞ்சும் குணமுடைய பார்ப்பான் வயிற்றில் கொட்டியும், ஏதோ ஒன் கையில் கிடைத்தசாமி இதுதான் என்று சொல்லிக்கொண்டே 6 பைசா கற்பூரம், 6 பைசா பழம், 1 தேங்காய் 6 பைசா பூ, பார்ப்பானுக்கு 2 அணா, உண்டியலுக்கு 3 பைசா வீதம சாமியின் முன் வைத்துப் படைக்கிறார்கள். கூலி வாங்கிக்கொண்டு அந்தத்தட்டை எடுத்துக் கல்லின் முன் காட்டுகிற பார்ப்பான், ஏழைகள் என்ற இரக்கம் கொஞ்சமுமின்றி அத்தட்டிலுள்ள தேங்காய், பழம், பூ இவைகளில சரிபாதி எடுத்துக்கொண்டுதான் பாதியைக் கொடுக்கிறான். 4 அணா செலவு; இந்த 4 அணாவும் ஒரு சிறு பிள்ளையின் 2 நாள் ஆகாரத்திற்கு உதவுமே. தெய்வத்தின முன் படைக்கிறதால் என்ன பிரயோஜனம். அதற்கு என்ன தெரிகிறது ஒன்றுமில்லை. ஒரு ஏழையின் தினக்கூலி 8 அணாவாயிருக்கும். அவன் தன் குழந்தைக்கு மொட்டை அடிக்கவேண்டுமென்றால் குறைந்தது 2 ரூபாய் செலவு செய்கிறான். மொட்டை அடிக்கிறவனுக்கு கூலி 2 அணாதான். பாக்கி ரூ1-14-0 சாமிகளின தரகனுக்கு ஒரு காரணமுமில்லாமல்சேருகிறது. பணம்படைத்தவர்கள் ஒரு குழந்தைக்கு முடி எடுக்க வேண்டுமென்றால் நூறு, ஆயிரம் கணக்கில் செலவு செய்வது நமது நாட்டு வழக்கம். அதுபற்றி நமக்குக் கவலை இல்லை, ஏழை மக்கள் பணமில்லாமல், பணம்சேர்க்கிறவரையில் குழந்தைகளை 5, 6 வயது வரையில் தலைமயிரை வைத்திருக்கிறார்கள். தலைமயிர்களெல்லாம் திரிந்து ஜடை, ஜடையாக சேர்ந்து கொண்டு அதில் நிறைய பேன்கள் புழுத்து சீவுவதற்கும், முழுதும் அகற்றவும் முடியாமல் பாவம்! குழந்தைகள் கஷ்டப்படுவார்கள். இவ்விதம் ஜடை விழுந்த குழந்தைகளை இந்தியாவில் அதிகமாய்க் காணலாம். சாமி எப்பொழுதும் ஏமாற்றும் செர்; குழந்தைகள் கஷ்டப்படுகிறார்கள். இரண்டு அணா தான் செலவு. மயிரைக் கத்தரித்து விடுங்கள் அச்சாமி என்ன செய்யமுடியும்; என்று சொன்னால், 'ஐயோ! அப்படி சொல்லாதீர்கள். வாயால் சொல்லுவதும் பாவம்! பிறந்த மயிர் சாமிக்கு முடி எடுக்கவேண்டும்" என்று பெரிதும் உண்மையாகவே பயப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஏழைமக்கள் முன்னேற வேண்டுமென்றால் கோவிலையும், அதிலுள்ள சாமிகளையும், அதன் தரகர்களையும் இல்லாதொழிக்கவேண்டுமேயல்லாது வேறு வழியில்லை.

தெய்வ நம்பிக்கையால் மக்கள் துணிந்து அநேக அக்கிரமங்களைச் செய்கிறார்கள். திருடுகிறவனும், கொலைசெய்கிறவனும், பொய் சொல்லுகிறவனும், பாமரமக்களை இதம் சொல்லி தெய்வத்தின் பேரால் ஏமாற்றிப்பகல் கொள்ளை அடித்து வயிறு வளர்ப்பவர்களும், தெய்வத்தின் முன் கால அணா கற்பூரம் கொளுத்தினால் செய்த பாவம் நீங்குமென்ற நம்பிக்கையால் அல்லவா? கொடிய அக்கிரமங்களையும் துணிந்து செய்கிறார்கள்.

இந்நாட்டில் உள்ள கோவில்களுக்கும, தீர்த்தமென்று சொல்லப்படும் பிரயோஜனமற்ற குளங்களுக்கும் கணக்கே கிடையாது. நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறதே ஒழிய குறைந்த பாடில்லை. இவைகளெல்லாம போதாதென்று தற்போது காந்தி ஜயந்தி, காந்திபடம, காந்திசிலைவணக்கம், பாரதமாதா, தேசியக் கொடி வணக்கம் என காங்கிரஸ் மதக்காரர்களால் புதிதாய் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினால், மனிதர்களுக்கு என்ன உதவி. இவைகளினால் வீண் செலவே ஒழிய ஒரு பிரயோசனமும் கிடையாது. இந்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தின் செலவுக்கணக்கையும் ஆராய்ந்தால் சாமியின் பேரால் செய்யும் செலவு முக்கால் பங்கும், சொந்த செலவு கால் பங்கும் தான் இருக்குமென்பது நிச்சயம்.

இந்திய நாட்டில் மக்கள் பெரும்பாலும், ஒரு வீட்டில் 4 5 குடித்தனங்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏழைமக்கள் சிறு குடிசைகளில் பெரிதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிலர் குடிசைக்குள் இடமில்லாமல் ரோட்டில் படுத்து நித்திரை செய்வதையும் பார்க்கலாம். இட

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

யாருமற்ற ''பாவி''

(உ. க.)

முன் தொடர்ச்சி

முன்பாக சரித்திரத்தில் எனது பரிதாபகரமான தற்கால வாழ்வையும், பஞ்சமர்களாகிய நாங்கள் வேண்டும் ராஜாங்க நீதியையும், விவரித்தோதினேன். வலுவான 'தஸ்தாவேஜுகளாய்' விளங்கும் வேதஸ்மிருதி சாஸ்திர புராணங்களையுடைய இந்து மதமே எங்களையும், பொதுவான உலக சுகபோகங்களை எங்களுக்குப் பங்கில்லாமல் அனுபவித்துவரும் ஏனைய ஜன சமூகத்தையும், தனியாகப்பிரித்து, வைத்திருக்கும் ஒருபெரிய மலைத்தொடர் என்பதை அதில் எடுத்துக்காட்டினேன்.

இந்திய நாடு பாதாளத்திற்கு அதிவேகமாய்ப்போய்க்கொண்டிருப்பதைத் தடுப்பதற்கும், நிமிர்ந்துநிற்க முடியாமல் அழுத்திக்கொண்டிருக்கும் அடிமை நிலை என்னும் பாரமான சுமையை அறவே விலக்கித் தள்ளுவதற்கும், மற்ற நாடுகளோடு முன்னணிக்கு வந்து அவைகளோடு நம் நாடு சமத்துவமான ஆசனத்தில் வீற்றிருப்பதற்கும், 'தீண்டாமை' என்னும் பெரும் பூதம் என்று இந்நாட்டைவிட்டு வேரோடு அழிந்து மண்ணோடு மண்ணாகப்போகின்றதோ அன்றுதான் முடியும். 'பூர்ண சுயேச்சைநாடு' எனப் பிறநாடு நம்நாட்டுக்கு நாமகரணமிடும் நாளும் அந்நாளேயாகும்!

இன்னாட்டிலே நாங்கள் படும் நெடுநாளைய துயரைக்கண்டு மனமிரங்கி 'தீண்டாமை ஒழியவேண்டும்' என்று முழுமனத்தோடு கூறும் நம்சகோதரர்களிலே பலரும் எங்களுடன் சேர்ந்து கலந்து ஒருமித்துப்பழகாமல் இருக்கின்றனர். எங்களிடையே சில குறைபாடுகள் இருப்பதாகவும், அநாச்சாரங்களான குறைபாடுகளால் தாங்கள் பிரிந்து நிற்கவேண்டியிருக்கின்றதென்றும் கூறுகின்றனர். இக்குறையை எடுத்துக்காட்டும் கூட்டத்தாரிலே கலாசாலைப்பட்டதாரிகளும் ஓரளவுக்கு உலகஞானமறிந்தோரும், செல்வவான்களும் இல்லாமல் போகவில்லை.

உலகத்தாரை எங்களுக்குக் காட்டி, அவர்களுடைய வாழ்க்கையை விளக்கிப் போதித்தும், 'சுத்தம்' என்னும் நேர்மை எங்களிடை பரவுவது குதிரைக்கொம்பாயிருக்கிறது எனக் குற்றஞ்சாட்டுவோர் ஒருசாரார். பல்லாயிரக்கணக்கானவருடங்களாய்மற்றஜனசமூகத்திற்கு நெடுந்தூரத்திலே வாழ்க்கை நடத்தி வருகிறோம். உலக அறிவு இம்மியும் இல்லாமல் இருக்கின்றோம். யாருமற்ற 'பாவிகள்' என்னும் உணர்ச்சியைத் தவிர வேறெவ்வித உணர்ச்சியும் எங்கள் அகத்தே சிறிதும் இல்லை. பிறமக்களுக்கு அடங்கி, ஒடுங்கி அவர்களுடைய சீர்பாதங்களை வணங்கி அதுவே நாங்கள் செய்யும் கடமை-தர்மம் என்று நம்பி 'தன்னம்பிக்கை' என்னும் பதத்தையே அடியோடு மறந்து நிற்கின்றோம். பழகிய எங்கள் பறைச்சேரிக்கூட்டத்திற்கு நாங்கள் மற்ற மக்களோடு உறவாடும் முறையை காதளவோடு ஒழியதால் அதன் பலன் குதிரைக்கொம்பாய் முடிவது ஓர் அதிசயமாகுமா? ஏனைய மனிதர்கள் கண்ணிலே நாங்கள் எதிர்ப்படுவது கொடியபாவம் என இதுவரைக் கருதி நடுநடுங்கி வீற்றிருந்தோம்; இத்தகைய எங்கள் கூட்டத்தைப் பிரசங்க வாயிலாய்ச்சொற்ப தினத்திற்குள் சீர்படுத்தி சுத்தமாயிருக்கும் தன்மையை எங்களிடை பரப்பிவிட முடியுமா? வாயுவை உட்கொண்டு ஜீவித்திருக்கும் சில பாம்பினங்களைப்போல, நாங்களெங்கள் வயிற்றிற்குப்போதிய ஆகாரம் கிடைக்காமையால் எங்களில் ஒவ்வொரு குடும்பமும் வாயுஜீவனம் செய்ய வேண்டிய நிலையிலே நெடுநாள் இருந்து வரும் நாங்கள் இவறு சொல்லின் உபதேச அளவிலே வெண்ணிற ஆடை, அழுக்கில்லா மேனி, மாசற்றத் தோற்றத்தோடு விளங்குவதென்றால் அது எளிதில் முடியக் கூடிய காரியமா? உலகில் பொதுவாய் அமைந்திருக்கும் செல்வத்திலே எங்களுக்கென்று தனிப்பங்காய்ஒதுக்கிவைத்தாலல்லது நாங்களாதேகம், மனம்முதலியவைகளில் பரிசுத்தவான்களாய் விளங்குவது சாத்தியமில்லையல்லவா?

வைதீகர்களால் தெய்வத்தன்மை பொருந்தியதென்றும், தேவர்களுக்கு இருப்பிடமென்றும், வைதீகர்கள்புகழ்ந்துநம்பி, போற்றிவரும் பசுவின் மாமிசத்தை ஆகாரமாகக் கொள்கின்றனர். ஆதலால் இவர்களை விலக்கிவைத்திருக்கிறோம்'' என மற்றொரு பெருங்கூட்டம் குறிப்பிடும் குற்றத்திற்கு உட்பட்டிருக்கிறோம். இந்த நிலையில், மாமிசம் புசிப்பது தகுதியா? ஜீவகாருண்யத்திற்கு ஏற்றதா? என்பனபோன்ற ஆராய்ச்சியில் யான் இறங்கப்போவதில்லை. அது தனி விஷயமாகும். மாமிசம் உண்ணும் கூட்டத்தில், உயர்ந்த ஜாதி இந்துக்களுடைய எண்ணிக்கையும், பெருந்தொகையாகக் காணப்படுகிறது. உலகில் மாமிசத்தை ஆகாரமாகக் கொள்ளும் பெருந்தொகையான மக்களாவரையும் தீண்டப்படாதார் என பிரித்திருக்கிறார்களா? இன்று நாம் காணும் உயரிய பதவியிலே பெரும்பட்டங்களோடு, ஏற்றத்தாழ்வின்றி உலகில் உலாவிவரும் எண்ணிறந்த மக்கள் யாவரும் மாமிசபக்ஷணிகளாய் விளங்குகின்றனர். அவர்களைத் தீண்டினால் தோஷம் என்றோ, பாவம் என்றோ சாக பக்ஷணிகளான ஏனைய மனிதர் ஷெயார்களை விலக்கியிருப்பதாய்க் காணோம்.

''கடவுள்'' எழுந்தருளியிருக்கும் இடம் என நம்பப்படும் கோவில்களிலேயே தெய்வம் இல்லை என புத்திமான்கள் பறைசாற்றி வரும் இந்நாளில் தெய்வம் உண்டோ, இல்லையோ என்னும் சங்கை அதி தீவிரமாகப் பரவிவரும் இவ்வாண்டில், மனிதப் படைப்பிலும் தாழ்ந்ததான பசு மாமிசத்தில் 'தெய்வம்'' குடிகொண்டுள்ளது என்னும் வைதீகர் கூற்று நம்பமுடியாததாகும். கேலிக்கிடம், முழுப்புரட்டு. இந்துமத ''தெய்வங்களால்'' கைவிடப்பட்டு, எந்த அந்நிய நாட்டாருக்கு நாம் அடிமையாய் விளங்குகிறோமோ அந்நாட்டாராகிய ஆங்கிலேயர் பசு மாம்சப் பிரியரல்லவா? பசுமாமிசத்தைத் தின்று இந்து மதக்கொள்கைப்படி, கொடிய ரௌரவாதிநரகத்திற்கு அருகராய் விளங்கும் ஆங்கிலேயரோடு கைகுலுக்குவதுபூர்வ ஜன்மபுண்ணியம் எனமிக உயர்ந்த ஜாதி இந்துக்கள் நினைத்துப் பூரித்துப்புளகாங்கிதமடைவதை நாம் இன்றளவும் பிரத்தியக்ஷமாகப்பார்க்கிறோம் அல்லவா? ஆங்கிலேயரது பண்டிகை நாட்களில் தங்கள் ''தேவர்கள் குடிகொண்டுள்ள'' கொழுத்த பசுவை தாமே பரம பக்தியோடு அவர்கள் சன்னிதானத்தில் காணிக்கையாகக் கொண்டு சேர்த்து, அவர்களுடைய அன்பையும் நன்றியறிதலையும் கொள்ளை கொள்ளையாகப்பெற்றுத்திரும்பும், மேலான ஜாதியினதில் பிறந்த இந்துக்களையும் நாம் ஏராளமாகக்காண்கிறோம்.

லண்டன்மா நகருக்குப் பிரயாணப்பட்டுச்சென்ற திரு. காந்தியவர்கள் இறந்து போன ஒரு மிருகத்தின் தோலைத்தமது சொந்த உபயோகத்திற்குச் சுருட்டி எடுத்துச் சென்றாராம். வரம்புக்கு மீறிய ஜீவகாருண்யத்தால் தூண்டப்பட்ட திரு. காந்தியவர்கள் தாமாக இறந்த மிருகத்தை மண்ணில் போட்டுப் புதைக்காமல், அதன் தோலைத்தமது சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் சென்றதைக்கண்ட ''காந்தி பக்தர்கள்'' அவரது எல்லையற்ற—ஜனர்களிடத்தும் காணமுடியாத—ஜீவகாருண்யத்தைக்கண்டு கண்ணீர் உகுத்து ''ஐயோ! என்ன காருண்யம்! என்ன ஜீவபக்தி! உமது ஜீவகாருண்யத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் முறையின் அழகே அழகு! அதைச்சாமான்ய ஜனங்கள் கைக்கொள்வதென்பது சாத்தியமா! என்னப்பனே! மகாத்மா!'' என வீறிட்டுக் கதறினார்கள்.

இறந்துபோன மிருகத்தை மண்ணில் போட்டுப் புதைக்காமல், இயற்கைக்கு விரோதமாக அதன் தோலை உரித்துத் தமது சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளும் திரு. காந்தியை உலகம் மஹான் என்கிறது; ஜீவகாருண்ய மூர்த்தி என்கிறது; அவரது தரிசனம் பூர்வ புண்ணியம் என்கிறது. அவரைத் தீண்டும் ஒப்பற்ற புண்ய சுகம் இச்சன்மத்தில் இல்லை என்கிறது. ஏழைகளான நாங்கள் இறந்துபோன மிருகத்தின் இறைச்சியை, வறுமையின் கொடுமையால் உணவாகக்கொண்டு பசிப்பிணியை ஒழிக்கிறோம். ஆனால் எங்களையோ உலகம் சண்டாளர்கள் என்கிறது. ஜீவபக்தியில்லா கொடூரர் என்கிறது. மதத்தால் புறக்கணிக்கப்பட்ட பாபிஷ்டர், தீண்டப்படாதார் என்கிறது.

ஒரே செய்கையை இருவர்நிறைவேற்றினும் ஒருவரது குலம், பிறப்பு, அந்தஸ்து, மதபக்தி, பணப்பெருமை முதலியவைகளால் ஒருவர்செய்வதைப் உலகம்பெருமைப் படுத்திப்புகழ்ந்து, போற்றுகின்றது. அதே செய்கையைப்பின்பற்றிய என்போன்ற ஏழை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.)

அறிவிப்பு.

சென்னை நகரம் முழுமைக்கும் நமது பத்திரிகையின் விளம்பர ஏஜண்டாக கற்பகம் & கம்பெனியாரை நியமித்திருக்கிறோம். ஆகையால் இனி நமது பத்திரிக்கையில் விளம்பரம் செய்ய விரும்பும் சென்னையிலுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தார் மூலமாகவே விளம்பரத்திற்கு ஏற்பாடு செய்து கொள்ளவும்.

கற்பகம் & கம்பெனி,
விளம்பர ஏஜண்டுகள்
257, லிங்கச் செட்டித்தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

குடி அரசு

ஈரோடு 1931 டிசம்பர் 6௳

அன்று சொன்னதற்கு அழிவில்லை.

:0:

கொஞ்ச நாளாக நமது நாட்டில் ஒவ்வொரு நாளும் அரசியல் கிளர்ச்சிப் பத்திரிகைகளைப் படிக்க ஆவல் உண்டாக்கிக்கொண்டிருந்ததும், விருந்து எழுந்தது முதல் படுக்கைக்குப்போகும் வரையிலும் வேலையற்றவர்கள் வேலையுள்ளவர்கள் ஆகிய எல்லோராலும், எங்கும் பேசப்பட்டுவந்ததுமாகிய வட்டமேஜை மகாநாட்டின் இரண்டாவது கூட்டம் முடிந்துவிட்டது. 'திரு. காந்தி அவர்கள் வட்டமேஜை மகாநாட்டிற்குப்போயிருக்கிறார், அவர்தமது அபாரமான சக்தியினால் பிரிட்டிஷாரை நடுநடுங்க வைத்துச் சுயராஜியத்தை வாங்கி முன்னதாக இந்தியாவுக்குப்பார்சல் அனுப்பிவிட்டுத்தான் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுவார்' என்று 'காந்திபக்தர்கள்' நினைத்துப்பேசிக்கனவுகண்டு கொண்டிருந்த சுயராஜ்யமும் இன்னதென்று தெரிந்துவிட்டது.

ஆனால் இந்த சுயராஜ்யமும் காங்கிரசின் பிரதிநிதியாகிய திரு. காந்தி அவர்கள் வட்டமேஜை மகாநாட்டிற்குப்போன பிறகு தான் கிடைத்தது என்று சொல்லுவதற்கில்லாமற்போய்விட்டது பற்றி காங்கிரஸ்காரர்கள் ஆயாசப்படுவதோடுங்கூட, ஆத்திரமும் படக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் பிரதிநிதியில்லாமல் நடைபெற்ற முதல் கூட்டத்திலேயே-சென்ற ஜனவரி மாதத்தில் பிரிட்டிஷ் முதல் மந்திரி வெளியிட்ட அறிக்கையிலேயே-இன்னமாதிரியான சுயராஜ்யந்தான் கொடுக்கமுடியும் என்று கூறினார். அதே சுயராஜ்யத்தைத்தான் இப்பொழுதும் கொடுப்பதாக முதல் மந்திரி தமது அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்.

முதல் வட்டமேஜை மகாநாடு நடந்தபோது, அம் மகாநாட்டைத் 'தேசத்துரோகிகள் கூட்டம்" என்றும், "சர்க்கார் தாசர்கள் கூட்டம்" என்றும், "உத்தியோக வேட்டைக்காரர்கள் கூட்டம்" என்றும், "வகுப்புவாதிகள் கூட்டம்" என்றும் பலவாறு நமது நாட்டுத் தேசீயப்பத்திரிகைகள் என்பனவும், தேசீயத்தலைவர்கள் என்பவர்களும், தேசீயத் தொண்டர்கள் என்பவர்களும், கைவலிக்க எழுதினார்கள்; தொண்டை வலிக்கக் கத்தினார்கள். பிறகு, "காந்தி—இர்வின் ஒப்பந்தம்" ஏற்பட்டதன் பலனாகத் திரு. காந்தி வட்டமேஜை மகாநாட்டிற்குப் போகும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவரும் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போகாமல் நழுவவிடுவதற்கு எத்தனையோ வகையில் சாக்குப்போக்குகள் காட்டியுங்கூடபோகமுடியாமல் இருக்க ஒன்றும் சரியான காரணம் கிடைக்காமையால் 'கடவுள்' தலையின்மேல் பாரத்தைப் போட்டுப் போய்ச் சேர்ந்தார். காங்கிரஸ் காரர்களும், "ஆசீர்வாதங்" கூறி "ஜே" போட்டுக் கப்பலேற்றி அனுப்பினார்கள். ஆனால், அப்பொழுதே திரு. காந்தியால் புதிதாக ஒன்றும் சாதித்துக்கொண்டு வரப்போகிறதில்லை என்று தெரிந்த "நவஜவான்" காரர்கள் கருப்புக்கொடி பிடித்தார்கள். "காந்திக்கு வெட்கம், காங்கிரசுக்கு வெட்கம், காந்தி, ஒழிக காங்கிரஸ் ஒழிக" என்று கூச்சலிட்டார்கள். அப்பொழுதும் திரு. காந்தியவர்கள் வெகு ஜாக்கிரதையாக 'கடவுள்' என்னைப் போகச்சொல்லுகிறார், 'கடவுள்' எந்த மாதிரியான சுயராஜ்யத்திற்கு வழி விடுகிறாரோ அதன்படி நடக்கட்டும். என்னால் ஒன்றும் ஆகாது. எல்லாம் 'கடவுள் சித்தம்' என்னும் பல்லவியைப்பாடிக்கொண்டு தான் போனார்.

திரு. காந்தி அவர்களுக்குத் துணையாக திரு. மாளவியா, திரு. ரங்கசாமி அய்யங்கார், திருமதி சரோஜினி தேவி முதலியவர்கள் "காங்கிரஸ் பிரதிநிதிகள்" என்ற பெயரில்லாவிட்டாலும் அநாமதேயப் பிரதிநிதிகளாகப்போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் சென்றுங்கூட முதல் மகாநாடாகிய "தேசத்துரோக, வகுப்புவாத, உத்தியோகவேட்டை"க்கூட்டத்தில் எந்த விதமான சீர்திருத்தம் கொடுப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம சம்மதித்ததோ, அதைவிட ஒன்றும அதிகமாக கொடுத்துவிட இப்பொழுதுசம்மதித்துவிடவில்லை. "அன்று கண்டதிற்கு அழிவில்லை" என்பது போல முன்பு என்ன சொல்லப்பட்டதோ அதைத்தான் திரும்பவும் சொல்லப்பட்டது. ஆகவே இவர்கள்போய்த்தான் என்ன பிரயோஜனம் உண்டாகி விட்டது? போகாமல் இருந்த காலத்தில் தான் என்ன நஷ்டம் வந்து விட்டது என்று கேட்கிறோம்.

திரு. காந்தியவர்கள் வட்டமேஜை மகாநாட்டில பேசும போதெல்லாம் "காங்கிரஸ் ஒன்றே தான் இந்தியாவுக்குப்பிரதிநிதிஸ்தாபனம். அதனுடைய அபிப்பிராயமேதான் இந்தியாவின் அபிப்பிராயமாகும். காங்கிரசை ஆதரிக்காதவகுப்பினர்கள் இந்தியாவில் இல்லை. என்னைத்தான் காங்கிரஸ் தனது பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறது. ஆகையால் நான் கூறும் அபிப்பிராயந்தான் காங்கிரஸ் அபிப்பிராயம். என் அபிப்பிராயமே இந்தியாவில் உள்ள 35 கோடி ஜனங்களின் அபிப்பிராயமாகும். நான் கேட்கும சுயராஜ்யம் கொடுக்காவிட்டால் இந்தியா பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு மறுபடியும "ஆத்மசக்தி" கொண்டு போர் செய்யும்" என்று இம்மாதிரியே தன்னையும், காங்கிரசையும்பற்றி வெகுவாகப் புகழ்ந்து 50 நிமிஷம் அதிகமான பிரசங்கம் செய்வார். அதன் பின் 10 நிமிஷத்தில் "காங்கிரசின் நோக்கம் பூரண சுயராஜ்யமேயாகும். பூரண சுயராஜ்யம கொடுத்து விட்டால், இந்தியாவிலுள்ள வகுப்புக்கலகங்கள் யாவும் ஒழிந்து போகும். இந்தியாவிலுள்ள மதச்சண்டைகளும் ஒழிந்து விடும். பூரண சுயராஜ்யம் கொடுத்து விட்டால் இந்தியாவை எங்களால் காத்துக்கொள்ள முடியும்" என்று பல்லவி பாடி முடிப்பார். இவருடைய பல்லவி முடிந்தபின் "காந்திபக்தர்"களாக இருக்கின்ற இரண்டொரு பிரதிநிதிகளும் அநுபல்லவியும பின்பாட்டும் பாடிமுடிப்பார்கள்.

திரு. காந்தியின் பேச்சுக்கு மாறாக "ஒவ்வொரு வகுப்புக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும். பூரண சுயேச்சைக்கு இந்தியா இன்னும் யோக்கியதையடையவில்லை. பூரண சுயேச்சை கொடுத்து விட்டால், சிறுபான்மைவகுப்புகளும, தாழ்த்தப்பட்ட வகுப்புகளும், செல்வாக்குப் பெற்ற பெரும்பான்மை வகுப்புகளிடம் அகப்பட்டுநசுக்குண்டு அழியும்படி சம்பவிக்கும். ஆகையால் தக்க பாதுகாப்போடு கூடிய சீர்திருத்தமே வேண்டும்" என்று பேசினவர்களையும், அவர்களை ஆதரிப்பவர்களையும், இந்தியாவின் பிரதிநிதிகள் அல்லவென்றும, அவர்களுக்கு இந்தியாவில செல்வாக்கில்லையென்றும, பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் தாசர்களென்றும மகாநாடு வெற்றிகரமாக முடியாமலிருக்க வேண்டுமென்றே பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களென்றும், நியாயமின்றியும் நாணயமின்றியுமபேசிக்கொண்டு வந்தார். இதற்கு அவ்வப்போது மற்ற பிரதிநிதிகள் தக்க சாட்டை கொடுத்தார்களென்றாலும் அவர் தனது புலம்பலைக்கடைசி வரையிலும் விடவேயில்லை.

இவ்வாறு திரு. காந்தியவர்கள் என்னதான் கூறினாலும் கடைசியில ஒன்றும் பலிக்காமல் போய்விட்டது. கடைசிக்கூட்டத்தில பிரிட்டிஷ் முதல் மந்திரி வெளியிட்ட அறிக்கையில்,

"இந்தியாவிற்குமாகாண முழு சுய ஆட்சியும, மத்திய அரசாங்கத்தில் பொறுப்புள்ள ஆட்சியுமே கொடுக்கப்படும. ராணுவ இலாக்காவும, வெளிநாட்டு சம்பந்த இலாக்காவும் கவர்னர் ஜெனரலின் பொறுப்பில் தான் ஒதுக்கப்படும். சில நிபந்தனைகளுடன் நிதி சம்பந்தமான பொறுப்பை மத்திய அரசாங்கத்திற்குக்கொடுக்கப்படும். இந்தியாவின் செல்வநிலைக்குத் தீங்கு வாராமல் பாதுகாக்கும் பொறுப்பு கவர்னர் ஜெனரலிடமே இருக்கும். குறைந்த வகுப்பினர்களின் உரிமைகளைப பாதுகாக்கும் பொறுப்பும் கவர்னர் ஜெனரலிடமே இருக்கும் தேசத்தின் அமைதியைப்பாதுகாக்கும் பொறுப்பும் அவருடையதே. இனி ஐக்கியஅரசாட்சியின் அமைப்பு முறையைப்பற்றி முடிவுசெய்வது, சிறுபான்மை வகுப்புப்பிரச்சினையைப்

பொறுத்ததாகும். உங்களால் இதுவரையிலும் சிறுபான்மை வகுப்புப்பிரச்சினையைச் சமரசமாகத்தீர்த்துக்கொள்ள முடியவில்லை இனியாவது நீங்கள் முன்று ஒரு முடிவுக்கு வாருங்கள்; இல்லாவிட்டால் நானே முடிவுசெய்து விடுகிறேன். இந்தியாவில் உள்ள எல்லா வகுப்புகளுக்குள்ளும் சமரசம் ஏற்படாத காரணமே பொறுப்பாட்சிக்குத்தடையாக இருக்கிறது.

இனி ஐக்கிய அரசாங்கத்தில் ஒவ்வொரு விஷயமும் எப்படி எப்படி இருக்கவேண்டுமென்பதைப்பற்றி இந்தியாவில் கூடப்போகும் மூன்றாவது கூட்டத்தில் தனித்தனிக் கமிட்டிகளின் மூலம் முடிவுசெய்யப்படும்.

என்று மிகவும் தெளிவாகக்கூறிவிட்டார். இது தான் முதல் மந்திரியின் அறிக்கையில் உள்ள சாரமாகும்.

இவ்விஷயத்தை அறிந்தவுடன் திரு. காந்தியும், "தான் வந்தும் ஒன்றும் அதிகப்படியான காரியம் நடைபெறவில்லையே இதற்கு என்ன சமாதானம் கூறலாம்" என்று பல மணி நேரங்கள் ஆலோசனை செய்து பார்த்தார். கடைசியாக 'நான் இந்தியாவை விட்டு வந்த காலத்தில் நம்பிக்கை இழந்ததைவிட இப்பொழுது ஒன்றும் அதிகமாக இழந்துவிடவில்லை" என்று வெகு சாதுர்யமாகச் சமாதானங்கூறிவிட்டார். ஆனால் பூரண சுயராஜ்யம் வாங்கித்தருவதாக திரு. காந்தியும், காங்கிரசும் சட்டமறுப்புப்போர் நடத்தியதற்குப் பலனை ஒன்றையும் காணோம்.

சட்டமறுப்பினால் நாட்டிற்கு ஒரு நன்மையும் உண்டாகப்போவதில்லையென்றும், அதற்குப் பதிலாக மக்களுக்குத்துன்பமே உண்டாகுமென்றும், நாம் ஆதிமுதல் கூறிவந்தது இப்பொழுது என்னவாயிற்று? ஆயிரக்கணக்கான தொண்டர்கள் என்பவர்கள் அடிபட்டதும், சிறைபட்டதுந்தான் லாபம். சுயராஜ்யம் வாங்கித்தருகிறோம் என்று ஏழைமக்களிடம் உண்டியல் வசூலும், பணவசூலும் செய்து காங்கிரஸ்காரர்கள் சாப்பிட்டு ஏப்பமிட்டது தான் பலன். நாட்டில் உள்ள வியாபாரிகள் வியாபாரத்தில் நஷ்டமடையவும், அரசாங்கத்தின் செலவு அதிகரிக்கப்படவும், அதன்மேல் தபால், தந்தி, உப்புவரி, நிலவரி, இறக்குமதிவரி முதலியபலவகையில் அதிகவரி ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்படவும், சட்டங்களை மீறுதல் என்ற எண்ணம் படிந்ததனால் மக்கள் ஒழுங்கீனமான வழிகளில் பிரவேசிக்கவும், கொள்ளைகளும், கொலைகளும், தாராளமாக நடைபெறவும், 'தேசீய வீரர்கள்' 'தியாகிகள்' என்ற பட்டங்கள் பெறவும், செய்ததுதான் லாபம். வேலையில்லாமல் திண்டாடியவர்களும் பொழுது போக்குவதற்கு வழியில்லாத காலிகளும ஏதாவது ஒருகிளர்ச்சியான காரியத்தைச்செய்து கொண்டுதான் இருக்கவேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களும், ஏதாவது ஒரு இயக்கத்தின் பேரால் தனக்கு வேண்டாதவர்களை அவதூறுசெய்யவேண்டும் என்னும் நோக்கமுடையவர்களும், ஜவுளிக்கடை மறியல், கள்ளுக்கடை மறியல், என்ற பெயர்களால் காலித்தனம் செய்ததுதான் லாபம். இம்மாதிரி பலவகையில் தேசத்திற்குக்கஷ்டமும், மக்கள் மனதிற்குத்தொல்லையும், தேசத்தின் செல்வத்திற்கு நஷ்டமும் ஏற்பட்டதைத்தவிர சட்ட மறுப்பு இயக்கத்தினால் ஒரு கடுகளவு நன்மையும ஏற்படவேயில்லையென்று முன்னமே கூறினோம், இப்பொழுதும் கூறுகின்றோம்.

அல்லாமலும் காங்கிரசினால் நாட்டிற்கு ஏற்பட்ட மற்றொரு பெருங்கெடுதியையும் இச்சமயத்தில் சொல்லாமல் இருப்பதற்கில்லை. அதாவது காங்கிரஸ் பிரசாரம் செய்யும் ஆட்கள் வருணாச்சிரமவாதிகளாயிருந்து கொண்டு மக்களுக்கு 'ஆத்ம சக்தி' 'தெய்வ பக்தி' 'புராண நம்பிக்கை' முதலியபாட்டுகளைப் போதித்துக் கொண்டு வந்தார்கள். திரு. காந்தியையும் 'தெய்வ புருஷர்' ஆக்கி அவர்மீது மூடநம்பிக்கை கொள்ளும்படி ஜனங்களுக்குப் போதித்தார்கள். இந்தக்காரணங்களால் இப்பொழுதும் திரு. காந்தியைப்பற்றித் தெரிந்துகொண்டிருக்கிற பாமர மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் பேர் திரு. காந்தியை ஒரு "மகான்" "அவதார புருஷர்" "தெய்வீக சக்தி" வாய்ந்தவர். "தெய்வீக சக்தி"யினால் வெள்ளைக்காரர்களை நமது நாட்டைவிட்டு ஓட்டிச் சுயராஜ்யம் வாங்கிக்கொடுத்து விடுவார்" என்ற அளவில் காங்கிரஸ் "பக்தர்"களால் சொல்லத் தெரிந்து கொண்டு "காந்திக்கு ஜே" என்று கத்துகிறார்களே யல்லாமல் "அவர் ஒரு அரசியல் வாதி வருணாச்சிரம தருமி" என்று தெரிந்துகொண்டிருக்கிறவர்கள் எத்தனைபேர் என்று கேட்கிறோம்.

ஆகவே காங்கிரசும், திரு காந்தியும் நடத்திய சட்டமறுப்பு இயக்கத்தால், காந்தி மதமும், வருணாச்சிரம தருமமும், மூடநம்பிக்கையும், காலித்தனமும் பரவியதைத் தவிர வேறு ஒன்றும் இல்லையென்பது நடுநிலைமையிலிருந்து சொந்த அறிவோடு யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. வேண்டுமானால் அடுத்த எலக்ஷனிலும், இப்பொழுது நடைபெறும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலும், காந்தி, காங்கிரஸ், தேசீயம், சுயராஜ்யம் என்னும் பெயர்களைச் சொல்லி ஓட்டு வாங்கவும், ஓட்டுக் கேட்பவர்களுக்குத் தாக்களாய் இருக்கவும் பிரயோசனப்படும்; பிரயோசனப் படுகின்றது என்று சொல்லிக்கொள்வதைப் பற்றி நமக்கு ஆட்சேபனை யில்லை. இவ்விஷயம் இவ்வளவோடு இருக்கட்டும்.

இனிவரப்போகும் அரசியல்சீர்திருத்தகாலகாட்டின் ஏழைமக்களுக்கு—தொழிலாளர்களுக்கு—தீண்டத்தகாதவர்களுக்கு—பெண்மக்களுக்கு—நாள் முழுதும் கஷ்டப்பட்டு வேலை செய்து அரை வயிற்றுக்குக்கூட உணவில்லாமல் துன்பத்திலும், கவலையிலும், கொடுமையிலும் காலங்கழிக்கும் ஆதரவற்ற மக்களுக்கு ஏதாவது நன்மை விளையுமா என்பதையும் சிறிது ஆலோசித்துப் பார்ப்போம்.

சிறு பான்மையோர், பெண்மக்கள், தாழ்த்தப் பட்டவர்கள், கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் முதலானவர்களுக்கு என்னதான் பாதுகாப்பு அளித்தாலும், அவர்கள் சமூக சமத்துவம பெற்று, அவர்களுக்குள்ள கஷ்டங்களெல்லாம நீங்கி, அவர்களுக்கு "உயர்ந்த ஜாதிக்காரர்" என்பவர்களால் செய்யப்படும் கொடுமைகள் தொலைந்து, மேலான நிலைமைக்கு வந்துவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. இதற்குப் பதிலாக, படித்தவர்கள் அதிகமான உத்தியோகங்களைப் பெறவும், பணக்காரர்களும், ஜமீன்தாரர்களும், பட்டங்களும், பதவிகளும் பெற்று ஏழைமக்களைக் கொடுமைப் படுத்தவும், வருணாச்சிரம தருமக்காரர்கள் இன்னும் தங்கள் சனாதன தருமத்திற்கு நிலையான ஆதரவு தேடிக்கொள்ளவும் தான் சௌகரியம் உண்டாகும். மற்றபடி விவசாயிகளும், தொழில் செய்பவர்களும், கொடுத்துவரும் வரியில் ஒரு சிறிதும் குறைவேற்படப்போவதில்லை. இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் அவர்களிடம் வாங்கும் வரிகள் அதிகமாகவே ஆகக்கூடும். நமது செல்வம், பயனற்ற வழியில், மதத்திற்கென்றும், கோயில்களுக்கென்றும், திருவிழாக்களுக்கென்றும், புரோகிதர்களுக்கென்றும் செலவாகி வருவது குறைந்து, அச்செல்வம் தேசமக்களின் தரித்திரத்தையும், கஷ்டத்தையும், போக்குவதற்கும் பயன்படப் போவதில்லை என்றும் உறுதியாகக் கூறுகிறோம்.

மத்திய அரசாங்கத்தில் உண்டாகப் போகும் ஐக்கிய அரசாட்சியில், சுதேச ராஜாக்களும், சமீன்தார்களும், பணக்காரர்களுமே பதவி வகித்திருப்பார்கள். அங்கு திரு. மாளவியா, தர்பாங்கா மகாராஜ போன்ற வருணாச்சிரம தருமவான்களுக்கே செல்வாக்கு மிகுந்து நிற்கும். இத்தகைய சபையின் மூலம், கஷ்டப்படுவோர் நன்மைகளுக்காகச் சீர்திருத்த— சமதர்மச் சட்டங்கள் தோன்ற முடியுமா? என்று ஆலோசியுங்கள்.

ஆகவே இனி வரப்போகும் சீர்திருத்தத்தினாலும், இப்பொழுது நடைபெற்று வரும், காங்கிரஸ் ஆர்ப்பாட்டங்களினாலும் எள்முனையளவு நன்மையும் நமது நாட்டிற்குக் கிடைக்கப் போவதில்லை என்பதை மீண்டும், மீண்டும் கூறுகிறோம்.

ஜாதிகளின் பெயராலும், மதங்களின் பெயராலும் நடைபெறப் போகும் அரசியலால்பொதுவான சமதர்மத்தைஎப்படிஎதிர்பார்க்க முடியும்? சாதிகளும், மதங்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நிலைத்து வேரோடி, மக்கள்மனத்திலும், இரத்தத்திலும் ஊறிக்கலந்து போயிருக்கின்ற நமது தேசத்தில் ஜாதி, மத ஆதிக்கமும் பாதுகாப்பும் உள்ள அரசியலைத் தவிர வேறு அரசியலை ஸ்தாபிக்கவும் முடியாதென்பது உண்மைதான். நமக்குள் ஜாதி, மத துவேஷங்கொண்டு வலுத்தவர்கள் இளைத்தவர்களைத் துன்பப் படுத்தி—கொடுமை புரிந்து ஆளுவதைவிட "ஜாதி, மதங்கள் ஒழிந்து சமரசமாகவேண்டும்" என்பதற்கு அதிக அநுகூலஞ் செய்யாவிட்டாலும், பிரதிகூலம் செய்யாமலிருக்கும அந்நியர் பாதுகாப்பிலிருப்பது ஒரு வகையில் மேன்மையானதென்று தான் நாம் சொல்லுகிறோம்.

ரோஜா முத்தையா

நமக்குள்ளிருக்கும், சாதிப் பிணக்குகள், சமயச்சண்டைகள் அடிமை மனப்பான்மை புரோகித ஆதிக்கம் முதலியவைகள் ஒழிந்து பகுத்தறிவு பெற்று விட்டால் அந்நியர்க்கு இங்குவேலையில்லை. நாமும் நம் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளும் திறமையுடையவர்களாகி விடுவோம் ஆகையால் நமது சுதந்தரத்திற்குத் தடைகளாக இருக்கின்ற, ஜாதி, மதம், கடவுள், வேதம், புராணம் முடப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஒழித்து ஏமாற்றுகிறவர்களுக்குக் கஷ்டப்படுகிறவர்கள் அடிமையாகாமல் எல்லா மக்களும் சுகமடைந்து வாழக்கூடியது, சுயராஜ்யமானாலும், பூர்ண சுயேச்சையானாலும், ஐக்கிய ஆட்சியானாலும், அந்நிய ஆட்சியானாலும், வேறு யாருடைய ஆட்சியானாலும் அதை நாம் வரவேற்கத் தயாராய் இருக்கிறோம் என்று கூறி முடிக்கின்றோம்.

12-வது பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

டிசம்பர் மாதக்கடைசியில் சென்னையில் மகாநாடு நடைபெறும் திருவாளர்கள், ராவ்பகதூர் பி. டி. குமாரசாமிச்செட்டியாரை வரவேற்புக்கழகத்தலைவராகவும், எம் தாமோதரநாயுடு, எஸ் ஜி. ரங்கராமாநுஜம் இவர்களைக்கூட்டுக் காரியதரிசிகளாகவும். ராவ்சாஹிப் பி. ருக்மாங்கதமுதலியாரைப் பொக்கிஷதாரராகவும், டி. ஏ. வி. நாதன் அவர்களை விளம்பர அதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. மகாநாட்டுக்காரியங்களைக் கவனிக்கத் தனித்தனியே நான்கு கமிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னையில் சுயமரியாதைப் பிரசாரம்.

29-11-31ம் தேதி சென்னை மயிலாப்பூர் கடைவீதியில் ஒரு பொதுக்கூட்டம் கடைவீதியார்களால் நடைபெற்றது. உயர்திரு. டி நல்லசிவம்பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் கூட்டத்திற்கு அக்கிராசனராக பிரேரேபணை செய்யப்பட்டு ஆசனத்மர்ந்ததும் ரோஜாமாலை சூட்டி மரியாதைசெய்தார்கள். அக்கிராசனர் முன்னுரைக்குப் பின்பு தோழர்-ள் எஸ் குருசாமி, பஞ்சநாதர், திருஞானசம்பந்தம், எஸ். வி. லிங்கம், முதலியவர்கள், ஓட்டல் கட்சியின் விஷயங்களைப் பற்றியும், வட்டமேஜை மகாநாட்டின் முடிவைப் பற்றியும், இனி காங்கிரஸ் பார்ப்பனர்கள் செய்ய விருக்கும் ஏமாற்றுங்களைப்பற்றியும், டிசம்பர் மாதம் திருச்சியில் நடைபெறப்போகும், சுயமரியாதை,, மகாநாட்டைப் பற்றியும் உபன்யாசித்தார்கள். இரவு 3-மணிக்கு அக்கிராசனர் முடிவுரையுடன் கூட்டம் இனிதுமுடிந்தது. அடுத்த வாரமும் ஊரின் மத்திய பகுதியில் "சுயமரியாதை" பொதுக்கூட்டம் நடைபெறுமென்று தெரிகிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

தபால் கட்டணங்கள் உயர்வு.

1931வது வருஷம் டிசம்பர் மாதம் 15ந் தேதியிலிருந்து கீழ்க்கண்டவாறு தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கிறது:—

ஒரு கார்டு 0 0-9 பை ஒரு ரிப்ளை கார்டு 0-1 6 அணா. இரண்டரை தோலா எடையுள்ள ஒரு உரையிலிட்ட கடிதம் 1க்கு 0-1-3 அணா. இதே மாதிரி அதிகப்படும் இரண்டரைத்தோலா வுக்கும் அல்லது அதற்குக் குறைந்த பாகத்துக்கும் 0-1-3 அணா

தபால் கட்டணம் பூராவும் செலுத்தாத கார்டுகளை பட்டுவாடா செய்ய மாட்டார்கள். அவைகளைக் கிழித்தெறியப்படும்.

தந்தி கட்டணத்தில் உயர்வு:—

உள்நாட்டுத் தந்தி மணியார்டர் 1க்கு மணியார்டர் கட்டணம் தந்திக் கட்டணம் இவற்றுடன் 0-2-0 அணா அதிக கட்டணம் செலுத்தவேண்டும்.

இதே மாதிரி வெளிதேசங்களுக்கு அனுப்பும் ஸ்டர்லிங்கு, (பவுன்) ரூபாய் தந்தி மணியார்டர்கள் ஒவ்வொன்றுக்கும் 0-2-0 அணா கட்டவேண்டும். அதேமாதிரி வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஸ்டர்லிங்கு ரூபாய் தபால்மணியார்டர்கள் ஒவ்வொன்றுக்கும் 0-2-0 அணா கட்ட வேண்டும்.

விக்கிரகங்களுக்கு ஆபத்து.

தரங்கம்பாடிக்கு சுமார் 8 மைல் தூரத்திலுள்ள பெரம்பூர் கிராமத்திலுள்ள மூன்று ஆலயங்களிலுள்ள விக்ரகங்கள் இடம்விட்டு அப்புறப்படுத்தப்பட்டுமல்லாமல் தானத்தின் பொருள்கள் களவாடப்பட்டிருப்பதாகத்தெரிகிறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கம்.

கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஜெனரல்பாடி மீட்டிங்கு 6-12-31 மாலை 5-மணிக்கு கும்பகோணம் கீழ்கடலங்குடித்தெருவிலுள்ள நம்பர் 462 சங்கம் ஆபீஸ் கட்டிடத்தில் நடைபெறும். அது சமயம் மகாநாடு நடத்துவதுமுதல் அனேகவிஷயங்கள் ஆலோசனைக்கு வருகிறபடியால் டி சங்கத்தின் அங்கத்தினர்கள் யாவரும் தயவு செய்து தவறாமல் விஜயம் செய்ய வேண்டுமென்று டி சங்கம் வைஸ் பிரசிடெண்டு கே. கே. நீலமேகம் அறிவிக்கிறார்.

அறிவிப்பு.

"குடி அரசு" ஆபீசுக்கு எழுதும் கடிதங்கள், ரிஜிஸ்டர், மணியார்டர்கள் முதலியவைகளை இனி மேல் நாகம்மாள் பிரிண்டர் அன்ட் பப்ளிஷர் 'குடி அரசு" ஈரோடு என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்திய கத்தோலிக்கர்களே! இரண்டாயிரம் வருஷமா? நித்திரை

—:0:—

பெங்களூர் S. L. சிங்கராயன் வரைவது.

அகில இந்தியக்கத்தோலிக்க நண்பர்களே! மனித புத்தியோடு சற்று பொறுமையாய் யோசித்துப்பாருங்கள். அதாவது உங்களுக்குள் மரித்தவர்களில் எத்தனைபேர்களுக்கு பிரயாண டிக்கட் வாங்கிக்கொடுத்து மோட்சத்திற்கு அனுப்பியிருக்கிறீர்கள்? எத்தனைபேர்களுக்கு அர்ச்சியசிஷ்டப்பட்டங்கள் கொடுத்திருக்கிறீர்கள்? அவர்களுடைய ஜீவிய சரித்திரங்கள் எங்கே? அவர்கள் பெயரால் கட்டிய ஆலயங்கள் எந்தயிடங்களில் இருக்கின்றன? அவர்களின் உருவச்சிலைகள் எங்கே? இறந்துபோன உங்கள் ஜனங்களை மோட்சத்திற்கு அனுப்பவோ, அல்லது அவர்களுக்கு அர்ச்சியசிஷ்டப்பட்டங்கள் கொடுக்கவோ! அல்லது அவர்கள் நாமதால் கோவில்கள் கட்டவோ! அல்லது அவர்களின் உருவச்சிலைகளைச்செய்து வாங்கவோ! உங்களுக்குப்பிரியமில்லையா? அல்லது செல்வமில்லையா? பிரிட்டிஷ் அராசாங்கத்தார் வைஸ்ராய்ப் பட்டமும், கவர்னர் பட்டமும் இந்தியர்களுக்குக்கொடுக்கத்தடை செய்கிறார்கள். அது போலவேதான் உங்கள் கறுப்புக்கத்தோலிக்கர்களுக்கு அர்ச்சிய சிஷ்டப்பட்டங்கள் கொடுக்க உங்கள் வெள்ளைக் குருக்கள் தடை செய்கிறார்கள் போலும். அப்படியானால் உங்கள் கருப்புக்குருக்களை அழைத்துக்கொண்டு வினவுங்கள். இதற்கெல்லாம் காரணம் உங்களின் அறியாமையும் அடிமைத்தனமும் என்பதற்கு யாதுசந்தேகம். உங்கள் சுயபுத்தியை செலவுசெய்ய நேரமில்லையா? கும்பகர்ணன் என்பவன் ஆறுமாதந்தான் நித்திரை செய்தானென்று ராமாயணம் சொல்லுகிறது. கத்தோலிக்கர்களாகிய நீங்களோவென்றால் இரண்டாயிரம் வருஷம் ஆழ்ந்த நித்திரை செய்வதென்றால் அறிவுள்ள உலகம் உங்களைக்கண்டு நகைக்காமலிருக்க முடியுமா? கண்விழியுங்கள், இன்றே (குடி அரசை) கையில் பிடியுங்கள் சுயமரியாதையோடு வாழ முன்வாருங்கள்........கத்தோலிக்கு கிறிஸ்துவனாகிய என்னை இக்கேள்விகள் கேட்க போதித்தது யார்? குடி அரசு பத்திரிகையும், கோலார் தமிழன் பத்திரிகையும் என்பதை என் அன்பார்ந்த கத்தோலிக்கு சகோதரர்களுக்கு வெகுவணக்கமாய்த்தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் பரமஏழையாயும் யாருமற்ற பாவியாயும் இருக்கும்கூட்டத்தை இகழ்ந்து, தூற்றி சமூகத்திலிருந்து விலக்கி, அடிமைநிலையைவிட்டு மீள வழியில்லாமல்செய்ய உலகம் கங்கணம்கட்டிக் கொண்டு நிற்கிறது. காலசக்கரமாறுபாட்டினாலும், எங்களைக்கரையேற்றி உய்விக்க இரவும் பகலும் இடைவிடாது உழைக்கும் பரோபகாரிகளின் முயற்சியினாலும், நாங்களும் ஆங்காங்கு தன்னம்பிக்கையென்னும் பலமான ஆயுதத்தால் எழுந்துதாக்கி எங்கள் அடிமைநிலையென்னும் தகர்க்கமுடியாக் கோட்டையைப் பெயர்க்கிறோம். ஆங்காங்கேசில வர்ணாச்சிரமதர்மிகளும், எங்களால் ஆதிக்கம் செலுத்திப்பழகியோரும் "தீண்டாமை" நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமென்ன ஓரளவுக்குஒப்புக்கொண்டு மேடையிலே கூவும் போது எங்களை அடைத்துவைத்திருக்கும் அடிமைநிலை என்னும் கோட்டையின் அஸ்திவாரம் ஆட்டங்கண்டு விட்டதுஎன்று கூறவும் வேண்டுமோ?

மகா-ள-ள-ஸ்ரீ

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1930 O. S. No 1693.

1931 E. P. No 2319.

பல்லடம் தாலுகா திருப்பூரிலிருக்கும் ரோமன் கத்தோலிக் ப்ரீஸ்ட் எ. இகனேஷியஸ் அவர்கள் வாதி.

இப்போது மதுரையிலிருக்கும் மம்மகான்கா மகன் கே. அசனார் க க்கா பிரதிவாதி.

டி வாதி வக்கீல் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தும் நோட்டீசு. தீர்ப்புக்கடனாளியாகிய டி பிரதிவாதி என்பவருக்கு மேற்கண்ட வியாஜியத்தில் டிக்கிரி பெற்றவராகிய வாதி என்பவர் இஸ்தியாரின் சொத்துக்களின் விற்பனைக்காக மனுச்செய்து கொண்டிருக்கிறபடியால் விற்பனை இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1932ம் வருஷம் ஜனவரி மாதம் 4ந் தேதி விசாரிணை செய்யப்பட்டிருக்கிறது என்று இதனால் உமக்கு தெரிவிக்கலகிறது.

(Sd) Y. D. ஜேசுதாசன்
B. A, B. L., அட்வகேட்,
திருப்பூர், 5—12—31

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பத்து லக்ஷம் உயிர்கள்.

26-11-31ந் தேதி 'முன்னேற்ற'த்தின் தலையங்கம்.

"இந்தியா விடுதலை பெறுவதற்கென பத்து லக்ஷம் உயிர்களைப் பலி கொடுப்பது ஒரு பொருட்டல்ல" என லண்டனில் மாணவர் கூட்டம் ஒன்றில் காந்திஜி கூறினார். இந்தியாவிலுள்ள அவரின் சேனாதிபதிகள் எல்லாம் வட்டமேஜைக் கூட்டத்தால் இந்தியாவிற்கு சுயராஜ்யம் வந்துவிடாது ஆதலால் மீண்டும் சத்தியாக்கிரகப் போர் தொடங்க வேண்டுமெனக் கூறுகின்றனர். காந்திஜியையும் உடனே திரும்பிவிடும்படி தந்தியும் சொல்லினர். 'இந்தியாவின் விடுதலைக்கு ஒரு பத்து லக்ஷம் உயிர்களை தியாகம் செய்வது ஒரு பொருட்டல்ல" என்பதில் காந்தீயத்தின் அஹிம்சா தர்மம் எவ்வளவு தூரம் மலிந்து கிடக்கிறதென்பது தெரியவில்லை. காந்திஜி தமது பேச்சுக்கு என்ன தான் அர்த்தம் கற்பித்தாலும் அவரின் பேச்சில் அஹிம்சை என்பது ஒரு அணுவளவுமில்லை என்பது தெள்ளத் தெளிய விளங்குகின்றது. "இது துராக்கிரகமில்லாவிட்டால் வேறு என்ன வென்பது நம்மால் அறிய முடியவில்லை" என்று விபினசந்திரபாலர் கல்கத்தா இங்லீஷ்மான் பத்திரிகையில் எழுதியிருப்பது போல் நாமும் அவரின் பேச்சு அஹிம்சையா, துராக்கிரகமா வென்பதை அறிந்து கொள்ளுதல் அசாத்தியமாகவே இருக்கிறது. காந்திஜியின் பேச்சும், அவரின் சேனாதிபதிகளின் பேச்சுகளும் எதிரி எனபவர்களை எல்லாம் அடிக்க வேண்டும், உதைக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டுள்ள யோசனையற்ற இளைஞர்களைத் தூண்டிவிடலாம். ஆனால் காந்தீயத்தின் அஹிம்சா முறை வீழ்ந்து பட்டதென்பதை அப்பேச்சுகள் மறைக்க முடியாது.

வட்டமேஜை மகாநாடு முறிந்து விடுமென்றும், காந்திஜி இந்தியாவிற்கு வந்து மீண்டும் போர் தொடங்குவார் என்றும் காங்கிரசார் எதிர்பார்ப்பது போல குடமும், குண்டுசட்டியும் தூக்கிக்கொண்டு மீண்டும் டண்டிக் கடற்கரைக்கு காந்திஜி புறப்பட்டு விடமாட்டார். ஆனால் ஒரு வேளை இயற்கை அன்னைவழங்கியுள்ள உப்பை யாவரும் அனுபவித்துக்கொள்ளும் உரிமையைப் பெற ஆசைபட்டது போல் அதே இயற்கை அன்னையால் வழங்கப்பட்டுள்ள பூமி பரப்பை இது என் நிலம், அது என் பங்கு என ஒவ்வொருவரும் பட்டாப் போட்டுக்கொள்ளுவது, இயற்கையின் உரிமையைத் தகைவதாகுமென நினைத்து உப்புக்கு பதிலாய் மண் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம். பொது ஜனங்களிடம் லக்ஷம் லக்ஷமாய் வசூலித்து செலவிட்டு மண் சத்தியாக்கிரகத்தில் வெற்றி பெற்றாலும் பெறலாம். ஆனால் இந்த முஸ்லீம் சமரசத்தை மட்டில் இவரால் உண்டாக்க முடியாது. இதை காந்திஜியே மனமார மாக்டொனல்டிடம் தெரிவித்து மிருக்கிறார்.

முஸ்லீம்கள். சீக்கியர்கள், தீண்டப்படாதார்கள், கிருஸ்துவர்கள் முதலானோர் கேட்கும் உரிமைகள் வகுப்பு வாதமெனக் கூறப்படுகிறது. கை விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய அளவிலுள்ள பார்ப்பார் கலப்புத்தொகுதியில் கலந்து கொண்டுள்ள மர்மம் உலகறிந்த விஷயமாகும். உச்சிக்குடுமியையும், பூணூலையும் விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டுள்ள பார்ப்பானும், அதன் பத்திரிகையும் மற்றவர்களை எல்லாம் வகுப்பு வாதிகள் என்று சொல்லுவதில் எவ்வளவு யோக்கியப் பொறுப்புள்ள தென்பதை விவரித்துக் கூறவேண்டியதில்லை. நாய் குரைத்து நத்தம் பாழாகிவிடாது. வயிற்றுப் பிழைப்பு ஒன்றையே பிரதானமாய்க் கொண்ட பார்ப்பாரக் கூட்டம் என்னதான் தேசியக் கத்துகத்தினாலும் பூணூலும், குடுமியும் அறுபடாதிருக்கப் போவதில்லை. ஆரியக் கூத்தாடி, முட்டாள் ராஜாக்களை மயக்கி, ஜாதி மத பேதங்களை பாரத நாட்டில் நிலைக்க வைத்த காலம் மலையேறி விட்டது. கலப்புத் தொகுதியில் குளிர் காய நினைக்கும் பார்ப்பார புழுக்களெல்லாம் தனித்தொகுதி நெருப்பில் சுட்டெரிக்கப் படப்போகிறது. இதில் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. இதுவே தகுதியும், தருமமும், முறையுமாகும்.

தாதுபுஷ்டி லேகியங்கள்.

தாருல் இஸ்லாம் தலையங்கத்தின் சிலபகுதிகள்.

என்றைக்கு இந்தியநாட்டில் மேனாட்டு மருத்துவக்கலை பரவியதோ, அன்றே இந்திய மக்கள் தங்கள் மருத்துவக் கலையைக் கை சோரவிட்டனர். இன்று இந்தியர்கள் இந்தியக்கலையிலும் வல்லுநராயிராமல் இரண்டுங்கெட்ட ஒரு நிலையில் இருந்து விழிக்கின்றனர். இந்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ள எண்ணி மேனாட்டினர் 'பேட்டெண்ட்' மருந்துகளை ஏராளமாக இந்தியாவில் கொட்டிக்குவித்து இந்தியரின் பணத்தையேயன்றிப் பலத்தையுங் கொள்ளை கொள்ளுகின்றனர்.

இரண்டுங்கெட்ட நிலையிலிருக்கும் இந்தியரோ மேனாட்டினரின் யுக்தியை இன்றைத்தினம் கண்டு கண்விழித்துக்கொண்டும், பிழைக்க வேறு வகையின்றித் தங்கள் புராதனக் கலையையுமறியாது வீணே அந்த ஓலைச்சுவடியையும், இந்த சாஸ்திரக் குப்பையையும் கிளறிப் 'பேட்டெண்ட்' மருந்துகளைச்செய்து விடுகின்றனர்.............

நாடி பார்க்கவும் பலர் அறிந்து கொள்ளவில்லை. உடற்கூறு, சீதோஷ்ணத்திற் கேற்ப மருந்துச்சரக்குகள் பிரயோகித்தலும் பலர் அறிந்துகொண்டில்லை. இந்நிலையில் ஓரிருவர் தவிர அனேகர் தமக்குத்தெரிந்தவரை மருந்துகள் தயாரித்து டாக்டர்களாக ஆகிவிடுகின்றனர். இவர்கள் ஒரு புறங்கிடக்க உடலில், குடல் வயிற்றுக்குள்ளிருக்கிறதா? அல்லது தலைக்குள்ளிருக்கிறதா? என்பதையும் அறியக்கூடாத எத்தனையோ 'பேர்வழிகள்' இன்று இந்தியாவில் சாதாரண புத்தகங்களைத் தொழிற்சாத்திரங்களைப் படித்துவிட்டு, மருந்து விற்கும் தொழிலில், மருந்துகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு, உபயோகமற்ற நஞ்சே போன்ற மக்களைச் சிறுகச்சிறுக மாய்க்கும் மருந்துகளைச் செய்து, மார்க்கெட்டுகளை நிரப்பி வருகின்றனர். எத்தனை சேர் அபின்கள், கஞ்சாக்கள், ஊமத்தை வித்துகள் சிறிதுவேறு வஸ்துக்களுடன் கலக்கப்பட்டு மருந்துகளாகக்கடைகளில் விற்கப்படுகின்றன! ஊர்க்குருவி லேகியங்களென்ன? சிட்டுக்குருவி லேகியங்களென்ன? மதனகாம லேகியங்களென்ன? அம்மம்ம! என்னென்ன அற்புத லேகியங்கள்! இந்திய நாட்டுப்பத்திரிகைகளுள் தாது பஷ்டி லேகிய விளம்பரமில்லாத பத்திரிகை ஏதேனுமுண்டோ? மாத்திரைகளும், லேகியங்களும், மாஜூன்களும், முறப்பாக்களும், என்னென்ன விதமானபெயர்களாலெல்லாமோ விற்கப்படுகின்றன! தம்பனமாத்திரைகளெத்தனை? இவைகளை வாங்கியுண்டு நாசமாய்ப்போன மாக்களெத்தனைபேர்? ஏன்? அவர்கள் செய்யும் படாடோபத்தால் மாக்கள் உண்மையறிய இடமில்லாது அவைகளையே வாங்கியுண்டு, நாளுக்கு நாள் இல்லாத பிணியிலும் இவர்களாகவே சென்று அகப்பட்டுக்கொள்ளுகின்றார்கள்.

எனவே, இத்துறைகளில் மக்கள் ஏமாந்து நாசமடைவதைத் தடுக்க அரசாங்கத்தார் முக்கிய கவனம் எடுத்துக்கொள்ள வேண்டியது மிகமிக அத்தியாவசியமாயிருக்கின்றது. மேனாட்டு மருந்துகளில் கலப்பும் சத்தற்றவுமான பொருள்கள் சேர்க்கப்படுகின்றனவா? அவ்வாறான மருந்துகளே இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா? என்று ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அக்கமிட்டி ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கை மிகவும் ஆழ்ந்து ஆராய்ந்து மருந்துச் சரக்குகளை விற்பனை செய்வதைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குச் சட்டம் செய்யவேண்டுமென்று மட்டும் கூறிவிடாது, அந்தச்சட்டம் அமுலில் வருவதற்கான வழிகளைக்கைக்கொள்ள வேண்டுமென்றும், ரசாயனச்சாலைகள் தாதுவர்க்கப் பரிசீலனைக்கூட்டங்கள் வைத்தியர்கள் ஆலோசனைத் தலங்கள், ஆலோசனை போர்டுகள், பரிசீலனை செய்யும் ஏஜென்ஸிகள் போன்றவை ஏற்படுத்தி, அவற்றின் மூலமும் தீவிரமாக வேலை செய்யவேண்டுமென்றும், சிபார்சு செய்திருக்கின்றது. நாம் இதனை மனமாரப்பாராட்டுவதுடன், அதேபோன்று இந்நாட்டுப்போலி வைத்தியர்களின் மோசச்செயல்களை விளக்கி அவர்களை அடக்கவேண்டுமென்று நாம் கோருகிறோம்..,,,,,

---

புகைப்படத்திற்கு ஓட்டு.

—(::)—

இனி வரப்போகும் ஸ்தலஸ்தாபனத்தேர்தல்களில் ஒருபுதிய விதியை அனுஷ்டிக்கப்போவதாகத்தெரிகிறது. அதாவது:—"தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி பாலட் பெட்டிகள் வைக்கப்படும். அப்பெட்டிகளில் அந்தந்த அபேட்சகர்களின் புகைப்படம் ஒட்டப்பட்டிருக்கும். எழுதப்படிக்கத் தெரியாத ஓட்டர்கள் தமக்கு இஷ்டப்பட்ட அபேட்சகர்களுக்கு ஓட்டுப் போடவேண்டுமானால் இந்த புகைப்பட அடையாளத்தைக் கொண்டு ஓட்டுக் காகிதத்தை அப் பெட்டிகளில் போட்டுவிடலாம். கண்தெரியாதஓட்டர்கள் தாம் இன்னாருக்கு ஓட்டுப் போடுவதாக வாய்மூலமாகச் சொல்லிவிடலாம். ஆதிதிராவிடர்கள் தாது ஒடுக்கப்பட்ட ஸ்தானங்களுக்குப் போட்டி அபேட்சகர்களிருந்தால், தங்கள் கைகளைஉயர்த்துவதன் மூலம் ஓட்டுப்போடலாம். இரண்டு அபேட்சகருக்குச்சரிசமமான ஓட்டுகள் கிடைத்தால் அப்பொழுது சீட்டுக்குலுக்கிப் போடுவதன் மூலம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்!

இந்த முறையில் சென்னை அரசாங்கத்தார்தேர்தல் விதிகளை தயாரித்துக்கொண்டிருப்பதாகப் பிரஸ்தாபப் படுகிறது. இதன் உண்மை விளங்கவில்லை.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[7ம் பக்கத் தொடர்ச்சி.]

களும், அவர்களால் செய்து விற்கப்படும் மருந்துக்கடைகளும் இருந்து விட்டால் போதுமா? இதற்காக அரசாங்கத்தார் நாட்டில்--அனுபோகத்தில் வழங்கிவரும் வைத்தியமுறையை அலட்சியஞ் செய்துவிட்டு அந்த நாலைந்து பூணூல்காரர்களுக்காக ஏழை மக்களின் வரிப்பணத்தைச் செலவு செய்யவேண்டுமா? என்று கேட்கின்றோம்.

ஒரு சமயம் சமஸ்கிருத ஆயுர்வேத வைத்தியத்தைப் பார்ப்பனர் படித்து அரசாங்கவைத்திய சாலைகளில் உத்தியோகம்பெற்று வந்தால் அதனால்தான் யாருக்கு நன்மையுண்டு என்று பார்ப்போம். சமஸ்கிருதம் படித்த பார்ப்பனர்கள் கட்டாயம் வருணாச்சிரமதர்ம வாதிகளாகவும், ஜாதித்துவேஷம் பாராட்டுகிறவர்களாகவுந்தான் இருக்கவேண்டும். இத்தகைய துவேஷபுத்தியுடைய வைத்தியர்கள் பொது ஜனங்களுக்கு எப்படி வைத்தியஞ் செய்வார்கள்? பிராமணரைத் தவிர மற்றவர்களைத் தொட்டால் தீட்டு ஒட்டிக் கொள்ளும் அல்லவா? அதற்காக பட்டுத் துணியைக் கையில் போட்டு நாடி பார்க்கும் பழைய முறையைத்தானே கொண்டுவருவார்கள். இந்தவிதமான மனப்பான்மையுள்ளவர்கள் எப்படி ஒவருடைய வியாதியை அறிந்து தகுந்த மருந்துகளைக் கொடுத்து அதைக்குணப்படுத்த முடியும்? என்பன போன்ற விஷயங்களை நன்றாய் ஆலோசனை செய்து பார்க்க வேண்டுகிறோம். நிற்க.

இவ்வாறு பார்ப்பனர்கள் "ஆயுர்வேதவைத்தியத்திற்கு ஆபத்து வந்து விட்டது" என்று மாரடித்துக் கொள்வதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? இப்பொழுதுள்ள இந்தியவைத்திய கலாசாலையில் சித்தவைத்தியம், யூநானி வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் ஆகிய மூன்றின் பாகங்களும் போதிக்கப்பட்டு வருவதாகவே கேள்விப்படுகிறோம். அப்படியிருந்தும், இவர்கள் கூச்சலிடுவதற்குக் காரணம் பொறாமையும், துவேஷபுத்தியும், வயிற்றெரிச்சலுந் தவிர என்ன தான் வேறு இருக்க முடியும்?

நமது நாட்டில், பரம்பரையாக வைத்தியத் தொழில் செய்து வருபவர்கள், மருத்துவகுலத்தினர் என்பது யாவரும் அறிந்த விஷயம். அப்படியிருந்தும், "பரம்பரை ஆண்டியா? பஞ்சத்திற்கு ஆண்டியா?" என்றபடி வயிற்றுப்பிழைப்புக்காக வயித்தியங்கற்றுக் கொண்ட பார்ப்பனர்கள் தங்களைப் பரம்பரை வைத்திய மகான்களென்றும் கூறிக்கொண்டு, தமிழ் வைத்தியத்திற்கு உலைவைக்க வழிதேடுகின்றனரே, இது எவ்வளவு நாணயமற்ற செயலாகும்? நாம் இவ்வளவும் கூறியது, "தமிழ் வைத்தியந்தான் நமக்கு வேண்டியது, மற்ற வைத்தியங்கள் தேவையில்லை" என்ற எண்ணத்தோடு அல்ல, பார்ப்பனர்கள் எந்தெந்த வகையில், தங்கள் ஆதிக்கத்தை நுழைக்க வேலை செய்கிறார்கள் என்பதைக் காட்டவே இவ்விஷயத்தை எழுத முன் வந்தோம். ஆபத்தில்லாமல், சுலபமான வழியில் வியாதிகளை நீக்கக் கூடிய வைத்திய முறை எந்த நாட்டு வைத்தியமாயிருந்தாலும் அதை நாம் ஆதரித்து விருத்தி செய்ய வேண்டுமென்பது தான் நமது அபிப்பிராயம். ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டது; வெகுகாலமாக இருந்து வருவது, ஆகையால் அதைத்தான் அரசாங்கத்தார் ஆதரிக்க வேண்டும் என்று சொல்லும் மூளையற்ற—துவேஷவாதத்தை நாம் கண்டிக்கிறோம். இந்த மூளையற்ற பிடிவாதத்தினாலும், எண்ணத்தினாலுமே, நமது நாட்டுத் தொழில்களும், கலைகளும் நாசமடைந்தன என்பதை நினைப்பூட்டுகிறோம். இவ்விடத்தில், மேலே கூறிய ஆயுர்வேத சபைக் கூட்டத்தில் தலைமை வகித்த திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் கூறிய "இங்கு கூடியுள்ள ஆயுர்வேதபண்டிதர்களுக்கு ஒரு வார்த்தை. நீங்கள் கேவலம், ஆஷாடபூதிகளாகச் சொன்னதையே சொல்லிக்கொண்டு பழய ஏட்டைப் புரட்டிக்கொண்டிருக்கக்கூடாது. இந்தப் பெரிய சாஸ்திரத்தை மேன்மேலும் முன்னுக்குக் கொண்டுவந்து தற்கால அவசியத்திற்கு ஏற்றவாறு ஆகர்ஷணை செய்ய வேண்டும்" என்னும் வார்த்தையையே நாமும் எடுத்துக் காட்டுகிறோம். திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள் எந்தக் கருத்தோடு கூறியிருந்தாலும், அது வார்த்தையளவில் கண்மூடித்தனமுள்ள வைதீகர்களுக்கு நல்ல சவுக்கடி கொடுக்கக்கூடியதாகவே யிருக்கிறது என்பதை நினைவூட்டி முடிக்கிறோம்.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வசதி இல்லாமையால் நெருக்கத்தால் மக்கள் கொடிய நோய்வாய்ப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஏழடிக்கல்லுக்கு சாமி எனப்பெயரிட்டு, அதற்கு மாடமாளிகைகள் என்ன, கூடகோபுரமென்ன, தீர்த்த குளங்களென்ன, வசந்த மண்டபங்கள் என்ன, குட்டிக்கோவில்களெத்தனை இருக்கின்றன? இவைகளை எல்லாம் இடித்துப் பரப்பித் தரைமட்டமாக்கினால் அவ்விடங்களில் குடியிருப்புக்கு வசதியான நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டலாம். அவைகளில் எத்தனை ஆயிரம் ஏழை மக்கள் சுகமாய் வாழ உதவும் என்பதை யோசித்துப் பாருங்கள். அதோடு மக்கள் சாமியின் நம்பிக்கையால் அழிக்கும் பொருள்களும் மீதப்படும் அல்லவா?

சோதர சோதரிகளே! ஒரு கோவில் கொஞ்சம் பழுதாகி ஒழுகிக் கொண்டிருந்தால் அதை உடனே புதுப்பித்து சீர்திருத்தி கும்பாபிஷேகமும் செய்து விடுகிறார்கள். ஏன் ஒழுகினால் அக்கல்லுக்கு ஜன்னிபா பிறந்துவிடுகிறது. மனிதப்பிறவியாகிய ஏழை சகோதரர்கள் கோடிக்கணக்கில் இருக்க இடமில்லாமல் தவிப்பதை உங்கள் கண்கள் பார்க்கவில்லையா? இந்தியாவைக் குறித்து கன்னி மேயோ எழுதிய புஸ்தகத்திற்கு கமிஷனின் அடிமை என்று பெயரிட்டது எவ்வளவு பொருத்தமான பெயர். வெட்கமில்லாமல் சுயமரியாதை இயக்கம், கோவில் வேண்டாம் இடி, தீர்த்த குளம் வேண்டாம் தூற்று விடு, சாமிகள் வேண்டாம் ஒழித்துவிடு என்று சொல்லுகிறது என எண்ணெயில் போட்ட பணியாரம் போல் துள்ளிக்குதிக்கிறீர்களே ஏன்? இராமசாமியாரையும், அவர் தம் கூட்டங்களையும் நாஸ்திகர்கள் என்றும், "குடி அரசு" பத்திரிகையை கையால் தொடுவதும் பாவம் என்று பறைசாற்றி அடித்துக் கொள்ளுகிறீர்களே ஏன்? நீங்கள் என்ன கூறினாலும், இனி ஒன்றும் பலிக்காது என்பதை உணருங்கள். நாங்கள் சொல்லும் தெய்வங்கள் ஒழிந்தால் தான் எல்லோரும் சுதந்திரம் பெறலாம் என்பதை நன்றாய் யோசித்துப்பாருங்கள்!

சீர்திருத்தத்திருமணம்.

30-11-31ந் தேதி காலை 10 மணிக்கு சென்னை பிரம்ம சமாஜ மண்டபத்தில் திரு. பி. வி. மாணிக்கநாயக்கர் அவர்களின் குமாரத்தி திருமதி ஜீவமாணிக்கம் பி. ஏ. அவர்களுக்கும், திரு டி. முருகேசம் அவர்களின் குமாரர் திரு. முருகேசம் செல்லப்பா பி. ஏ. அவர்களுக்கும் சர். ஆர். வெங்கட்டரத்தினம் நாயுடு அவர்களால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. மணமகனும், மணமகளும் மோதிரம் மாற்றிக்கொண்டனர். திருமணத்திற்குப் பல பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவை நகர சபை தேர்தல்.

காங்கிரஸ்--சேர்மன் கக்ஷி ஒப்பந்த ரத்து.

வரப்போகும் நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பது சம்பந்தமாக காங்கிரசுக்கும் சேர்மன் கக்ஷியினருக்கும் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும், காங்கிரசுக்கும் சேர்மன் கக்ஷியினருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை நடத்தி வைக்க முடியவில்லை என்றும், ஒப்பந்தத்தை ரத்துசெய்து விடுவதென்று முடிவு செய்யப்பட்டதென்றும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி திரு. கே. சுப்ரமணியம் தெரிவிக்கிறார்.

இராசீபுரம் மகாநாடுகள்.

27-11-31ந் தேதி இராசீபுரம் தாலூகா விவசாயிகள் மகாநாடு, இராசீபுரம் தாலூகாவேளாளர் மகாநாடு ஆகியவைகள் இராசிபுரம் சரஸ்வதி எலக்ட்ரிக் தியேட்டரில் நடைபெற்றன. வேளாளர் மகாநாட்டிற்கு பழையகோட்டைப்பட்டக்காரர் உயர்திரு. நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரும், விவசாயிகள் மகாநாட்டிற்கு கன்னிப்பட்டி மிராஸ்தார் திரு. வி. கே. இராமசாமிக்கவுண்டரும் தலைமை வகித்தார்கள். வேளாளர் மகாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் தீண்டாமை விலக்கு, மூடப்பழக்க வழக்கம் முதலியவைகளைப் பற்றிப் பேசினார். இதைத் தலைமை வகித்த பழையகோட்டைப்பட்டக்காரர் அவர்கள் தமது முடிவுரையில் ஆதரித்துப் பேசினார். பின் இரண்டு மகாநாடுகளிலும் சில தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கூட்டத்தில் குழப்பம்.

நவம்பர் மாதம் 28ந்தேதி ஹிஜிலி சிட்டகாங் கொடுமைகளைப்பற்றி லண்டன் எசக்ஸ்ஹாலில் திரு. சென்குப்தா முதலியவர்கள் பேசுவார்களென அறிவிக்கப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கு திரு. சக்லத்வாலாவின் தலைமையில் ஏராளமான பொதுஉடமைக்கட்சியினர் கூடியிருந்தனர். கூட்டத்திற்கு திரு பிரெயில்ஸ்போர்டு தலைமைவகித்தார். அங்கு கூடியிருந்த பொதுஉடமைக் கட்சியினர் திரு. பிரெயில்ஸ்போர்டு இந்தியத்தொழிலாளிகளின் விரோதியென்று கூச்சலிட்டதுடன் திரு. சக்லத்துவாலா தான் தலைமைவகிக்க வேண்டுமென்று கூச்சலிட்டு திரு. சென்குப்தா பேசமுடியாதபடி தடுத்தனர். பின் கூட்டத்தில் குழப்பம் அதிகரித்தது. கடைசியில் கூட்டம் குழப்பமாகவும், திரு. சென்குப்தா பேசமுடியாமலும் போகவே குழப்பத்தை ஒரு டஜன் போலீசார்கள் வந்து அடக்கி சமாதானம் செய்தனர் கூட்டம் கலைந்தது.

காந்தீயமும் சுயமரியாதையும்.

(வடசை நகர் வாசி P. M. பெருமாள் B. A.)

இந்திய மக்களனைவர்க்கும் பிரதிநிதியெனக் கூறிக்கொள்பவரும், இந்தியமக்களனைவர்க்கும் தம்மிடத்தேதான் நம்பிக்கை இருக்கின்றதென சதா அறைந்துகொண்டிருப்பவரும், வருணாசிரமதர்மத்தைக் குரங்குப்பிடியாய்ப்பிடித்துக்கொண்டு வியாக்கியானம் செய்பவரும் ஆகிய திரு. காந்தியார் கடைப்பிடித்துவரும் வைதீகக்கொள்கைகளையும், நாட்டிடையே பெருங்கிளர்ச்சி செய்துவரும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும் ஒருங்கே அமைத்து ஆராய்ந்தால் நம்நாட்டு விடுதலைக்கு எதுவேண்டுமெனத்தெள்ளிதில் புலனாகும்.

காந்தீயம் என்பது என்னை எனச்சிறிது சிந்தியுமின்! நால்வகைச்சாதியை நாட்டினில் நாட்டி ஒருவர் தொழிலை மற்றவர் பின்பற்ற ஆசிக்கலாகாது எனக்கூறுவது எது? தகப்பன், பாட்டன் பூட்டன் செய்த தொழிலையே நாமும் செய்துதான் தீரவேண்டும் எனவிரும்புவது எது? எது? மாதம் மும்மாரிபெய்வான் வேண்டியும், வேதபாராயணம், கதாகாலட்சேபம் செய்வான் வேண்டியும் ஓர் வைதீகக் கோஷ்டியாகிய பார்ப்பனர்கள் இருக்கவேண்டுமெனக் கூறுவது எது? எது? எது? வருணாச்சிரம (அ) தர்மமல்லவா! வருணத்தைப்பின்பற்றும் காந்தியாரின் கூற்றல்லவா! காந்தியாரை ஆட்டிவைக்கும் அந்தவைதீகத்தின் பித்தலாட்டமல்லவா !!

பன்னூறு ஆண்டுகளாய் வைதீகப்பிசாசு நம் நாட்டினரை பீடித்திருந்தபடியாலும், எண்ணிறந்த மதங்கள், எண்ணிறந்த ஜாதிகள் வகுப்புக்கள் நம் நாட்டிடையே மலிந்திருந்தபடியாலும், மேல்ஜாதி, கீழ்ஜாதி, உயர்ந்தவன், தாழ்ந்தவன், தீண்டத்தக்கான், தீண்டத்தகாதான், எனப்பல வேறு வித்தியாசங்கள் நம்மிடையே கற்பிக்கப்பட்டபடியாலும், என் ஜாதி, என்குலம், என்மதம் என தற்பெருமைப்பாராட்டி குறுகிய நோக்குடன் வீரம்பேசும் மாக்கள் பலர் நம்நாட்டின்கண் மலிந்தபடியாலும், ஒற்றுமை வளர்ச்சிகுன்றி பிளவுகள் பல தோன்றி நாடு அடிமைக்குழியில் ஆழ்ந்ததென கூறல்மிகையாகாது.

ஆகவே அடிமைத்தன்மைஒழியவேண்டுமானால், அன்னியர் ஆட்சி நீங்கவேண்டுமானால், சுதந்திர தாகம்தணியவேண்டுமானால் வேண்டுவது என்ன? ஒற்றுமையல்லவா? நம்மிடையே ஒற்றுமைவிளையாததின் மர்மம் என்ன? இந்து முஸ்லீம் பிணக்கிற்கு காரணம் என்ன? வைதீகப்பிசாசன்றி மற்றென் சொல்வோர் கற்றோர் ஒருவைதீகமுஸ்லீம்தன்மதத்தைக்காப்பாற்ற பிறமதத்தினரை ஹிம்சிக்கின்றான் அதுபோன்றே ஒரு வைதீக இந்துவும் தன் மதத்தைக்காப்பாற்ற மற்றவனை இம்சைசெய்கின்றான். இவ்வாறு இருவர்க்கும் உண்டாகிய சண்டை இருசமூகத்தினரையும் பாதித்து நாட்டின் முற்போக்குக்குத்தடைகல்லாய்இலங்குகின்றது. இதற்கு பல்வேறு சான்றுகள் நம் நாட்டிடையே நிகழ்ந்துள்ளன. கான்பூர், சிட்டகாங் போன்ற இடங்களில் நேர்ந்த சச்சரவுகளுக்கு அடிக்காரணங்கள் கண்டு தெளியுதும். ஒரு மதத்தினருக்கு மற்றவர்பால் ஏற்படாத நம்பிக்கையின்மையே இதற்குக் காரணமெனக்கூறலும், ஒருவர் மற்றவர் பால் வைத்திருக்கும் துவேஷ புத்தியும் தன்மதமே சீரியதென கண்மூடித்தனமாய் நம்பி அதனைப்பரப்புவதிலேயே நாட்டங்கொண்டிருக்கும் அவாது மதவெறியுமே காரணமெனக்கூறலும்உண்மைக்கு முறண்பட்டானதன்று.

அன்னிய ஆட்சியின் காரணமே இவ்வொற்றுமையின்மையை வளர்க்கின்றதெனக்கூறும் அன்பர்களுக்குச்சில மொழிகள் கூறுவோம். அன்னிய ஆட்சியோ மதநடுநிலைமை வகித்திருக்கின்றது. எவ்விதமான அட்டூழியங்களும், எத்தகைய நிஷ்டூரங்களும், மதத்தின்பேரால், மதநூல்களின் பேரால், மதாச்சாரியர்களின் பேரால், சாமியின் பேரால், சாதிப்பழக்க வழக்கங்களின் பேரால் நடத்தப்பட்டுவருகின்றன. அரசாங்கமோ இதன் கண் தலையிடுவதற்கு யாதொரு ஏதுவுமில்லை. ஏனெனவினவின் மதநடுநிலைமை எத்தகைய சீர்திருத்தங்கொண்டுவரப்பட்டாலும் (உதாரணமாக சாரதாசட்டம்) மதத்தின் பெயராலும், சாமியின் பெயராலும், சாதிபழக்க வழக்கத்தின் பெயராலும் ஆட்சேபிக்கப்பட்டு தடைப்படுத்தப்படுகின்றன. தீண்டாமைப்பேயை நிலைநிறுத்த மதத்தின் பெயரால் சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன. ஞாயத்திற்கும், உண்மைக்கும், மனித உரிமைக்கும் போராடவேண்டிய அரசாங்கம் மதத்தில் தலையிடவேண்டி இருப்பதோடு மதநடுநிலைமைக்கும், சாதிபழக்கவழக்கங்களுக்கும் பங்கம் விளைவிக்க நேரிடுகின்றது. வைதீகர்களும் கூட்பாடுபோடத்தொடங்கிவிடுகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை. நம்மிடையே மலிந்துகிடக்கும் ஒற்றுமையின்மையால் விளையும்பயனை அரசாங்கம் ஒருகருவியாகக் கொண்டு நம்மை ஆட்சி செய்து வருகின்றது என்று சொன்னால் அதனை ஒருவாறு ஒத்துக்கொள்ளலாமே ஒழிய அரசாங்கமே நமது ஒற்றுமையின்மைக்கு முழுக்காரணமெனக்கூறின் அது நமது பேதமையின் பாற்பட்டதென தைரியமாகச்சொல்வோம். எனவே மதநடுநிலைமையையும், அதனால் விளையும் ஒற்றுமையின்மையையும் தமது ஆயுதங்களில் இரண்டாகக்கொண்டு அரசுசெலுத்திவந்த அன்னிய அரசை அகற்ற, அதேமதநடுநிலைமையைக்கொண்டுமதத்திற்கும்,மதஸ்தாபனத்திற்கும், ஜாதிப்பழக்கவழக்கங்களுக்கும் பூரணபாதுகாப்பு முழு உத்திரவாதமும் கொடுக்கின்ற ஓர் இயக்கம்பாடுபடுகின்றது என்று சொன்னால் அவ்வியக்கத்தை போலிப்பிரசாரசபை என்று சொல்வதா? விஷமப்பிரசாரசபையென்று சொல்வதா? அன்றி பாமரர் கண்ணில் மண்ணை அள்ளிப்போட்டு வயிற்றுப்பிழைப்பு நடத்தும் புரோகிதக்கூட்டம் என்று சொல்வதா? என்னவென்று சொல்வது?

ஆகவே விடுதலைக்கு முட்டுக்கட்டையாய் இருப்பது ஒற்றுமையின்மை என உய்த்துணர்ந்து ஒற்றுமையைப்பெருக்கும் பொருட்டுத் தொண்டாற்றிக் கொண்டிருப்பது சுயமரியாதை இயக்கம் என்றுதான் சொல்லவேண்டும். சுயமரியாதையின் முடிபு இங்ஙனம் இருப்ப காந்தீயத்தின் முடிபு எங்ஙனம் இருக்கின்றதென சிறிதுஆராய்வோம். இந்து முஸ்லீம் பிணக்கு தீர்ந்தால் ஒழிய, காந்தி இர்வின் ஒப்பந்தப்படி அரசாங்கம் நடந்தாலொழிய, வட்டமேஜை புகேன் எனக்கூறிய திரு. காந்தி-இந்தியாவிலேயே ஓர் முடிவுக்குவராது லண்டன் போவதனால் பயனில்லையெனக்கண்ட திரு. காந்தி—ஒன்றுமே செய்யாது 'கடவுளின்' செயலாலோ அன்றி 'இயற்கையின்' வன்மையாலோ லண்டன் செல்ல நேர்ந்தது காந்தீயத்தின் அபாரசக்திபோலும். லண்டன் சென்ற திரு. காந்தி சிறுபான்மையோர் கமிட்டியில் ஓர் முடிவுக்கும் வாராது, உயிர்போனாலும் தீண்டாதாருக்குத்தனி உரிமை கொடேன் எனக்கூறுவதும் அன்னிய ஆட்சிபோய் சுய ஆட்சி கிடைத்துவிட்டால் (தனது வைதீகத்தையும், இந்து மதத்தின் தத்துவங்களையும் விட்டுக்கொடாமலேயே) இந்து முஸ்லீம் பிணக்கு தீர்ந்துவிடுமெனக் கூறுவதும் காந்தீயத்தின் பாற்பட்டதெனச்சொன்னால் பழுத்த தேசிய பித்தர்கள், கொழுத்த வைதீகக்குடுக்கைகள் ஆத்திரப்படார் என கருதுகின்றோம். என்னே காந்தீயம் போன போக்கு.

காந்தீயத்தின் வைதீகப்போக்கு இங்ஙனம் இருப்ப தீண்டாமையை அகற்ற முயலும் சுயமரியாதைக்கட்சியினர் - பகுத்தறிவு இயக்கத்தினர்-மனிதற்குமனிதர் வித்தியாசம் கற்பிக்காத தன்மதிப்பு இயக்கத்தினர் தீண்டாதாருக்கும் மற்றும் இதர சிறு பான்மையோருக்கும் தனிஉரிமை விரும்புவதில் மர்மம் என்ன? என ஆத்திரக்காரர்கள் ஐயுற்றுவினவலாம். தீண்டாமைநம்நாட்டைவிட்டுஎந்தநாளில் ஓட்டப்படுகின்றதோ. தீண்டாதார் என ஒருவகுப்பு நாட்டின்கண் இல்லவேயில்லையென அரசாங்கத்தாரால் எந்தநாளில் பறைசாற்றப்படுகின்றதோ. சிறுபான்மையோருக்கு பெரும்பான்மையோரிடம் எந்தநாளில் நம்பிக்கை பிறக்கின்றதோ அந்த நாள் வரையும் சிறுபான்மையோருக்கு விசேஷத்தனி உரிமை கொடுக்கத்தான்வேண்டும் வேண்டும் என்பதை கூரை மீது நின்றும், கோபுரத்தின்மீது நின்றும், மலையுச்சியின்மீது நின்றும் கர்ஜிப்போம். ஆகையால் மேல்சாதியென பெருமை பேசும் பகுத்தறிவாளர்காள் உங்களிடம் தீண்டாதார் எனக்கூறப்படுவோர் ஏதேதோ பிச்சை கேட்கின்றனர் என்று கருதல் வேண்டாம்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பெயரால் ஏழைமக்கட்கு கூலிபோகின்றதென்பது எவ்வளவு? ஒரு வாரத்தில் வேலை செய்யும் ஒருவனுக்கு கூலி ஒரு ரூபாய் அல்லது ஒன்றரை ரூபாய் கிடைத்தால் அவன் குடும்பம் வயிறுவளர்க்க முடியுமா? தினம் இரண்டு ரூபாய் சம்பாதிக்கும் தொழில்வசதியிருக்கும்போது, வாரம் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் சம்பாதிக்க ஏழைமக்களை கட்டாயப்படுத்துவது நீதியா? அதே கைத்தொழிலை மேலென்றுகருதி தனது அதிகவருமானமுள்ள தொழிலைவிட்டு எந்த பணக்காரனாவது குடிசைத்தொழிலைப்பின்பற்றுகின்றானா? இல்லை காரணம் என்ன என்று கருதுகின்றீர்கள்; ஏழை என்றும் ஏழையாகவே யிருப்பதற்குச் சிறந்த கைத்தொழில் குடிசைத்தொழில்தான். அதனைப் பணக்காரன் எப்படி பின்பற்றி எப்படிபணக்காரனாகவே யிருக்கமுடியும் ஆனால் பணக்காரன் அதிகவிலைகொடுத்து கதர்வாங்கி கட்டிக்கொண்டு தன்னை தேசபக்தர் என்று கூறிக்கொண்டு ஏமாற்றலாம்? நான் இப்படியெல்லாம் கூறுவதால் ஏழைகளுக்கு கிடைக்கும் சிறு கூலிக்குக் கூட வேறு வழியில்லையேயென்று கூறலாம். நான் அதையேமறுக்கின்றேன். எப்படியெனில் ஒரு சமூகத்தை நீங்கள் தாழ்ந்தவர்களென்றும், ஏழைகள் என்றும், கூலிகள் என்றும் அடிமைகளென்றும் கூறி அவர்களிடம் அதிக ஊழியம் பெற்றுக்கொண்டு சிறு ஊதியம் கொடுக்கிறீர்கள், அதனும் அவர்கள் வறுமையாலும் பசியாலும் கஷ்டப்பட்டு தவிக்கின்றார்கள். இப்படி தவிக்கும் மக்கள் சிலகாலம் உண்மையிலேயே கஷ்டப்பட்டால் திடீரென்று புதிய உணர்ச்சி பெற்றும், கண்திறந்தால் என்னநடக்கும்? மடாலய சொத்துக்களும், கோவில் சொத்துக்களும், பொது சொத்துக்களும், பணக்காரர் சொத்துக்களும் தங்கள் உழைப்பின் பலன் தான்; ஆனால், அது தங்கட்கு உதவாமல் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை வெளிப்படுத்தி எல்லா மக்களும்வறுமைப் பசிபோக்க முயற்சிப்பார்கள்; அன்றுதான் எங்கும் "சமதர்மம்" தாண்டவமாடும். அதைவிட்டு குடிசைத்தொழிலென்ற பெயரால் மக்களை என்றைக்கும் அடிமையாகவும், ஏழையாகவும், கூலியாகவும் இருப்பதற்குச்செய்த கொடுஞ்சூழ்ச்சியே யாகும். இதற்கு ஆதரவுபுரிபவர்கள் தேசத்துரோகிகள் என்று கூறலாம். அப்படிக்கூறுவதற்காக நமது கருத்தை கூறாமலிருக்க முடியாது.

காந்தி.

தோழர். காந்தியவர்களைப் பற்றியும், அவரது திட்டங்களைப் பற்றியும் நான் அதிகம் கூறத்தேவையில்லை. காங்கிரஸ் பெயராலும், சீர்திருத்தத்தின் பெயராலும் நம் நாட்டில் தியாகஞ் செய்து உயிர்நீத்த பல அறிஞர்களுண்டு. அவர்களையெல்லாம் விட காந்தியவர்கள் ஒன்றும் அதிகம் செய்துவிட்டதாகக் கூறி விடமுடியாது. பின்னர்ஏன் அவரை மகாத்மா வென்றும், தெய்வ அவதாரமென்றும், விஷ்ணுவதாரமென்றும், கலியுக அவதாரமென்றும் விளம்பரம் செய்கின்றார்கள். யார் விளம்பரம் செய்கின்றார்கள்? எதற்காக விளம்பரம் செய்கின்றார்கள்? என்பதையும் பகுத்தறிந்து பார்த்தால் விளங்கிவிடும்.

தோழர். காந்தியவர்களை மகாத்மா வென்றும், அவதாரமென்றும், பார்ப்பனர்களும், சாஸ்திரிகளும் தான் பிரசாரம் செய்கிறார்கள். அவர்களைச் சார்ந்த பார்ப்பனப் பத்திரிகைகள் தான் பெரும்விளம்பரம்செய்கின்றன. அதன்படி காந்தி ஜெயந்தியும், காந்தி பிரார்த்தனையும்,காந்தி உற்சவ புறப்பாடும், காந்திக்கு கற்பூர தீபாராதனையும், பிரசாத நைவேத்தியங்களும் செய்கின்றார்கள். இப்படியெல்லாம் செய்வதின் நோக்கமென்ன? காந்தியே தெய்வமென்றும், காந்தியின் உபதேசமே கடவுள் உபதேசமென்றும் எல்லா மக்களும் நம்பினால் காந்தியின் பிரசாரத்தால் பார்ப்பனர்கள் என்றும் இந்நாட்டு மக்களை ஏமாற்றிப் பிழைக்க வழியுண்டு. காந்தி பார்ப்பன மதத்திற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யாதிருந்திருந்தால் இப்பொழுது காந்தி யென்று ஒருவர் இருக்கிறார் என்று கூட பிறர் அறியாமல் மறைத்து விடுவார்கள். எனவே இன்று காந்தியவர்கள் மீது புகழ்மாலை பாடுவதெல்லாம் அவர் பெயரால் தங்கள் ஆதிக்கத்தை நீட்டிக்கொள்ளலாமென்பதைத் தவிர வேறில்லை. காந்தி என்ன கூறுகிறார்? "நான் ஒரு சநாதன இந்து, எனக்கு வர்ணாச்ரமத்தில் முழு நம்பிக்கை யுண்டு. எனக்கு புராணங்களிலும், பகவத்கீதையிலும், ஸ்ரீராமர் ராமாயணத்திலும் அளவற்ற நம்பிக்கையுண்டு. கர்மபலத்தையும், பாவபுண்ணிய மோட்சத்தையும் நான் நம்புகின்றேன். நான் செய்யும் ஒவ்வொரு நன்மை தீமைகளையும் கடவுள் அருளால் தான் செய்து வருகின்றேன். எனது விருப்பங்களை கடவுள் தான் நிறைவேற்றி வைப்பாரென்று நம்பி தினம் பிரார்த்தனை செய்துவருகிறேன். இவ்வளவும் கூறிக்கொண்டு தான் காந்தியவர்கள் மக்கள் சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் பாடுபடுவதாகக் கூறுகின்றார்.

இப்படி ஒரு காந்தி நமது பார்ப்பனர்கள் வசம் சிக்கினால் அவர் மகாத்மாவாகமட்டுமன்றோ இருக்கமுடியும்? இன்னும் என்ன என்ன? செய்வார்களோ இப்போது சொல்லமுடியாது எனவே காந்தியின் தியாகத்தாலும், முயற்சியாலும் வரப்போகும் "சுயராஜ்யம்" யாருக்கு நன்மை பயக்கும் என்பதை நீங்களே யோசியுங்கள்.

சுயமரியாதை இயக்கம் என்ன செய்து விட்டது.

நாம் இறுதியாக வலைப்படுவதெல்லாம் நமது மக்களை பார்ப்பன சூழ்ச்சியிலிருந்து விடுதலை பெறும்படி செய்யும் நமது ஆரம்ப வேலையிலேயே நமது முயற்சியையொழிப்பதற்கு பார்ப்பனர்கள் "காங்கிரஸ்" "கதர்" "காந்தி" என்பதின் பெயரால் மாறுவேடம் பூண்டு மதப்பிரசாரமும், பார்ப்பனப்பிரசாரமும் செய்து வருவதை நோக்கும்போது நாம் அதையும் எதிர்த்துப் பிரசாரம் செய்ய வேண்டியவர்களாகின்றோம். நமது ஆரம்ப பிரசாரத்தில் நம்மை மதத்தின் பெயரால் எதிர்த்தவர்கள் இப்போது தேசிய மறைவிலிருந்து எதிர் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் நம்முடன் கூடவேயிருந்து வேலைசெய்து நமது இயக்கத்தைப் பின்பற்றி நம்முடன் கலந்து ஒத்துழைத்த அன்பர்களில் சிலர் இன்று என்ன காரணம் கொண்டோ "தேசீய சுயமரியாதைகட்சி" என்று கூறி விலகி நின்று எதிர்பிரசாரம் செய்வதைக் கேட்க நான் மிகவும் வருத்தப்படுகிறேன். "தேசீயசுயமரியாதை" என்றால் என்ன? என்று எனது பழையநண்பர்களையே கேட்கின்றேன். தேசீயத்தின் பெயரால் நடைபெறும் பார்ப்பனீய மதப்பிரசாரத்தை ஒப்புக்கொள்வதா? சுயமரியாதையின் பெயரால் நடைபெறும் சீர்திருத்தத்தை ஒப்புக்கொள்வதா? இரண்டையும் ஒப்புக்கொள்வது எப்படி முடியும்? ஒருஸ்தாபனம் கொடுமையை ஒழிக்கவேண்டுமென்கிறது. மற்றொரு ஸ்தாபனம் கொடுமையைப்பெருக்க வேண்டுமென்கிறது. இந்த இரண்டுஸ்தாபனங்களின் பெயரையும் சேர்த்து ஒரு பெயரைச்சூட்டிக்கொண்டு ஒரு ஸ்தாபனம் வேண்டுவது அறிவுடைமையா? அதற்கு என்ன கொள்கை? எனவே இவ்வாறெல்லாம் நமக்குள் வீண் குழப்பமும், எதிர்ப்பும், அபிப்பிராய பேதங்களும் ஏற்படுவது நமது வேலைக்கு பெருந் தடையாகும். நமக்குள் எதிர்ப்பின்றி வேலை செய்யும்படி வேண்டுகிறேன். இறுதியாக அன்பர்களே எனது உடல்நிலை காரணமாய் அதிகம் பேசமுடியவில்லை நாம்நமது கடமையைச்செய்து கொண்டுபோவோம் சுயமரியாதை இயக்கம் என்ன செய்து விட்டதுஎன்று கேட்கிறார்கள் சுயமரியாதை இயக்கம் கோடிக்கணக்கான ரூபாய்களும், லக்ஷக்கணக்கான தொண்டர்களும் பெற்றுக்கொண்டுபோராட்டங்கூட்டி வெற்றியோ விடுதலையோ பெறச்செய்வோமென்று எவரிடத்திலும்ஒப்பந்தம் பேசிக்கொள்ளவில்லை நமது விடாமுயற்சியோடு கூடி செய்யும் பிரசாரம் மக்களுக்கு பகுத்தறிவுவளர்ச்சியையும் கண்விழிப்பும் அடையச்செய்யும். அதனால் மக்கள் தன்மதிப்பும், தன்னம்பிக்கையும் அடைவார்கள், அது போதுதான் மக்களிடை "சமதர்மம்" உதயமாகி எங்கும் தாண்டவமாடும், என்று நாம் ஆசைப்படுகிறோம். நமது ஆசை முற்றுப்பெற வேண்டுமானால் நமது தோழர்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். மற்றும் எதாகிலும்கூறுவதாகயிருந்தால் எனது முடிவுரையில்கூறுகிறேன். இம்மகாநாட்டிற்கு என்னை தலைமை ஏற்று நடத்தும்படி செய்த உங்கட்கும், இதுவரை எனது கருத்தை கேட்டுக் கொண்டிருந்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகூறுகிறேன், இம்மகாநாட்டையும் இவ்வளவு சிறப்பிக்க இனிதுமுடியும்படி வைப்பது இங்கு கூடியுள்ள உங்கள் கடமையாகும். எனக்கூறி முடித்தார் பின்னர் தோழர். அ. பொன்னம்பலம் அவர்கள் "மதமும் மக்களும்" என்பதுபற்றி ஒருமணிநேரம் விரிவுரை நிகழ்த்தினார் அதன்பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தீர்மானங்கள்.

1. மாகாணச் சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டுத் தீர்மானங்களை இம்மகாநாடு ஆதரிக்கிறது.

2. வட்டமேஜை மகாநாட்டில் தோழர் காந்தி அவர்கள் தாழ்த்தப்பட்டமக்களுக்குத்தனித் தொகுதி கொடுக்க மறுத்து பிடிவாதஞ் செய்து வருவதை இம்மகாநாடு கண்டிக்கிறது.

3. கதர் தேசிய முற்போக்கிற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்றதல்ல என்பதோடு அது பார்ப்பனரல்லாத மக்களுக்கு நாள் ஒன்றுக்கு சராசரி ஒரு அணா வீதம் கூலி கிடைக்கத் தகுந்த முறையிலும், பார்ப்பனீய பிரசாரம் செய்வதற்குத் துணைபோகும் பார்ப்பன தொண்டர்களுக்கு, சராசரி நாள் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் வீதம் கூலி கிடைக்கத் தகுந்த முறையிலும், அமைக்கப்பெற்ற ஒரு சிறு கூட்டத்தாரின் சுயநலம் நிரம்பிய தொழிலாகப் போய்விட்டதென்றும், கதருக்கு மில்துணியைவிட தேசாபிமானம் என்ற முட்டுக்கொடுக்கையால் இந்திய மில்துணியைவிட இரண்டு மூன்று மடங்குவிலை கொடுத்து வாங்கிப் பார்ப்பனரல்லாத ஏழைமக்கள் பொருளாதாரத் துறையில் பெரும் நஷ்டமடைய வேண்டியிருக்கிறதென்றும், இம்மகாநாடு உணருவதால் நமது இயக்கத்தார் கதரை ஒழித்து இந்திய மில் துணியை ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

4. மாகாண சுயமரியாதை இயக்க கமிட்டியாரின் முடிவை யொட்டி மாகாணத் தொண்டர் கமிட்டியார் உத்திரவிட்டதற்கிணங்க சுயமரியாதைக் கொள்கைகளை இத்தாலூகா முழுதும் தீவிர பிரசாரம் செய்ய வேண்டுமென்று இம்மாகாநாடு தீர்மானிக்கிறது.

5. நமது ஜில்லா போர்டிலிருந்து இக்கரில் ஆதிதிராவிட மாணவர்கட்கு ஓர் சாப்பாட்டு விடுதி நிறுவ வேண்டுமென்று தீர்மானித்துள்ளதை பாராட்டுவதோடு இத்தாலூகாவிலுள்ள எல்லா மிராசுதாரர்களும் தாராளமாக பொருளுதவி செய்து ஷை முய

ற்சிக்கு ஊக்கமளிக்குமாறு இம் மகாநாடு வேண்டுகிறது.

6. இத்தாலூகாவைச் சேர்ந்த கல்லகம் என்ற கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களை உயர்ந்த வகுப்பினரென்போர் கொடுமைப்படுத்தி வருவதை இம்மகாநாடு கண்டிக்கிறதுடன் அதற்குத்தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் இரவு 8 மணிக்கு தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் மகாநாடு இனிது கலைந்தது.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

வழியில்லாதவர்கள்; நம்மால் ஒரு காரியமும் செய்யமுடியாது; என்று நினைத்துச் சோம்பலை மேற்கொள்ள வேண்டாம். நம்மால் மற்றவர்களுக்குச் சமமாக உயர்வடைய முடியும்; மற்றவர்களுக்குச் சமமாக அறிவு பெற முடியும்; மற்றவர்களுக்குச் சமமாகத் திறமைபெற முடியும்; மற்றவர்களுக்குச் சமமாகச் செல்வம் பெற முடியும்; என்று திடமான நம்பிக்கை வையுங்கள்; அதற்காக உழையுங்கள், சோம்பலை ஒழியுங்கள்.

ஃ ஃ

நாம் செய்ய நினைக்கின்ற காரியங்கள் பெரிய காரியங்களாக இருக்கவேண்டும்; அக்காரியங்களைச் செய்வதால் நமக்கும், உலகினர்க்கும் நன்மையுண்டாக வேண்டும். இதுவே தகுந்த செய்கையாகும். இதை விட்டுச்சிறிய காரியங்களைச் செய்ய நினைப்பதும் நமக்கும், பிறருக்கும் தீமை பயக்கும் காரியங்களைச் செய்ய நினைப்பதும் தவறு! தவறு!! தவறு!!!

ஃ ஃ

நமது அறிவின்படி காரியம் செய்வதை விட்டுவிட்டால்-நமது விருப்பப்படி நடக்கவேண்டும் என்பதை மறந்துவிட்டால்-நமது முன்னோர்கள் நாகரிகத்திற்கு மாறாக ஒரு செயலும் செய்யக் கூடாது என்று பிடிவாதம் எண்ணங்கொண்டால்—நாம் சுகம் அடைவது எப்பொழுது? ஒற்றுமை யடைவது எப்பொழுது? சாதி மதங்கள் ஒழிந்து ஒன்றுவது எப்பொழுது? ஒரு காலத்திலும் இல்லை! இல்லை!! இல்லை!!! என்பதுஉறுதி. கூலிக்காரன்மக்கள் கூலிக்காரர்களாகஇருக்கவேண்டியதுதான். தோட்டியின் மக்கள் தோட்டிகளாக இருக்க வேண்டியதுதான். அடிமைமக்கள் அடிமைகளாகஇருக்க வேண்டுவதுதான். கஷ்டப்படுகின்றவர்களின்மக்கள் கஷ்டப்படுகிறவர்களாகவே இருக்கவேண்டுவதுதான். இந்தநிலைமையில்எப்பொழுதும் நமதுநாடுஇருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்களா? ஒருநாளும் விரும்பமாட்டீர்கள் என்பது நமக்குத்தெரியும். ஆகையால்எதையும் ஆராய்ந்து காலத்திற்கு ஏற்ப, சௌகரியமான வைகளைப் பின்வாங்காமல் செய்யுங்கள், காலச்சக்கரம்மிகவும்வலிமையுடையது. அதனுடன். யாரும் எதிர்க்கமுடியாது. எந்தத் "தெய்வீகசத்தியும்" அதன்முன் எதிர்த்து நிற்கமுடியாது. மற்றைத்தேசங்களெல்லாம் எவ்வாறுகாலச்சக்கரத்தின் வேகத்தால்உச்சநிலைக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை அறிவுக்கண்கொண்டு பாருங்கள், நீங்களும் அந்தச்சக்கரத்தின்துணைகொண்டு நாகரிகத்தின் உச்சநிலைக்குச் செல்லுங்கள்! விரைந்துசெல்லுங்கள்! இல்லாவிடில் இந்திய சமுதாயம் அழிவுறுவதுதிண்ணம்! திண்ணம்! திண்ணம்!

மதிப்புரை.

மோகன ரஞ்சினி அல்லது சமூகத்தோற்றம்.

திருமதி. S. நீலாவதியவர்களின் அபிப்பிராயம்.

சகோதரி கிரிஜாதேவி அவர்களால் எழுதப்பட்ட "மோகன ரஞ்சனி" அல்லது சமூகத்தோற்றம் என்னும் சீர்திருத்த நாவலைப்படித்துணர்ந்து மனமிக மகிழ்ந்தேன். எனது மகிழ்ச்சிக்கு முக்கிய முதல் காரணம் அது ஓர் பெண்மணியால் எழுதப்பட்டதென்பதுவேயாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "அறிவென்பது ஆண்களுககே உரிமை" யென அறைந்து வரும் நம்புண்ணிய நாட்டில், அதற்கு. ஆணித்தரமான ஆபுக்கடாவும் முறையில்எனது சகோதரிகள் முனைந்து முன்வருதல் குறித்து யான் மகிழ்ச்சியடையாதிருப்பது யெங்ஙனம்? நமது நாட்டு மக்கள் பல திறப்பட்ட பிணிகளால் பிணைக்கப்பட்டு, சொல்லொணாத் துயர் அடைந்து வருவது பொதுவாக எல்லோரும் அறிந்ததேயாகும். ஒரு விதப்பிணியல்ல, இருவிதப் பிணியல்ல, பல்லாயிரக்கணக்கான பிணிகளால்,கட்டுப்பட்டதின் காரணமாய்ப் பல்லூழி காலம் நம் மக்கள், அறிவற்ற, மூளையற்ற, மக்களினத்தினின்றும் பிரிக்கப்பட்டு மாக்களினத்திற் சேர்க்கப்பட்ட, அடிமை வாழ்க்கையிலேயே ஆழ்ந்திருக்க நேர்ந்து விட்டது. எனவே, நமது சமூகத்தின் இழி நிலையைப் போக்கி, நன்னிலையடையச் செய்யவே, நமது சுயமரியாதை இயக்கம் சுமார் ஏழு ஆண்டுகளாகப்பாடுபட்டு வருகின்றது. சகோதரி கிரிஜாதேவி அவர்கள் சீர்திருத்தத்தில் மிக்க ஆர்வமுள்ளவரென்றே தெரியக்கிடக்கின்றது. 'சமூகத் தோற்றம்' என அந்நூலுக்கிட்ட பெயர் பொருத்தமானதென்பதே எனது அபிப்பிராயம். ஆங்காங்கு பார்ப்பனக்கொடுமையையும், சாதி வெறியின் தன்மையையும், மூட நம்பிக்கை குருட்டு எண்ணத்தின் விளைவையும் குடிப்பாச படாதிபதிகளின் குபேர வாழ்க்கையையும் எடுத்துக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது, சகோதரியார் அந்நூலில் எழுதியிருப்பது போன்று தற்சமயம் மடாதிபதிகளின் நிலைமை ஆருமானால்உண்மையிலேயே நமது நாடு இன்று பொன்னுடாய்த் திகழுமென்று துணிந்து கூறுகின்றேன். கதா நாயகி, நாயகனுன, மோகன—ரஞ்சினி, அவர்களுடைய உழைப்பு போற்றத்தக்கது மேலும் உண்மைக் காதலர்களுக்கு மூட உலகில் ஏற்படும் இன்னல்களைத் தெள்ளிதில் விளக்கிக்காட்டியிருக்கிறது. பெண்மணியால் எழுதப்பட்ட நூலாதலால், அதில் கோரியிருக்கும் பெண் சுதந்தரம், மண உரிமை, மறுமண உரிமை, கல்வி உரிமை ஆகியஇவைகளைப்பற்றியான் அதிகம்எழுத ஆசைப்படவில்லை. நாட்டு முன்னேற்றத்திற்கு, இன்றியமையாதவேண்டியது பத்திரிகைகளும், நூல்களுமாகும். சமூகத்தின்இழிநிலையைப்போக்க சமூகத்தோற்றத்தைவாசித்தறிந்துடன் மைநிலைஒழுகவேண்டியது. சகோதர சகோதரிகளின் கடமையாகும். சுருங்கக்கூறின், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளே, நமது "மோகன ரஞ்சினி" யில் பொதிந்து கிடக்கின்றது. சுயமரியாதை இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லவே பயப்படும் இச்சந்தர்ப்பத்தில் துணிந்து தனது நாவலில் சுயமரியாதைக்கொள்கைகளைப் புகுத்திய சகோதரி கிரிஜாதேவி அவர்களை மனமாரப்பாராட்டுகிறேன்.

பழைய காந்தி-புதிய காந்

1. பழைய காந்தி, தீண்டப்படாதவர்களுக்குத் தனிக்[illegible] யில் கட்டிக்கொடுக்க வேண்டு[illegible] என்றார் பழைய காந்தி.

2. வட்ட மேஜை மகாநா[illegible] சிறுபான்மையோர் கமிட்டியி[illegible] பேசுகையில் தீண்டப்படாதார்[illegible] ளுக்குத் தனித்தொகுதி கொடு[illegible] பதை என்னுயிர் உள்ள மட்டு[illegible] எதிர்ப்பேன். ஏனென்றால் ஹி[illegible] துக்களிடமிருந்து அவர்களைப் பிரிப்பதால் அவர்கள் எப்பொழு[illegible] தும் உயர்த்தப்பட மாட்டார்கள் ஆகையால் அவர்களின் நன்மை[illegible] யைக் கோரியே ஹிந்துக்க[illegible] ளிடமிருந்து பிரிக்கக் கூடா[illegible] தென்கிறார். புதியகாந்தி.

இலங்கை.

இந்திய வாலிபர் சுயமரியாதைச் சங்கம்.

கொளும்பு கொம்பெனித் தெரு, சர்ச் ஸ்ட்ரீட் 26 நெம்பர் இல்லத்தில் 11-11-31 புதன்கிழமை இரவு 9-30 மணிக்குமேற்கண்ட சங்கத்தின் மூதலாவதுகூட்டம் திருவாளர்ஞானஎட்வர்ட் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுபோது திருவாளர்கள் கே. வில்வநாதன், பி. கே. ஜேசுதாசன் பி. என். சுப்பையா, மூ. சு. சதாசிவம் ஆகியவர்கள் முறையே சுயமரியாதையும் பகுத்தறிவும், காங்கிரசின் சூழ்ச்சி, இந்தியர்களின் மூடப் பழக்க வழக்கங்கள், மதமும்ஜாதியும், என்னும் பொருளைப் பற்றி இனிய சொற் பெருக்காற்றினார்கள். பின் அக்கிராசனர் முடிவுக்குப் பின் கூட்டம் இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தமிழர் கைத்தொழில் கல்வி நிலயம்.

சிவகெங்கை.

நிலயக்கட்டிடத்தில் 18-11-31ந் தேதி மாலை 6-30 மணிக்கு ஷை நிலயத்தலைவர் தோழர். எஸ். ஆர். எம். வெங்கிடாசலம் அவர்கள் தலைமை நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர். எஸ். ராமச்சந்திரன் பி. ஏ., பி. எல்., அவர்கள் வட்டமேஜை மகாநாட்டில் ஆதிதிராவிடர் முதலிய சிறுபான்மையோர் விஷயமாக என்ன பேசப்படுகிறது என்பது பற்றி வெகு தெளிவாகப் பொதுஜனங்களுக்கு எடுத்துச்சொன்னார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பேட்மின்டன் பந்தயம்.

சேலம், செவ்வாய்ப்பேட்டை "பிகெல்கல்சர்பேட்மின்டன்கிளப்பில்" சென்னைமாகாண டபுல் ஸ்டோர்னமெண்ட் ஒன்று ஜனவரிமாதம் 3 வது வாரத்தில் நடைபெறும், விபரம் எம். பி. கந்தசாமிசெட்டி காரியதரிசி என்ற விலாசத்திற்கு எழுதிதெரிந்து கொள்ளுக.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விளைவிப்பதைக்கண்டு அவைகளும் கடூர கர்த்தாக்களாய் உண்டாயிருக்கவேண்டுமென்று தீர்மானித்தான். மனித வர்க்கம் குழந்தைப் பருவத்திலிருந்தபோது, இம்மாதிரியாக நிகழும் சம்பவங்களுக்குத்தனி கர்த்தா, பலரோ, ஒருவனோ இருக்கவேண்டுமென்று எண்ணுவது சுலபமே. இவ்விதமாக, பொருளற்ற வார்த்தைகள் உண்டாயின. 33 தேவர்களும், நொண்டி, சண்டி, சப்பூண்டிகளும், பேய் பிசாசுகளும், சிவன், விஷ்ணு, பிரமன், அல்லா, ஜுஹோவா, கடவுள், பிரமம் என்ற பதங்கள் உண்டாயின. இஃதோர் யூகை.

காட்டுமிராண்டியுகத்தில், மனிதச்செயலுக்கும்பிரகிருத செயல்களுக்கும்வித்தியாசத்தைக்கண்டு பிடிப்பது மிகக் கஷ்டம். தான் எவ்விதம் உயிருள்ளவனாக எண்ணினானோ அவ்விதமே தனக்கு அன்னியில் நிகழும்சம்பவங்களுக்கு உயிர் கொடுத்தான். கொடூர சம்பவங்களுக்குத் தனது கொடூர குணங்களை காரணகர்த்தா வாக்கினான். நன்மையான சம்பவங்களுக்கு, தன்னுடைய நற்குணங்களைக்காட்டினான். இடிஇடித்துத் தன் குடிசை நாசமானால், இடிராசனுக்கு தன் மேல் கோபமூண்டதாக எண்ணி, பயந்து வணங்கினான். பூசை, நைவேத்தியமிட்டு, தாள் பணிந்தான். இன்றைக்கும் சில காட்டுமிராண்டிகள், இடியைக் கேட்டால் கீழே விழுந்து கும்பிடுகிறார்கள். நம்மில் பலரும் இடி முழக்கத்தைக் கேட்டதும், "அர்ச்சுனா" என்று கூப்பாடு இடுகின்றார்கள். குழந்தைகளும் நடுங்குகின்றன. அதைப்போலவே, நம் முன்னோர்கள் தங்கள் புறத்தில் நடக்கும் சம்பவங்களுக்கெல்லாம் ஒரு கர்த்தாவை கற்பித்துக்கொண்டு நல்ல சம்பவமாய் இருந்தால் அதற்கு நல்ல தெய்வமெனவும், அன்புடைய கடவுளென்றும், கற்பனை செய்தார்கள். கெட்ட சம்பவங்களுக்கு கோபமுள்ள தெய்வமென்றும், கடூர தெய்வமென்றும் கற்பனை செய்தார்கள். அன்புடைய கடவுளை வாழ்த்தி போற்றுகின்றார்கள். கடூர கடவுளுக்கு காவு, பலி முதலியவை இடுகிறார்கள். இது இரண்டாவது யுக்தி. இவ்விதங்களால், ஆதியில் கடவுள் என்ற சொல் கற்பிக்கப்பட்டு வந்திருக்கலாம்.

உலகில் பேசும் பிராணி மனிதன் ஒருவனே. இந்தப் பேச்சால் மனிதன் இரண்டு உலகங்கள் படைத்துக் கொண்டான். தான் பார்க்குமுலகமொன்று, தான் பேசு முலகமொன்று, பார்க்கும் உலகம், நேர் முகவுலகம். பேசும் உலகம் மறைமுகவுலகம். இந்த உள்முகவுலகம் இரண்டு வகைத்து. காணும் பொருளைக் குறிக்கும் உலகமொன்று. பொருளற்ற கற்பனையுலகம் மற்றொன்று. இந்த கற்பனையுலகத்தைச்சேர்ந்தவை கடவுள், தெய்வம், பூதப்பிசாசுகள், நரகம், மோட்சம், நிர்வாணம், பரமண்டலம், பரமபதம், சூட்சும லோகம், சத்து, சித்து, ஆனந்த முதலியன.

காரணமொன்று இருக்க, இதனையறியாமல் கற்பித வார்த்தைகளைக்கற்பித்துக்கொண்டு, அவைகளுக்கு கோயில், குளங்கள், பூசை, நைவேத்தியம், பிரார்த்தனை, தொழுதல் முதலிய மூடப்பழக்கங்களைச்செய்துகொண்டு, இன்றும் உலகம் மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடப்பதை நோக்கில், மனித உலகம் இன்னும் குழந்தைப் பருவத்தில் ஆழ்ந்து கிடப்பதென்பதற்குச் சந்தேகம் வேண்டுமா? [தொடரும்.]

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை.

இவ்வூர் இந்து மத பாடசாலையின் 15ம் ஆண்டுவிழா 20-11-31ந் தேதி 3-மணிக்கு செங்கல்பட்டு ஜில்லாக்கல்விப் பகுதித் தலைவர் திருமிகு. ஜி எல். லோபோ அவர்கள் பி. ஏ. (Eantal) ஜே. ஏ. எஸ். தலைமையில் நடைபெற்றது. அதுகாலை சுற்றூர்களில் [illegible]யும் பல பெரியார்களும் வந்திருந்தனர். மாணவர்களது உரையாடல்களும், நடிப்புகளும், வேடிக்கைகளும் எல்லோரையும் களிபெருக் களிப்பில் ஆழ்த்தின. முடிவுரையில் முதல்வர் மிகவும் ஒழுங்காக இவ்வொரு பாடசாலை நடைபெறுகிறது எனத் தாம் மிகவும் மனமகிழ்வதாகவும், மாணவர்களது செய்கைகள் முதல்த்தரமானவையென்றும், ஆசிரியர்களது ஊக்கம் பாராட்டத்தக்கது என்றும், இப்பாடசாலைக்கு அரசாங்க நன்கொடை மிகவும் அதிகமாக அளிக்கப்படும் எனவும் பலவாறாகப்புகழ்ந்து கூறினார்கள். பள்ளிச்சாலையின் செயலாளர். திரு. வா. தி. மசிலாமணி அவர்கள் நன்றி கூறியதும் கூட்டம் கலைந்தது என ஒருநிருபர் எழுதுகிறார்.

புரோகிதமற்றதிதி.

திருவாரூர் ஆர். சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், தமது தந்தையின் திதியை புரோகிதமின்றி சுயமரியாதைக்கொள்கையின்படி சுமார்ஐம்பதுபேர்களுக்குசமபந்திபோஜனம் அளித்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

இலங்கையில் சுயமரியாதை.

சிலோன், பசறை, கோணக்கொல்லையில் உள்ள, திரு, ஜீ. எம். ராமய்யா என்பவர், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப் பிரச்சாரம்பண்ணவும், சங்கங்கள் ஸ்தாபிக்கவும்முயற்சி செய்துவருகிறார் என்பதைக்கேட்டு மகிழ்ச்சியடைகிறோம் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதுரையில் சுயமரியாதைச் சங்கம்.

திருவாளர்கள் பி, மாரியப்பன். பாவு விநாயகமூர்த்தி, வி. எஸ். வெங்கிடசாமி ஆ அ ஆறுமுகம், ஏ. வீராசாமி முதலிய பேர்கள் டிசம்பர் முதல் வாரத்தில் சுயமரியாதைச் சங்கம் ஒன்றைதிறக்க ஏற்பாடு செய்கின்றனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

இந்துமதபாடசாலை. வாலாஜாபாத்.

திருவாளர் ஊ. கன்னியப்ப உடையார் அவர்கள் தமது குழந்தைக்குபேர் வைக்கும் நிகழ்ச்சியை முன்னிட்டு இப்பாடசாலைக்கு ரூ 25 நன்கொடைஅளித்தார்கள். அவர்களுக்குதமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம் என்று பாடசாலையின் காப்பாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

விதவாவிவாஹம்.

23-11-31ல் வீரவநல்லூரில் திரு. கிருஷ்ண மூப்பனருக்கும், திருமதி முத்து மாரியம்மாளுக்கும் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டு வி. எஸ். என். சுப்பிரமணிய செட்டியார் அவர்களின் தலைமையில் சுயமரியாதை முறைப்படி விதவாவிவாஹம் நடைபெற்றது. மாப்பிள்ளைக்கு வயது 40 பெண்ணுக்குவயது 30 மாப்பிள்ளைக்கு இரண்டு ஆண்குழந்தைகளும், பெண்ணுக்கு ஒரு ஆண் குழந்தையும் இருக்கின்றன என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதை வாலிபர்சங்கம் திருப்பூர்.

29-11-31 ஞாயிற்றுக்கிழமைமாலையில். திரு. அழகர்சாமி அவர்கள்தலைமையில் ஷை சங்கம் ஸ்தாபிக்கும் பொருட்டு ஒரு கூட்டம்கூடிற்று. அதில், திருவாளர்கள், ஏ. ஆர். சாமி டீ. பி. ராமசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியன் ஆகியவர்கள் இயக்கத்தைப் பற்றிப்பிரசங்கங்கள் செய்த பின், சங்கத்திற்கு திருவாளர்கள்; டீ. ஆர். சுந்தரம் அவர்களைத் தலைவராகவும், அழகர்சாமி அவர்களை உதவித் தலைவராகவும், டீ. பி. மகாதேவ் அவர்களைக் காரியதரிசியாகவும், எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்களைப் பொக்கிஷதாரராகவும், தேர்ந்தெடுத்த பின் கூட்டம் கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதைச்சங்கம்.

திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலூக்கா, சாம்பவர்வடகரை [illegible] என்னும் கிராமத்தில் 29-11-31ல் பஞ்சாயத்துக் கோர்ட்டுத்தலைவர் ஏ. ஸ். பாண்டியன் அவர்கள் தலைமையில்கூடிய கூட்டத்தில்பலர் சுயமரியாதையைப்பற்றிப் பேசியபின் ஒருசுயமரியாதைச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு திருவாளர்கள், தே எஸ். ஞானய்யா, எஸ். எம். எம். தேவபிச்சை எஸ். பி. வைரமுத்து இவர்கள் தலைவர்களாகவும். எஸ். ஏ. கணக்கையா, என். கே. யஸ். அண்ணாமலை, ஏ. அருமைநாயகம், இவர்கள் உதவித்தலைவர்களாகவும், எஸ், சரவணை, எஸ், சுப்பையா, வி. சிதம்பரம், எஸ். பி. சற்குணம் கே. எஸ். பொன்னுசாமி, எஸ். எஸ். சிதம்பரம். வி சண்முகம். எஸ். திருமலை. வி. சுப்பையா, ஏ. சகாதேவன், வி. பி. சண்முகம், வி. சங்கரபாண்டியன், இவர்கள் கூட்டுக்காரியதரிசிகளாகவும்தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடி அரசுக்குஒரு ரூபாய் நன்கொடை அளித்துக்கூட்டம் முடிந்தது. என ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

றபீகுல் இஸ்லாம் சொஸைட்டி.

அடியக்கமங்கலத்திலுள்ள இச்சொஸைட்டியின் மாதாந்திரக்கூட்டம் தலைவர்திரு. ஸீ. நெ. அப்துல்ரஹீம் அவர்கள் தலைமையில் கூடி பினாங்கிற்குச் செல்லும் உதவிக்காரியதரிசி பஹா, முகம்மதுகனிபா அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தபின் அவருடைய ஸ்தானத்திற்கு திரு. மகமூ, முகம்மதுசுல்தான் அவர்களை தெரிந்தெடுக்கப்பட்டது என்று ஒருநிருபர் எழுதுகிறார்,

பிராமணீயம் ஒழிந்த திருமணம்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கபுரம் பிரபல ஜரிகை வியாபாரி தோழர். எம். ஜெகநாதம் அவர்களுக்கும் கடலூர் திருமதி. அங்கம்மாளுக்கும், 22-11-31ல் பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம் நடந்தது. அத்திருமணத்திற்கு பலபிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.

தூயவெள்ளை உடலுக்கானபட்டு தினசரி துவைத்து உபயோகிக்கலாம் சலவையும் செய்யலாம். ஒருவருக்கும் [illegible] உபயோகிக்கக்கூடியது. கம்பி அல்லது குண்டஞ்சுகரையுள்ளது.

	ரூ. அ.
2½ வீதி 5 முழம் பட்டு 1க்கு	1-10
டைஜன் 1க்கு	17-0
2¼ 5 முழம் பட்டு 1க்கு	1-6
டைஜன் 1க்கு	15.0
3 வீதி 8 முழம் வேஷ்டி 1க்கு	3-8

S. K. R. வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,
தென் இந்தியா.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதரபதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட் ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

மனைவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55 ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாதம் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். கல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும்உடையவர். நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன வயது 30 முதல் 40 க்குட்பட்டதாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, செட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல்வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா
C/o "குடி அரசு" ஈரோடு.

நீங்கள்

கதரின் புரட்டை உணரவேண்டுமா?

அப்படியானல்

திரு. எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்களால் தொகுக்கப்பட்ட

'கதர்-மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

லண்டன் மகாநாட்டுச் செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

சுயமரியாதைப் பொக்கிஷம்
எனும்
புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவருப்போன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், சிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

மறியலும், தேசியமும் எலக்ஷன் சூழ்ச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதாரர்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கவலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து தேற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலைசிறந்ததாகும். இதன் விலை அணா 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரல் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.